தமிழும் வைணவமும்

எம். ராதாகிருஷ்ண பிள்ளை பி. ஏ., பி. எல்.
அவர்களால் எழுதப்பட்டது

T
294.55
J6

மதராஸ் பிரீமியர் கம்பெனி
மதராஸ் 1

தமிழும் வைணவமும்

திருமால் வழிபாடு தமிழ் நாட்டில் மிகப் பழமையானதாகும். தமிழர், நிலப் பகுதியை நான்காகப் பிரித்து, முல்லை,குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று பெயர் வழங்கிய காலத்திலிருந்தே திருமால் வழிபாடும் உடன் தோன்றிவிட்டது. அகத்தியனாருடைய தலைமாணாக்கராகிய தொல்காப்பியர் நானிலங்களையும் அவற்றிற்குரிய தெய்வங்களையும்

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மை வரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனலுலகமும்
வருணன் மேய பெரு மணலுலகமும்

என்று பாகுபடுத்திக் கூறுகிறார். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற உரிப் பொருட்குரிய முறையில் கூருது அன்னார் முல்லைத் திணையை முற்பட வைத்துக் கூறியது அத்திணைக்குரிய தெய்வமான மாயோன் வழிபாட்டின் சிறப்பை யொட்டியே என்று கூறலாம். எனவே தொல்காப்பியர் இத்தெய்வங்களுள் மாயோனைத் தலைமையாகக் கொண்டனர் எனலாம். மேலும் அன்னார் காலத்தில் இத் தெய்வங்களுக்குக் கோயிலும், அவற்றில் அக்கடவுளர்களின் படிமங்களும் வைத்து வணங்கப்பட்டு வந்தனவென்றும் அறியக்கிடக்கின்றது. அப்படிமைகளமைந்த கோயில்களைக் காத்தற்கு

அரசர் முதலியோர் தம் மனையைப் பிரிந்து போதலுண் டென்றும்,

மேவிய சிறப்பினே ேனார் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தல் பிழையாதாக வேண்டியும் (அகத் 28)

தொல்காப்பியர் தமது அகத்திணை யியலில் கூறுவர்.

மன்னர்க்குத் திருமாலை யுவமை கூறும் பூவை நிலை என்னும் புறத்துறையைக் கூறுமிடத்து

மாயோன் மேஎய மன் பெருஞ்சிறப்பிற்
தாவா விழுப் புகழ் பூவை நிலையும் (அகத். 60)

என்று மன் பெருஞ் சிறப்பினையும், தாவா விழுப்புகழ் புகழினையும் மாயோற்கு ஏற்றி விசேஷித்துக் கூறுதல் அத்திருமாலின் இறைமைக் குணத்தைத் தோற்றுவிக்க வேயாம் எனலாம்.

முல்லைநில மக்களாய ஆயர் இம் மாயோனையே தங்கடவுளாக வணங்கி வந்தனர். ‘அங்கண் முல்லையின் தெய்வமென்றருந்தமிழுரைக்கும் செங்கண்மால்’ என்று சேக்கிழார் இதனைக் கூறுவர். ‘கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான், காடு வாழ் சாதியுமாகப் பெற்றான்’ என்று ஆண்டாளும் கண்ணபிரானை முல்லை நிலத் தாயனாகக் கூறுகிறாள். திணைத் தெய்வமான மாயோன் பின்னாளில் திணை கடந்த தெய்வமாக வழிபடப்பட்டு வந்தார்.

மாயோன் என்ற சொல் கரியவன் என்ற பொருளில் பயின்றது என்பர். கண்ணன, கிருஷ்ணன் என்ற சொற்களும் இவ்வாறே யாம். காவி, பூவை, காயா

ஆகிய மலர்கள் மாயன் நிறத்திற்கு உவமையாகக் கூறப்படும்

குன்றுடு கொழு முகில் போல்
குவளைகள் போல் குரை கடல் போல்
நின்றுடு கண மயில் போல்
நிறம் உடைய நெடுமால்

என்று பெரியாழ்வார் இறைவன் திருமேனியை இயற்கைக் காட்சிகளுக்கு உவமை கூறுவது படித்தின்புறத்தக்கது. இயற்கைப் பொருள்களில் ஊடுருவி நின்ற செம்பொருள் மாயோன். மாயோன், மால் என்பன ஆரியர் விஷ்ணு என வழங்கிய கடவுட்குத் தமிழர் வழங்கிய பெயர் என்பர். விஷ்ணு என்னும் சொல் எங்கும் நிறைந்தவர் எனப் பொருள் படும். இவர் இறைவன் என்பதும் இதன் பொருட்டு. இறுத்தல் என்பது தங்குதல் எனப் பொருள் படும் என்பர் அடியார்க்கு நல்லார்.

கண்ணபிரான் அவதரித்த யாதவ குலத்தினர் முதலானவர்களை அகத்தியர் தென்னாட்டுக் காடுகளில் குடியேற்றினார் என்பர். நச்சினார்க்கினியர். அவரும் (அகத்தியரும்) தென்திசைக் கண் போதுகின்றவர்—துவாரபதிப் (துவாரகாபுரி) போந்து நிலங்கடந்த நெடு முடியண்ணல் (கண்ணபிரான்) வழிக்கண் அரசர் பதின் எண்மரையும், பதின் எண் குடி வேளிர் உள்ளிட்டாரை யும், அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கி......பொதியின் கண் (பொதிய மலையில்) இருந் தனர் என்பது அவர் கூற்று. சிந்து நதிக் கரையில் திராவிடர் வாழ்ந்து வந்தனர் என்றும், ஜனத்தொகை பெருக்கவே அவர்கள் தெற்கே குடியேறினார்கள் என்

பதும் இதன் மூலம் அறியக் கிடக்கின்றது. இம் முயறசியில் ஆகத்தியர் பெரும் பங்கு எடுத்துக் கொண் டார் எனலாம். 'தென்னவன் தொல்லிசை நட்ட குடி யொடு தோன்றிய நல்லினத்தாயர்' வணங்கி வந்த முல்லை நிலக்கடவுள் பின்னாளில் திணை கடந்த தெய்வமாயிற்று.

பத்துப்பாட்டு என்னும் நூல் மிகப் பழமையானது. இது கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. அப்பாட்டினுள் பெரும்பாணாற்றுப் படையின் தலைவ னைத் தொண்டைமான் இளந்திரையன்

> இருநிலங் கடந்த திருமறு மார்பின்
> முன்னீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
> திரை தரு மரபி னுரவோ னும்பல் (29—31)

என்று திருமால் மரபிலுதித்த சோழர்களின் வழி வந்தவ னாகக் கொண்டாடப்படுகிறான். புலவர் அத்திரையனது தலைநகரான காஞ்சியைக் குறிப்பிடுமிடத்து,

> நீணிற வுருவி னெடியோன் கொப்பூழ்
> நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த்
> தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
> சுடுமண் ணோங்கிய நெடு நகர் (403—405)

என்று பிரமதேவனைப் பெற்ற திருமாலினது திருவுந்திக் கமலத்தைப் போன்று பழமையும் சிறப்பும் வாய்ந்திருந் தது அந்நகர் என்கிறார்.

> நாடு பல கழிந்த பின்றை நீடுகுலைக்
> காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந்தாங்குப்
> பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண் (371—373)

என்று அந்நகரெல்லையில் உள்ள திருவெஃகா என்னும்

திருக்கோயிலில் திருமால் பாம்பணையிற் பள்ளி கொண் டருளியுள்ள திருக்கோலத்தைப் பாடியருள்கிருர். எனவே, அப்பழங்காலத்தில் திருமாலுக்கு ஆலயம் அமைந்துள்ளமைத் தெரிய வரலாம்.

முல்லைப்பாட்டின் ஆசிரியரான நப்பூதனுர்,

நனந் தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்தமா தாங்கு தடக்கை
நீர் செல நிமிர்ந்த மா அல்

என்று கடலிடத்துள்ள நீரைப் பருகி எழுந்த கார்முகி லுக்கு, மாவலி வார்த்த நீரை வாங்கி வானளாவ வளர்ந்த கரிய திருமாலை உவமை கூறுதல் காணலாம். முல்லைக் குரிய தெய்வத்தின் சிறப்பை கொண்டு இப்பாடல் துவங்குகிறது. நிலங் கடந்த இச்செயல் அப்பழம் புலவர் களை வசீகரித்தது எனலாம்.

கணங் கொ ளவுணர் கடந்த பொலந்தார்
மாயோன் மேய வோண நன்னுள்

என்று மதுரைக் காஞ்சி ஓணவிழாவைப் பற்றி கூறு கிறது. இந்த ஓண நன்னுள் திருமால் அதிதி வயிற்றில் வாமனனுய்த் தோன்றிய நாளாகும். மகாபலி சக்கர வர்த்தி மூன்று உலகங்களையும் வென்று தன் அசுரவியல் பால் தேவர்களுக்கு இடுக்கண் விளைத்து வந்தான். திருமால் வாமனனுகத் தோன்றி அவன்பால் மூவடி மண் இரந்து வேண்டி திரிவிக்ரம மூர்த்தியாய மூவுலகங் களையும் ஈரடியால் அளந்து அவற்றைத் தன்னதாக்கிக் கொண்டான். அவனது நற்குண நற்செயல்கள் காரண மாக அவனைக் கொல்லாது பாதலத்தில் வீழ்த்தியதாகப்

புராண வரலாறுகள் கூறும். மாயோன் வாமனனுக அவதரித்த இந்த ஓண நாள் மதுரையில் சிறப்பாக ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டு வந்தது என்று மதுரைக் காஞ்சி ஆசிரியர் கூறுகிறுர். இறுதி நாளன்று, புலவர், நெடுஞ்செழியனுக்கு தெய்வ பலம் இன்றேல் பெருவலி யும் சிதைந்தொழியும் என்று அறிவுறுத்தவே வாமனன் கதையைக் கூறுகிறுர். உலகளந்த பெருஞ் செயல் சங்கப் புலவர்கள் பலரை வசீகரித்தது எனலாம். 'திருவோ ணத் திருவிழவில் அந்தியம்போதில் அறியுருவாய்' என்ற பெரியாழ்வார் பாடலும் ஓண நன்ஞளைப் பற்றிக் குறிப் பிடுகிறது.

தொகை நூல்களுள் ஒன்றுய நற்றிணையாசிரியர் பிரம்மாண்டமான ஒரு மலையையும் அதில் அருவி பாய்ந் தோடுவதையும் பார்த்தார். கரிய நிறம் பொருந்திய பாறையும் அதனிடையே வெண்மை நிறம் பொருந்திய அருவியும் திருமாலையும் பலராமனையும் அவர் கண் முன் ஞல் கொண்டு வந்து நிறுத்துகிறது.

மாயோன் அன்ன மால் வரைக் கவாஅன்
வாலி யோன் அன்ன வயங்கு வெள்ளருவி

என்பது புலவர் கூறும் உவமை நயம். இயற்கையிலே ஈசனைக் கண்டார் புலவர். இவ்வாறு, காயா மலரில், பூவைப் பூவில், நீல வானத்தில், நீலத்திரைக் கடலில், காக்கை நிறத்தில், பார்க்குமிடமெல்லாம் ஈசனைக் கண் டார்கள் புலவர்கள்.

காப்பியாற்றுக் காப்பியனுர் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்ற சேர அரசனைத் திருமால் பால்

திடபக்தி கொண்டவனாகப் போற்றுகிறார். இவ்வரசன் தன் கீழ் வாழ்வார்க்கு உண்டாகியிருந்த நடுக்கங்களை நீக்கித் திருமாலை வழிபடுதல் முதலிய நற் செயல்களில் அவர்களை ஈடுபடுத்தினான்.

குன்றுதலை மணந்து குழூஉக் கடலு டுத்த
மண் கெழு ஞாலத்து மாந்த ரொ ராங்குக்
கை சுமந்தலறும் பூசன் மாதிரத்து
நால் வேறு நனந் தலை யொருங் கெழுந் தொலிப்பத்
தெள்ளுயர் வடி மணி யெறியு நற் கல்லென
உண்ணாப் பைஞ்சிலம் பனித்துறை மண்ணி
வண்டூது பொலி தார்த் திரு ஞெம ரகலத்துக்
கண் பொரு திகிரி கமழ் குரற் றுழா அய்
அலங்கல் செல்வன் சேவடி பரவி.

பதிற்றுப்பத்து,

கடலை யாடையாக உடுத்த இப்புவியிலுள்ள மாந்தர் கைகளைத் தலை மேலேந்தி தம் குறையை எடுத்துக் கூறி வேண்டிக் கொள்ளும் ஆரவாரம் திசைகளில் ஒரு புறம் ஒலிப்ப, தெளிந்த ஓசையை யுடைய மணியை யடிப்பவர் கல்லென்னும் ஓசை பட ஆரவாரிப்ப, திருமால் கோயிலில் வரம் வேண்டி உண்ணாது கிடந்த நோன்பினர் ஒரு புறமாக குளிர்ச்சியுள்ள நீர்த் துறையில் நீராடிக் கொண்டிருந்ததாகப் புலவர் கூறுகிறார். மணியை யெறிவோர். தீர்த்தமாடுவோர் ஆடுதற்கு இது முகுத்தமென அறிந்து வருதற் பொருட்டு அம்மணியையெறிந்து ஆரவாரஞ் செய்வர்.

நீர்த் துறை படிந்த பின்னர் அப்பெரியோர்கள் திருமகள் பரவிய மார்பும், கண்களை வெறியோடச் செய்யும்

சக்கரப் படையையும் நறுமணம் வீசும் பூங்கொத்துக்களை யுடைய துளவ மாலை யணிந்த திருமாலினது பாதங் களைப் பாடிப் பணிவாராயினர். இங்கே செல்வனென்றது திருவனந்தபுரத்துத் திருமாலை யென்பர். இவ்வாறு பாகவதர்கள் வழிபடுவதை தமது கண்ணால் கண்டதாகப் புலவர் கூறுவது இவ்வழிபாட்டின் தொன்மையைக் குறிக்கும்.

செல்வக் கடுங்கோ வாழியாதன் என்று பதிற்றுப் பத்து கூறும் மற்றொரு சேர அரசனை, 'மாய வண்ணனை மனனுறப் பெற்றவனாக'க் கபிலர் போற்றுகிறார். இவ் வரசன் திருமால் பால் கொண்டுள்ள பேரன்பின் மிகுதி யால் அத்தெய்வத்திற்கு அக்கினி ஹோத்திரத்திற்குரிய நெல்லின் விளைவையுடைய ஒகந்தூரென்னும் ஊரைத் தேவதானமாகக் கொடுத்தானென்றும் கபிலர் கூறுகிறார். இவ்வாற்றால் சங்க காலத்திலிருந்தே சேர நாட்டில் திரு மால் வழிபாடு மிக்கிருந்தது என்று உணரக்கிடக்கின்றது.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரின் புற நானூற்றுப் பாடல்,

> கடல் வளர் புரிவளை புரையு மேனி
> அடல் வெந் நாஞ்சிற் பனைக் கொடியோன் (புறம்-55-3-4)

அதாவது கடற்கண்ணே வளரும் புரிந்த சங்கை யொக் கும் திரு நிறத்தையுடைய கொலையை விரும்பும் கலப்பை யையும் பனைக் கொடியை 'யுடையோனும் என்று நம்பி மூத்தப் பிரானாகிய பலராமனையும்,

> மண்ணுறு திருமணி புரையு மேனி
> விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும் (புறம் 55-5-6)

என்று, அழகிய நீலமணி போலும் திருமேனியையும் வானுற ஓங்கிய கருடக் கொடியையுமுடைய வென்றிமை விரும்புவோனாகிய கண்ணபிரானையும் போற்றுகிறது.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார்

வல்லாராயினும் வல்லுநராயினும்
புகழ்தலுற்றோர்க்கு மாயோனன்ன
உரைசால் சிறப்பிற் புகழை (57-புறம் 1-3)

எடுத்தோதுகிறார். வல்லவர்க்கும் மாட்டார்க்கும் ஒப்பப் புகழ்ந்து முடிய வொண்ணுமையைக் கூறுகிறார். யாதொரு கல்வியை மாட்டாராயினும் அதனை வல்லாரா யினும் புகழ்தலைப் பொருந்தியவர்கட்கு மாயோனை யொத்த சொல்லுதலையமைந்த தலைமையையுடைய புகழ் என்பது பழைய உரை. புகழின் எல்லைக்கு மாயோன் உவமானமாகப் பழம் புலவர்களால் கருதப்பட்டமை ஈண்டு விளங்கும்.

சோழன் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவள வனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெரு வழுதியும் ஒருங்கிருந்த காட்சியைக் காரிக் கண்ணனார் பார்த்தார்.

பானிற வுருவிற் பனைக் கொடியோனும்
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிரு பெருந் தெய்வமு முடனின் றாஅங்
குரு கெழு தோற்றம் (புறம்-58-14-17)

அதாவது, பால்போலும் நிறத்தையுடைய பனைக் கொடியை யுடையோனும் நீல நிறம் போலும் திரு மேனியையுடைய ஆழியையுடையோனுமென்று சொல்

லப்படும் இரண்டு பெரிய தெய்வமும் ஒருங்கு நின்ருர் போல அக்காட்சி யவருக்குத் தோற்றமளித்தது. சங்க காலத்தில் கண்ணபிரானை அப்பிரானது தமையனுரான பலதேவருடன் சேரவணங்கிச் சிறப்பித்து வந்தனர். திரு மாலிருஞ் சோலைமலையில் கண்ணபிரான் பலதேவர் ஆகி யோரது திருவுருவங்கள் சேரவிருந்தன என்று பரிபாடல் 15-ம் பாடல் கூறும். இவர்களை சங்கர்ஷண வாசுதேவர் என்று வட நூல்கள் கூறுகின்றன. இத்தகைய கோயில் கள் பிற்காலத்தில் அருகிவிட்டன. திருநறையூர் என்ற நாச்சியார் கோயிலில் சங்கர்ஷண வாசுதேவ, பிரத்யும்ந, அநிருத்தர்களோடும், நப்பின்னையோடும் எம்பெருமான் காட்சியளிப்பர்.

மாறேக்கத்து நப்பசலையார் மற்றைய நூல்களில் காணப்படாத மாயனது திருவிளையாடலொன்றை புற நானூறு 174-ம் பாடலில் கூறுவர்,

> அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
> சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணு
> திருள் கண் கெடுத்த பருதி ஞாலத்
> திடும்பை கொள் பருவர றீரக் கடுந்திறல்
> அஞ்சன வுருவன் றந்து நிறுத்தாங்
>
> (புறம் 174-1-5)

என்று தேவர்களும் அசுரர்களும் பொருதபொழுது, பகலும் இராப்போல் இயங்கித் தாம் போர் செய்தற் பொருட்டு அசுரர் ஞாயிற்றைக் கவர்ந்தார்கள். ஞாயிற் றைக்காணுமையால் இருளானது உலகத்தாரது கண்ணை மறைத்தது. இதனுல் உலகம் நோய் கொண்டு துன் புற்றது. மிக்க வலிமை கொண்ட அஞ்சனம் போலும்

நிறத்தையுடைய திருமேனியை யுடைய கண்ணன் அந்த ஞாயிற்றைக் கொண்டுவந்து இவ்வுலகத்தின்கண் அந்தகாரம் நீங்க ஆகாயத்தின்கண் நிறுத்தினுன் என்பது இப் பாட்டில் கண்ட வரலாறு. இப்புலவர் காலத்தில் இவ்வரலாறு வழக்கிலிருந்ததெனவறியக் கிடக்கின்றது.

'ஆலமர் கடவுளன்னநின் செல்வம்' (புறம் 198-9)

என்றும்

'கடவுளாலத்துத் தடவுகிளைப் பல்பழம் (புறம் 199-1)

என்றும் வரும் தொடர்கள் திருமால் ஆலிலையில் பொருந்திய வரலாற்றைக் கூறும்.

கடுந்தேரிராமன் உடன் புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப் பொலிந்தா அங்கு
அறுஅ அருநகை (புறம். 378. 18-24)

என்று இராமாயணச் செய்தி யொன்றை ஊன் பொதிப் பசுங்குடையார் பாடியுள்ளார். சீதையை இராவணன் அபகரித்துச் சென்றபோது, பிராட்டி இடைவழியில் போட்ட நகைகளை வானரங்கள் கண்டெடுத்து அவற்றை யணியுமுறை யறியாமல் காலிலும் கையிலு மாறி மாறி அணிந்துகொண்ட வரலாறு இங்கே கூறப்படுகிறது. இராமாயண கதையும் சங்க காலத்தில் புலவர்களிடையே விரவிப் பரந்துள்ளதை இவற்ருல் உணரலாம்.

இராமன் இலங்கைமேற் செல்லுதற் பொருட்டு தனுஷ்கோடி கடற்கரையிலுள்ள ஆலமரத்தின் கீழ தமக்குத் துணைபோந்த வானர வீரர்களோடு யுத்த

காரியங்களைப்பற்றி ஆலோசித்திருந்தனனென்றும், அப்போது அவ்வாலமரத்தில் வாழ்ந்த பறவைகளின் ஓசை அதிகமாகி ஒருவர் கூறுவது மற்றவர்க்குக் கேளாதவாறு இடையூராக நிற்க, பெருமான் அங்குள்ள பறவைகள் ஒலிக்காதவாறு தம் ஆணையால் அடக்கினரென்றும் கடுவன் மள்ளனூர் என்ற புலவர் அகநானூற்றுப் பாட்டொன்றில் கூறுகிறார். பாடல் பின் வருமாறு,

வென் வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு மூன்றுறை
வெல் போரிராமன் அருமறைக் கவித்த
பல் வீழாலம் போல
ஒலிய விந்தன்றாலிவ் (அகம். 70. 13-17)

இவ்வாறு இராமாயணக் கதைகளை யொட்டிய செய்திகள் சங்கப் புலவர்கள் வாக்கில் காணப்படுகின்றன. பாகவத புராண வரலாறொன்றும் அகநானூற்றில் காணப்படுகிறது. இப்பாட்டின் ஆசிரியர் மதுரை மருதனிள நாகனார்

வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை
அண்ட மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ் செல மிதித்த மாஅல் போல (அகம். 59. 4-6)

என்பது பாட்டு. நீர்வளம் அறாத யமுனை யாற்றின் நெடிய மணலையுடைய அகன்ற துறையில் நீராடிய ஆயர் மகளிர் தண்ணிய தழையை உடுத்திக்கொள்ள குருந்த மரம் வளைந்திட மிதித்துத் தந்த கண்ணன்போல என்பது பாட்டின் பொருள்.

ஆயர் பெண்கள் குளியா நின்றார்களாக, அவர் இட்டு வைத்த துகிலெல்லாம் பின்னை எடுத்துக் கொண்டு (கண்ணன்) விளையாட்டாகக் குருந்த மரத்து ஏறினாராக, அவ்வளவில் நம்பி மூத்தபிரான் (பலராமன்) வந்தாராக, அப்பெண்களுக்கு கூட மறைதற்கு மற்றொரு வழியின்மையின் ஏறி நின்ற குருந்த மரத்துக் கொம்பைத் தாழ்த்துக் கொடுத்தார். அதற்குள் அடங்கி மறைவாராக என்பது இப்பாட்டின் பழைய உரை. கோவியர் துகில்களைக் கவர்ந்த கண்ணபிரான், எதிர்பாரா வகையில் அங்கே பலராமன் வந்துவிட, அம்மகளிர் மானத்தைக் காத்துக் கொள்ளுதற் பொருட்டு மரத்தை வளைத்துக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

வினை முடித்து வருவேன் என்று கூறிவிட்டுச் சென்ற காதலர் வரவில்லை. கார்காலம் தொடங்கி மழை பொழிகிறது. ஆலங்கானத்துப் போரை வென்று உயர்த்த வேற் படைகளைக் காட்டிலும் பன்முறை மின்னி, கரிய பெரிய வானினிடத்து முரசம் என இடி இடிக்கிறது. இதற்குப் புலவர் ஆலம்பேரி சாத்தனார் ஓர் உவமை கூறுகிறார்.

> நேர் கதிர் நிரைத்த நேமியஞ் செல்வன்
> போரடங் கலகம் பொருந்திய தார் போல்
> திருவில் தேஎத்துக் குலைஇ (அகம் 175: 15-16)

நிரம்பிய கதிர்களின் ஒழுங்கினைக் கொண்ட ஆழியை யுடைய திருமாலின், பகைவர் போர் ஒழிதற்குக் காரணமான மார்பினிடத்தே தங்கிய மாலைபோல என்று கரியவானுக்கு நேமியஞ் செல்வனது மார்பும்,

அவ்வானிற்ருேன்றிய வில்லுக்கு அவ்வகலத்தில் பொருந் திய தாரும் உவமமாகக் கூறுகிருர்.

மாலைப் பொழுதில், மதுரைக் கண்ணத்தனர் கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தார். வானம் அந்திப் பொழுதில் செந்நிறங் கொண்டு சிவந்து தோன்று கிறது. பரந்த சமுத்திரமோ தன்னியல்பான நீல நிறத் தோடு அழகுற விளங்குகிறது. நீலக்கடலும் அந்திவான மும் ஒன்ருேடொன்று பொருந்தியுள்ள தோற்றம் புலவ ருக்குச் சிவபெருமானும், திருமாலும் சேரச் சேர்ந்த தோற்றம் போல் காட்சி யளிக்கிறது. அவர் கண்ட கற்பனைக்காட்சியிது.

இரு பெருந் தெய் வத்து
உரு உடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வான மொடு கடல் அணிகொளா அ
வந்த மாலை அகம். 360

சிவன், திருமால் ஆகிய தமிழரது இரு பெருந் தெய்வங்களின் நிறங்களை உவமையாக வைத்து கடற் கரையின் அந்திக் காட்சி வருணிக்கப்படுகிறது.

வந்துதைத்த வெண் திரைகள்
செம்பவள வெண் முத்தம்
அந்தி விளக்கும் அணி விளக்காம்

என்று பேயாழ்வார் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் சூரியாஸ்தமனத்தைப் பார்த்தார். மாலையின் மோகன வெளிச்சத்திலே கடலலைகள் மோதும் போது அவை சிவந்த பவழங்களும்: முத்தங்களும் கடற்கரையில் கொழிப்பதுபோல் காண்கிறது. வெவ்வேறு காலத்தில்

வாழ்ந்த இரு பெரும் புலவர்களின் கற்பனு சக்தியை நாம் காலங் கடந்து கண்டு மகிழ்கிறோம்.

இரு சில மன்னர் தம்மை யிருநாலு மெட்டும்
ஒரு நாலு மொன்று முடனே
செரு நுதலோடு போகியவராவி மங்க
மழுவாணில் வென்ற திறலோன்

என்று திருமாலின் அவதார மூர்த்தியான பரசுராமரைப் போற்றுகிறார் திருமங்கை மன்னன். அகநானூற்றில் இப்பரசுராமரைப் பற்றிய வரலொன்று கூறப்படுகிறது. இவர் செல்லூரில் ஒரு பெரு வேள்வி செய்தாரென்றும், அவ்வேள்விக் கயிற்றின் மத்தியில் கட்டப்பட்ட அரிய காவலையுடைய தூணை ஒருவரும் காண முடியாதென்றுங் கூறுவர். தமது தந்தையாகிய ஜமதக்னி முனிவரைக் கார்த்த வீரியார்ச்சுனன் கொன்றமையால் இவர் அவன் வழிப் போந்த இருபத்தொரு தலைமுறை அரசர்களைப் பழி வாங்கிக் கொன்றார். இந்த வரலாற்றை ஒட்டியே அகநானூறு இவரை,

மன்மருங் கறுத்த மழுவா ளெடி யோன்
முன் முயன் றரிதினின் முடிந்த வேள்வி

என்று கூறும்.

கற்றறிந்தாரேத்துங் கலித் தொகை தேன் செறிந்த மொழிகளானும் தெள்ளிய உருவகங்களாலு மியன்று கற்றோர் கருத்தைக் கவர்வதாவது இந்நூலில் கண்ண பிரானது பாலசரிதையின செயல்கள் கூறப்படுகின்றன.

மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்ப் பகுத்திட்டு புடைத்த ஞான்றின் னன்கொன்
மாயோ னென்று. (முல்லைக் கலி, 103—50-53)

கஞ்சன் தன் மேல் வரவிடுத்த, கழுத்தில் மயிரினை யுடைய கேசியென்னும் குதிரையின் வாயைப் பிளந்து அது இறந்து வீழ கையால் அடித்த கண்ணனுடைய வீரத்தை உவமை கூறுகிறார் சோழன் நல்லுருத்திரனார்.

> அஞ்சீரசை யியல் கூந்தற் கை நீட்டியா
> னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவேட் டன்
> வஞ்சினம் வாய்த்தான் (முல்லைக்கலி. 1—81-20)

என்று, அழகிய தலைமையினை யுடைய மனமசைந்த இயல்பினை யுடையளாகிய துரோபதையது துய்ய கூந்தலிலே கையை நீட்டிய துச்சாதனனுடைய நெஞ்சைப் பிளந்து போகட்டுப் பகைவர் நடுவே தான் சொன்ன வஞ்சினத்தை வாய்க்கச் செய்த வீமனது வீரத்தை அப் புலவர் பெருமான் கூறுகிறார்,

> 'ஞாலத்தை மூன்றடித் தாய முதல்வற்கு'
> நெய்தற் கலி—214-1

என்று உலக மூன்றையும் தன் திருவடியாலே அளந்த எப்பொருட்கும் அடியாயிருக்கின்றவன் எனவும்,

> மல்லரை மறஞ் சாய்த்த மலர்த் தண்டா ரகலத்தோ
> னெல்லா தாருடன் றேட வுருத்துட னெறிதலிற்
> கொல் யானை யணிநுத லழுத்திய வாழி போற்
> (நெய்தற் கலி—134-1-3)

பகையாய் வந்த மல்லரை மறத்தைக் கெடுத்த, அலர்ந்த தண்ணிய தாரை யணிந்த திருமார்பை யுடைய மாயவன் தன் பகைவர் எல்லாருஞ் சேரவந்து உருத்துத் தன்னை எறிகையினாலே, அவரை உடன்று அவர் ஓடும்படியாக அவர் கொல் யானையினது அழகினையுடைய மத்தகத்

திலே சக்கரப் படையை அழுத்தியவன் எனவும் நெய்தற் கலி மாயன் புகழினை எழுத்தோவியத்தால் திகழ வைக் கிறது.

பரிபாடல்

பரிபாடல் என்னும் பாவினுல் தொகுக்கப்பட்டுத் தெய்வமும் காமமும் பொருளாகக் கொண்டு பேரின்ப மும் சிற்றின்பமும் ஆக இருவகைப் பகுதிகளையும் கூறுத லால் 'இதனை 'ஓங்கு பரிபாடல்' என்றனர் ஆன்ருேர். இவற்றிற்கு பழமையாகவே பண்கள் வகுக்கப்பட்டிருக் கின்றன. எனவே, இசையோடும் இவை பாட வல்லன எனலாம்.

'திருமாற் கிரு நான்கு' என்று கூறப்பட்ட பரி பாடல்களுள் இப்பொழுது ஏழு பாடல்கள் அச்சில் வந் துள்ளன. இவற்றுள் திருமாலுக்குரிய பதினைந்தாம் பாட்டைப் பாடியவர் இளம் பெருவழுதியார் என்பவர். இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவராவர். இப்பாடலில் புலவர் இருங்குன்றம் என்ற திருமாலிருஞ்சோலை மலை யைப் பற்றிக் கூறுகிருர்.

உலகில் மலைகள் பல உள. அவற்றுள் மக்களுக்குப் பயன் அளிக்குங் குன்றுகள் மிகச் சிலவே. அவற்றுள் ளும் தெய்வங்கள் விரும்பி யுறையுங் குன்றுகள் இன்னும் மிகச் சிலவே. அக்குலவரைகள் சிலவற்றுள் ளும் கல்லென அறையும் கடலும் கானலும் போல வேறு வேருகிய நிறத்தினையும் பிரிவில்லாத சொல்லும் பொரு ளும் போல வேறுபடாத தெழிலினையுமுடைய மாயோனை யும் தம் முன்னேனையுந் தாங்கும் நீண்ட நிலைமையி

னுடைய புகழான் உயர்ந்த இருங்குன்றம் சிறந்தது. திருமால் அருள் புரியாமல் துறக்கம் எய்த வல்லதோ? எனவே அரிதிற் பெருந் துறக்கத்தை எளிதில் பெறச் செய்வதனுல் திருமாலிருஞ் சோலையை வழிபடுவோமாக என்கிருர்.

அலங்கு மருவி யார்த்திமிழ் பிழியச்
சிலம்பா றணிந் தசீர் கெழு திருவிற்
சோலை யொடு தொடர் மொழி மாலிருங் குன்றம்

அசையு மருவி மிக ஆர்த்து இழிதலாற் சிலம்பாறு அழகு செய்த இவ்வியக்கத் தக்க இருங் குன்றத்து அழகு பொருந்திய திருவென்னும் சொல்லோடும் சோலையென்னுஞ் சொல்லோடும் மாலிருங் குன்ற மென்னுஞ் சொல் தொடர்ந்த மொழியாகிய திருமாலிருஞ் சோலை மலையில் இயற்கைக் காட்சிகளுக்கிடையில்

பொன்புனை யுடுக்கை யோன் புணர்ந்தமர் நிலையே
நினை மின் மாந்தீர் கேண் மின்

பலதேவரோடு பீதாம்பரத்தை அணிந்த திருமால் நிற்கும் நிலைமையை மாந்தர்களே தியானம் செய்யக் கடவீராக.

'சென்று தொழு கல்லீர் கண்டு பணி மின்மே'

சென்று தொழமாட்டாதீர் அம்மலையைக் கண்டேனும் பணிமின்,

தைய லவரொடுந் தக்கா ரவரொடுஞ்
சைம் மகவ ரொடுங் காதலவ ரொடுந்
தெய்வம் பேணித் திசை தொழு தனிர்

அக்குன்றத்தைத் தெய்வமாக மதித்துத் திசை நோக்கித் தொழுமின்,

எவ்வயின் உலகத்துத் தோன்றியவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்

எல்லா உலகினும் வெளிப்பட்டு அவ்விடத்து உயிர்களை மறுக்கஞ் செய்யும் பிறவித் துன்பத்தைக் களைகின்றவன்.

நலம் புரீ இயஞ்சீர் நாம வாய் மொழி
இதுவென வுரைத்தனெ முள்ளமர்ந் திசைத் திறை
இருங் குன்றத் தடியுறை யியை கெனப்
பெரும் பெயரிருவரைப் பரவுதுந் தொழுதே

வேதம் தனக்கு நன்மையை விரும்பி அவர் பெருமையை ஈதென்று சொல்லுதலால் யாமும் உள்ளன்போடு அவை கூறுமவற்றுள் தெரிந்தவற்றைக் கூறி அவ்விருவரையுந் தொழுவோமாக.

இளம் பெரு வழுதியார் காலத்தில் பல தேவ ரோடு கண்ணபிரான் திருமாலிருஞ் சோலையில் கோயில் கொண்டிருந்தனர் என அறிகிறோம். ஆனால் ஆழ்வார் கள் காலத்தில் திருமால் தனியே கோயில் கொண்டிருந்த தாகத்தான் கூறப்படுகிறது. இப்பாண்டிய குலத் தோன்றல் ஆழ்வார்களளவு ஆர்வத்தோடு குழைந்து பாடுவது படித்தின்புறத் தக்கது. பரிபாடல் காலத்தி லேயே வைதிக முறைக்கேற்பவும், வைணவ ஆகம முறைக்கேற்பவும் திருமால் கோயில்களில் வழிபாடுகள் நடந்து வந்தன எனலாம்.

கடுவனிள வெயினர் என்னும் புலவர்

செங்கட் காரி கருங்கண் வெள்ளை
பொன் கட் பச்சை பைங்கண் மா அல்

என்று திருமாலின் நால் வகை வியூகத்தைக் கூறுகிறார்.

செங்கட்காரி என்பது வாசுதேவனை, கருங்கண் வெள்ளை என்பது சங்கருடணனை, பொன்கட் பச்சை என்பது சிவந்த உடம்பினை யுடைய காமனை, பைங்கண் மால் என்றது பசிய உடம்பினையுடைய அநிருத்தனை.

திருமாலின் விபவ மூர்த்திகளைப் பற்றி சங்க நூல்களில் விரிவாகக் கூறுபவர் இவரே.

சேவடி தொழாரு முளரோ வவற்றுட்
கீழேழுலக முற்ற வடியினை (3—19-20)

என்று உலகை அளக்கின்ற காலத்து மூவேழுலகினுட் கீழவாகிய ஏழுலகத்தையும் எஞ்சாமலுற்ற அடியினை யுடையை எனக் கூறி திரிவிக்ரமாவதாரத்தைக் குறிப்பிடுகிறார்.

மண்ணுலகமும் விண்ணுலகமும் பிரளய காலத்தின் வெள்ளத்தில் அணுவாகக் கரைந்து பலவூழி காலங் கழித்து மறுபடியும் தோன்ற உயிர்கள் உண்டாகும் பொருட்டு திருமால் பன்றி வடிவங் கொண்டு நீரில் மூழ்கிக் கிடந்த நிலவுலகினை மேலே கொண்டு வந்த வரலாற்றைக் குறிப்பிடுகிறார்.

வளர் திரை மண்ணிய கிளர் பொறி நாப் பண்
வைவான் மறுப்பிற் களிறு மணனயர்பு (2—33-34)

கோல வராகமாய் கோட்டிடை பூமியை காத்ததனால் இப்பூமிக்கு வராக கல்பம் எனப் பெயருண்டாயிற்று என்கிறார்.

செயிர் தீர் செங்கட் செல்வ நிற் புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்
பிருங்கலாதன் பல பல பிணி பட

வலந்துழி, மலர்ந்த நோய் கூர் கூம்பிய நடுக்கத்
தவர்ந்த புகழோன் ருதையாகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சினனாக நீ யிகழா
நன்று நட்டவவ னன் மார்பு முயங்கி
ஒன்று நட்டவ னுறு வரை மார்பிற்
படி மதஞ் சாம்ப ஒதுங்கி
இன்ன வின்ன ரொடிடி முர சியம்ப
வெடி படா வொடி தூட் டடியொடு
தடி தடி பலபட வகிர் வாய்த்த உகிரினை (4—10-21)

பிரகலாதன் நின்னைப் புகழ அதனைப் பொருத இரணியன் பொங்கி வந்த சீற்றத்தால் அவனைப் பல பல பிணிகள் பட பிணித்து வருத்த அதனால் ஒடுங்கி நடுக்கமடைந்த காலத்திலும் தன் தந்தை யென்றதனால் அவனை இகழா திருக்க, திருமால் இரணியனைக் கொல்லுதற்கு அவன் நெஞ்சு பொறுக்கும் வண்ணம் அப்பிரகலாதன் நெஞ்சுள் புகுந்து நின்று இரணியன் மார்பினைப் பிளந்தார் என்ற வரலாறு கூறப்படுகிறது. மோகினி வடிவம் பூண்டு அவுணர்களை மயக்கியே மாற்றி தேவர்களுக்கு அமுதம் அளித்த வரலாறும் கூறுகிறார்.

நகையச்சாக நல்லமிர்து கலந்த
நடுவு நிலை திறம்பிய நலமி லொரு கை (3—33-34)

வேதங்களால் திருமால் பாராட்டப் பெறுவதை

மாயா வாய் மொழி யுரை தர வலந்து
வாய் மொழி யோடை மலர்ந்த
தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும்
நீ யென மொழியு மாலந்தண ரரு மறை (3—11-14)

என்று கூறுகிறார்.

முதன் முறை யிடை முறை கடை முறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித் தோரிலையே
(8—71-12)

உலகில் முதலினும் இடையினும் இறுதியினும் படைப்பு அளிப்பு அழிப்பு என்னுந் தொழில் வேற்றுமை பற்றிப் பிறவாப் பிறப்புடையை யல்லை; அங்ஙனம் பிறந்து வைத்தும் பிறப்பித்தோரை யுடையை யல்லை என்று கூறுகிறுர்.

நினக்கு மாற்ருேரும் மிலர் கேளிரு மில ரெனும்
வேற்றுமை யின்றது போற்று நர் பெரினே.
(4—53-45)

என்றவிடத்து உயிர்களின் இயல்பால் இறைவனுக்குப் பகையும் நட்பும் உளபோலத் தோன்றுவதன்றி அவனி யல்பால் அவையுளவல்ல என்ருர்.

பரிபாடலின் இரண்டாம் பாடலைப் பாடியவர் கீரந் தையார் என்பவர். இவர் பலதேவனும் திருமாலும் ஒருவரே யென்று கூறுவர்.

நீயே வளையொரு புரையும் வாலியோர்க் கவன்
இணைய னென போர்க் கிளையை யாதலும்
புதை யிரு ளுடுக்கைப் பொலம் பனைக் கொடியோற்கு
முதியை யென்போர்க்கு முதுமை தோன்றலும்
பரிபாடல் (2—20—23)

"நீ வாலியோர்க்கு அவனிளைய னென்று கூறு வோர்க்குப் பிறப்பு முறையால் இளையையாகலும், எல்லாப் பொருள்களையும் மறைக்கும் இருள் போலும் உடுக்கையை யுடைய பனைக் கொடியோர்க்கு வாசு தேவ மூர்த்தியாகிய நின் கண் சிறப்பு முறையான்

முதியை யென்போர்க்கு முதுமையஞகத் தோன்றுவை' என்று கூறுகிருர்.

குருகு பறியா நீளிரும் பனை மிசைப்
பல பதிஞயிரங் குலை தரையுதிர்வ போல்
நில்லா தொரு முறை கொய்பு கூடி
ஒருங் குருண்டு பிளந்து நெரிந்துருள் புசிதறு
பளறு சொரிபு நிலஞ் சேரச்
சேரா ரின்ஞுயிர் செகுக்கும்
போரடு குருசினீ யேந்திய படையே

(பரி. 2—43-49)

என்று திருமாலின் ஆழிப்படை அவுணர்களின் தலைகளைப் பனங்காய்கள் போல அற்று கீழே விழச் செய்து நிலத்தைக் குருதியாற் சேராக்கும் என்கிருர்.

.......................நின்னடி
தலையுற வணங்கினேம் பன் மாண் யாமும்
கலியி னெஞ்சினே மேத்தினேம் வாழ்த்தினேம்
கடும் பொடும் கடும் பொடும் பரவுதும்
கொடும் பாடறியற்க வெம்மறி வெனவே

(பரி. 2—72-76)

நின் அடியைத் துளக்கமில் நெஞ்சினேமாய் வணங்கிப் பலகாலம் ஏத்தி வாழ்த்தி வேண்டுகிருேம். எம்முடைய அறிவு கொடும்பாடு அறியாமல் எமக்கு மெய்யுணர்வே உண்டாக அருள் பாலிக்க வேண்டும் என்று பாட்டை முடிக்கிருர் கீரந்தையார்.

முதலாவதான கடவுள் வாழ்த்தான பாடலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இறைவனுடைய செயல்

களை அறிதற்கு மயக்கம் நீங்கிய ஞானிகட்கும் அறி தாகும் என்கிறார் அவர்.

> இலங்கு பூண் மா அல் தெருள நின் வரவு அறிதல்
> மருளறு தேர்ச்சி முனைவர்க்கு மரிதே
> (பரி. 1—29-30)

'நின்னை இன்ன னென்றுரைத்த லெமக்கெவ னெளிது' என்று கூறி நாம் நின் பால் கூறும் இவற் றைப் பொருளற்றவை என்று கொள்ளாமல் அருள் புரிய வேண்டு மென்கிறார்.

> 'திருமறு மார்ப நீ யருளல் வேண்டும்'

என்பதால் புருஷாகார பூதையான பிராட்டியை முன் னிட்டு ஆஸ்ரயித்தனர் எனலாம்.

> இன்னோ ரனையை யினையை யாலென
> அன்னோர் யாமிவட் காணா மையிற்

என்று இறையவனோடு ஒப்பவர் காணப்படாமையின் இன்னவரை ஒத்தவனென்று உவமானத்தாற் கூற முடியாமையையும், இறைவன் இத்தன்மையன் என்று கூறவல்லவரும் கிடைக்காமையின் அவனே அவனுக்கு ஒப்பாக விளங்குபவனாவான் எனக் கூறுகிறார்.

> 'ஒத்தார் மிக்கார் இலையாய மாமாயா'

என்கிறார் நம்மாழ்வார்.

> 'ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்'

என்று கூறிமுடிக்கிறார்.

நல்லெழுநியார் என்கிற புலவர் திருமாலின் பரத் வத்தை விளக்குகிறார்; சுவை, ஊறு, ஒளி, தோற்றம், நாற்றம் எல்லாம் அவனே.

ஒன்றினிர் போற்றிய விசும்பும் நீயே
இரண்டின் உணரும் வளியும் நீயே
மூன்றின் உணருந் தீயும் நீயே
நான்கின் உணரும் நீரும் நீயே
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே

(பரி. 13—18-22)

புலன் களைந்தனுள் ஒன்ருன ஓசையா லறியப்பட்ட ஆகாயம், ஓசை, ஊறு ஆகிய இரண்டாலறியப்பட்ட காற்று, ஓசை, ஊறு, ஒளி ஆகிய மூன்ருலும் அறியப் பட்ட தீ, ஓசை, ஊறு, ஒளி, சுவை என்ற நான்காலும் அறியப்பட்ட நீர், ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்தாலும் அறியப்பட்ட நிலமும் இறைவனுன திருமாலே யாகுமென்கிருர்.

முடிந்தது, முடிவது, முகிழ்ப்பது மவை மூன்றும்
கடந்தவை யமைந்த கழலினி ழலவை

(பரி. 13—46-47)

என்று தோன்றியது, தோன்றுவது, தோன்ரு நின்றது மாகிய காலக் கூறுபாடுகளைக் கடந்து அவை தாம் பொருந்திய தாள் நிழலையுடையை என்று போற்றுகிருர்.

'அன்னையென நினைஇ நின்னடி தொழுதனெம்'

என்று கூறிப் பாட்டை முடிக்கிருர்.

பண்டையுரை யாசிரியர் காட்டிய மேற்கோள்களி லிருந்து அறியவரும் பரிபாட லொன்றில் இருந்தையூரில் கோயில் கொண்டருளியிருந்த திருமாலைப் பற்றிய சில குறிப்புகள் கிடைக்கின்றன.

நான் மாடக் கூடல் எதிர் கொள்ள வாரு
மருந்தாகும் தீ நீர் மலி துறை மேய

இருந்தையூர் அமர்ந்த செல்வ நின்
திருந்தடி தலையுறப் பரவுதுந் தொழுது

என்று வைகைக் கரையில் உள்ள இருந்தவளமுடையார் கோயிலைப்பற்றி இப்பரிபாடல் கூறும். இப்பொழுது மதுரையிலுள்ள கூடலழகப் பெருமான் கோயிலே இது என்பர் ஆராய்ச்சியாளர். 'வையைத் திருமால்' என்று சிலப்பதிகாரம் கூறும் சந்நிதியும் இதுவே யென்பர்.

பதினெண் கிழக்கு நூல்களுள் தலைசிறந்த நூலாகக் கருதப்படுவது 'முப்பால்' என்னும் திருக்குறள். இந்நூல் எல்லோர் வாழ்வோடும் ஒட்டி அனைவர்க்கும் இன்பம் பயப்பதாகப் பொது நூலாகத் திகழ்கிறது. 'தேவிற் றிருமால் எனச் சிறந்ததென்பவே பாவிற்கு வள்ளுவர் வெண்பா' என்று கவிசாகரப் பெருந்தேவனார் தேவர்களுக்குள் திருமால் சிறந்தவர் என்பது போல் பாவில் வள்ளுவர் வெண்பா சிறந்தது என்கிறார்.

மாலுங் குறளுருவாய் வளர்ந் திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந் தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தம் குறள் வெண்பா வடியால் வையத்தார்
உள்ளுவ வெல்லா மளந்தார் ஓர்ந்து

என்று திருக் குறளைத் திருமாலோடு ஒப்பிடுகிறார் பரணர் என்னும் புலவர். திருமால் தம் திருவடிகள் இரண்டாலும் புறத்தே தோன்றும் உலகத்தை அளந்ததுபோலத் திருக்குறள் தன் அடி இரண்டாலும் மக்களின் அகத்தே தோன்றுவனவற்றை யெல்லாம் அளந்தது என்பது பாட்டின் கருத்தாகும். சிவப்பிரகாச சுவாமிகள் இவ்வாறே திருக்குறளுக்கும் திருமாலுக்கும் ஒப்புகூறு

மிடத்து, திருவள்ளுவர் ஒரு பொருளை வற்புறுத்தும் பொருட்டு பத்து முறை கூறியது போலத் திருமால் ஒரு கருத்தை வற்புறுத்த பத்து அவதார மெடுத்தா ரென்பர்.

'ஆதிபகவன் முதற்றே யுலகு' என்ற குறளால் ஆதிபகவனை உலகம் முதலாக உடைத்து எனக் கூறி, பின்னர் உலகம் லீலா விபூதி, நித்திய விபூதி என்று இரு வகைப்படுதலின்,

மடி யிலா மன்னவன் எய்தும் அடிய ளந்தான்
தா அய தெல்லாம் ஒருங்கு (610)

என்று தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதையும் அவனுக்குரிய லீலா விபூதி என்றும்,

தாம் வீழ்வார் மென்றோட் டுயிலினிது கொல்
தாமரைக் கண்ணானுலகு (1103)

என்று தவயோகிகள் எய்தும் செங்கண் மாலுலகம் நித்திய (நிரதிசய இன்பம்) விபூதி என்றும் இவ்விரு விபூதிகட்கும் தனியிறைமை அத்திருமாற்கே உரியதென்னுங் கொள்கை யுடையவரே வள்ளுவர் என்பர். சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிச் சென்ற வள்ளுவர் பிறமதக் கடவுளரெவரையும் தம் நூலில் குறிக்காத நிலையில் திருமாலுலகத்தைக் கூறுவதால் அப்பெருந் தகையாருக்கு வைணவ சமயக் கொள்கைகளும் உடன் பாடாமெனலாம். வள்ளுவரைப் பின் பற்றியே நம்மாழ்வாரும் இறைவனை 'அந்தமில் ஆதியம் பகவன்' என்றும், 'மன்னக மலமற மலர்மிசை யெழு

தரும்' என்றும், 'கொள்கை கொளாமை இலாதான்' என்றும், 'தன்னொப்பாரில்லப்பன்' என்றும் போற்றி மகிழ்வர்.

'நான் மணிக் கடிகை'யின் ஆசிரியர் விளம்பி நாகனார்.

மதி மன்னு மாயவன் வாண் முக மொக்கும்
கதிர் சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முது நீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர் மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்

என்று இறைவனது திரு முகம் சந்திரனையும், திருவாழி சூரியனையும், கண்கள் தாமரை மலரையும், திருமேனி காயம்பூ மலரையும் ஒத்திருக்கும் என்கிறார்.

படையை மடியகத்திட்டான் அடியினால்
முக்காற் கடந்தான் முழுநில மக்காலத்
தாபனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்

என்று திருமால் பாரதப் போரில் திருவாழியால் சூரியனை மறைத்ததையும், மூன்றடிகளாலே உலகத்தைத் தாவி யளந்ததையும், இந்திர கோபத்தால் பொழிந்த பெரு மழையைத் தடுக்க கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்து ஆயர்களையும், ஆனிரையையுங் காத்ததையும், பாணாசுரனுடைய அக்கினிக் கோட்டையை யழித்தமை யையுங் கூறுகிறார் இப்புலவர்.

'கார் நாற்பதின்' ஆசிரியர் மதுரைக் கண்ணங் கூத்தனார்,

"பொரு கடல் வண்ணன் புனைமாற் பிறழார் போற்
றிருவில் விலங்கூன்றித் தீம் பெயல் வீழ"

என்று கடல் வண்ணன் மார்பில் அணிந்துள்ள மாலையைப்போல் மேகங்கள் அழகான இந்திர வில்லை விலங்காக ஊன்றி நீர்த் தாரைகளைப் பொழிவிக்கிறது என்கிறார்.

திரிகடுகத்தின் ஆசிரியராகிய நல்லாதனார் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது அந்நூலில்,

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉங் காமரு சீர்த்
தண்ணறும் பூங் குருந்தஞ் சாய்த்ததூம்—நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப் பூ வண்ணனடி

என்று வருங் கடவுள் வாழ்த்துச் செய்யுளால் அறியலாகும். காயாம் பூ வண்ணனான திருமாலின் திருவடிகள் பூமியை அளந்தது, பூங்குருந்தத்தைச் சாய்த்தது, மாயச் சகடம் உதைத்தது என்று திருவடிமேல் ஏற்றிப் புகழுரைக்கிறார் புலவர்.

சங்க காலத்திலும், அதை அடுத்த இடைக் காலத்து நூல்களிலும் பழமொழிகள் ஒவ்வோரிடத்து வழங்கப் பட்டுள்ளன. பழமொழிகளின் சார்பைக் கொண்டு முற்றும் பொருளுணர்த்தியது பழமொழி நானூறு என்னும் நூல். இதன் ஆசிரியர் மூன்றுரையரையர் என்பவர். சமணராக இருக்கலாம் என்பர்.

மிக்க செல்வம் பெறுவதாயிருப்பின் பழியும் பாவமும் பாராதே யாவராயினும் அதனை வெளவுர்

என்ற பழமொழிக்கு உவமானமாக மூன்றுரையரையர்

…………கொற்றப்புள்

ஊர்ந்துலகம் தாவின அண்ணலேயாயினும்
சீர்ந்தது செய்யா தாரில் 177

என்று வெற்றியையுடைய பறவையை ஊர்ந்த உலகந் தாவிய திருமாலேயாயினும் தனக்கு ஊதியந் தருவ தொன்றைச் செய்யாதொழிவாரிலர் என்பர். பூமியை மாபலியிடம் தானம் வாங்க எண்ணி கள்ளக் குறளுரு வாய் சென்று தானம் பெற்று பின்பு திரிவிக்ரமனாய் வளர்ந்து அளந்தாரன்றோ!

183-ம் பாடலில் மூவடி நிலம் கொடுப்பது எனக்கு எளிதாம் என்று சொல்லி (பண்டொரு நாள்) மூவுலக முழுதாண்ட மாவலி தன் மந்திரி சொல்லைத் தட்டிச் செருக்கினால் நீர் வார்த்து உலகமெல்லாம் இழந்ததைக் குறிப்பிடுகிறார். பாட்டு பின்வருமாறு.

ஆஅ மெனக் கெளி தென்றுலக மாண்டவன்
மே என் துணை யறியான் மிக்குநீர் பெய்திழந்தான் 183

நாந்தகம் என்னும் வாளினால் திறலுடைய மாயவனைப் பண்டொருகால் கடலின் கண் புக்கு வளைத்த மதுவும் கைடவனும் என்னும் அசுரர்கள் அவரைக் கொல்ல வேண்டிச் சென்ற விடத்து, அம்மாயவன் திரு உருவம் விளங்கி நின்று ஒளியைக் காட்ட அவ் வொப் பில்லாத வடிவின் தன்மை கண்டு நினைத்துத் தாம் சென்ற கொலையைத் தவிர்த்தார் என்ற மற்றொரு வரலாற்றை மூன்றுரையரையர் பின் வரும் பாடலால் தெளிவுறுத்துகிறார்.

வாட்டிறலானை வளைத்தார்கள் அஞ்ஞான்று
வீட்டிய சென்றார் விளங் கொளி—காட்டப்
பொறு வறு தன்மை கண்டஃ தொழிந்தார் 301

'தொழுனையுள் மாலையுள் மாலை மயக்குறுத்தாள்' என்று யமுனை யாற்றின் கண் மாயவனையும் மயக்கத்தின் கண்ணே வீழ்ப் பிஞ்ஞை (நப்பின்னை) தன் அழகினால் மயக்குறுத்தியதையும்,

பொலந்தாரி ராமன் துணையாகத் தான் போந்
திலங்கைக் கிழவற் கிளையோன்—இலங்கைக்கோ
போந் திறையாய தூஉம் பெற்றான் 257

என்று இராமனைத் தனக்குத் துணையாகக் கருதிப் போந்து விபீடணன் இலங்கைக்கிறைவனானதையும் தமது பாடல்களில் குறிப்பிட்டுச் செல்கிறார் இப்புலவர் பெருமான்.

'இன்னிலை' யென்னும் ஒரு நூல் பதினெண் கீழ் கணக்கு நூல்களோடு ஒன்றென சில சான்றோரால் கொள்ளப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் பொய்கையார் என்பவர்.

அன்றமரிற் சொற்ற வறவுரை வீழ் தீக் கழுது
மன்றுயர்ந்து போந்த வகை தேர்மின் —I இன்னிலை

என்று முற்காலத்தில் பாரத யுத்தத்தில் (கண்ணன் அருச்சுனனுக்குச்) சொல்லிய (கீதையாகிய) தரும வுரையை விரும்பிக் கேட்ட தீய பேய் (தனது பேய்த் தன்மையின் நீங்கி) உயர்வுற்று ஆன்றோரது சபையின் கண் போய்ச் சேர்ந்ததாகப் புலவர் கூறுகிறார்.

மூன்றும் பாடலில், தமது கடமையை அறியாத மாந்தர் திருமாலின் திருவடியின் விரிந்த நிழலைத் தாம்

எய்தாதவராய்த் துன்பம் நிறைந்த நரகத்தின்கண் (தம்மைச்) செலுத்துவர் என்று கனிந்து பாடுகிறார். பாடல் பின்வருமாறு,

............மாலின்

விரிநிழல் தாமெய்தார் தீப்பழுவத்துய்ப்ப
ருரிமை யிவனோராதார்.

தமக்குத் தக்க இல்லாளைத் தெரிந்துகொண்டு துணையாக நின்று மிக மென்மையாக வைத்து இல்லறத்தை நடத்த வேண்டும் என்று கூறவந்த புலவர், நப்பின்னைப் பிராட்டியாரைக் கண்ணபிரான் ஒப்பும் உயர்வும் இல்லாமல் விரும்பி எஞ்ஞான்றும் அவளை ஒரே தன்மையான இன்பத்தில் ஆழ்த்திய செயலை உவமானம் கூறுகிறார்.

ஒப்புயர்வில் வேட்டோன் ஒருநிலைப் பட்டாழ்ந்த செய
னப்பின்னை ஞாலமொருங்கறிக (22-வது)

என்பது செய்யுள்.

இன்னா நாற்பதைப் பாடிய கபிலர் என்னும் புலவர்

"பொற்பனை வெள்ளையை யுள்ளாதொழுகின்னா
சக்கரத்தானை மறப்பின்னா"

என்று பாடுவர். திணைமாலை நூற்றைம்பதின் ஆசிரியர் கணிமேதாவியார் கடலையும் அதனருகே காற்றால் சேர்க்கப்பட்ட வெண்மணலையும் பார்த்து,

மாயவனும் தம்முனும்போலே மறி கடலும்
கானலும் சேர் வெண்மணலுங் காணாயோ

என்று கண்ணபிரானும் பலதேவனும் சேர்ந்திருப்பது போன்றிருக்கிறது அக்காட்சி யென்கிறார். 'மணிகிளர் நெடுமுடி வானவனும் தம்முனும் போன்றணிகிளர்

நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்' என்று யாப் பருங்கல விருத்தி சூத்திரம் 78 மேற்கோள் பகுதியும் இங்கே அறியத்தக்கது.

கார்காலம் தொடங்கி விட்டது. வானத்தில் கரு மேகங்கள் தோன்றி உலாவுகின்றன. இதைக் காண் கின்ற காதலிக்குக் காதலன் இன்னும் வரவில்லையே என்று ஏக்கம் தோன்றுகிறது. ஐந்திணை யைம்பதின் ஆசிரியர் மாறம் பொறையனார் இக் காட்சியைக் கண் டார். இயற்கையில் இயைந்து நிற்கும் இறைவனின் தோற்றம் அவர்கள் முன்னால் தோன்றுகிறது. மின்னு மா மழை தவழும் மேக வண்ணன் அணிநிறம் அவர் கற்பனையைத் தூண்டுகிறது.

'மல்லர்க் கடந்தான் நிறம் போன்றிருண் டெழுந்து' என்று கம்சனால் அனுப்பப்பட்ட மல்லர்களை வென்ற கிருஷ்ணன் அவர் அகக்கண் முன் மேகத்தை நினைவூட்டு கின்றான்.

> மேகங்களோ ! உரையீர் திருமால் திருமேனி யொக்கும்
> யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு பெற்றீர் !

என்று நம்மாழ்வாரும் மேகத்தைப் பார்த்து விளித்தா ரல்லவா?

பூதஞ் சேந்தனார் (இனியவை நாற்பது ஆசிரியர்) தமது கடவுள் வாழ்த்தில் 'தொன் மாண்டுழாய் மாலை யானைத் தொழலினிதே' என்று திருமாலைத் தொழல் இனிமை யுடைத்து என்கிறார்.

சங்க நூல்களின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண் டோடு முடிவடையும். தொல்காப்பியரை கிறிஸ்து

பிறந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் எனலாம். பத்துப் பாட்டினுள் பெரும்பாலானவை கி. பி. இரண்டாம் நூற்றாண்டவை. அகநானூறு புறநானூறு முதலியவற்றில் பல பாடல்கள் மிகப் பழமையானவை. பௌத்தமும், சமணமும் தென்னாடு போந்து வளரத் தலைப்பட்ட களப்பிரர் காலத்தில் (4—5 நூற்றாண்டில்) பல நூல்கள் இயற்றபபட்டிருக்கலாம். கலித்தொகை முதலிய அகப்பொருள் நூல்கள் ஐந்தாம் நூற்றாண்டினில் எழுந்தவையே. வள்ளுவப் பெருந்தகையார் வாழ்ந்தது இவ் வைந்தாம் நூற்றாண்டெனக் கொள்ளுவதால் யாதொரு தவறுமில்லை. ஐந்து ஆறு நூற்றாண்டுகளிற்றான் பதினென்கீழ் கணக்கு நூல்கள் தோன்றின. இவற்றையடுத்த காலம்தான் சிலப்பதிகார காலம். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆறும் நூற்றாண்டில் தோன்றின. இதன் பின்னர்தான் வைதிக மதங்களுக்கும் பௌத்த சமண சமயங்களுக்கும் இடையே பெரும் மாச்சரியங்கள் ஏற்பட்டன. அரசர் ஆதரவையொட்டி இவைகள் அவ்வப்போது செல்வாக்கு பெற்றிருந்தன. முதலாழ்வார்களும் ஆறும் நூற்றாண்டவராதல் வேண்டும்.

நெஞ்சை யள்ளும் சிலப்பதிகார ஆசிரியர் எம்மதத்தவரென எளிதில் கூறமுடியாவிடினும், அவர் சமணர் என்பது பெரும்பாலோர் கொண்ட முடிவு. ஐம்பெருங் காப்பியங்களும் பௌத்த சமணச் சார்புடையவே. ஆனாலும் இளங்கோவடிகள் பிற சமயக்கொள்கைகளையும், சமரச நோக்கோடு பார்த்தவர்.

காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள கோயில்களைக் கூற வந்த ஆசிரியர் அவண், பிற ஆலயங்களோடு

வால் வளை மேனி வாலியோன் கோயிலு
நீல மேனி நெடியோன் கோயிலும்

(சிலப்—171–172 இந்திர)

இருந்ததாகக் கூறுகிறார். பலராமனுக்கும், திருமாலுக்கும் தனித்தனி கோயில் இருந்தன என்கிறார். எனவே திருமாலையும் பலராமனையும் ஒருங்கு ஓரே கோயிலில் வணங்கும் சங்க காலத்து நிலையும், பரிபாடல் கூறும் நிலையும் அவர் காலத்து வழக்கற்றுவிட்டது எனக் கூறலாம்.

கடலாடு காதையில் மாதவி நடிக்க ஆரம்பித்த போது - முதன்முதலாகத் திருமாலை வாழ்த்தியதாகக் கூறப்படுகிறது. தன் நடம் இனிது நடைபெற வேண்டியே மாதவி அவ்வாறு செய்தாள். பதினோராடற்கும் முகநிலையாகிய தேவ பாணி மாயோன் பாணி. இப் பாணியோடே அவள் ஆடத் தொடங்கினள்.

கஞ்சன் வஞ்சங் கடத்தற்காக
வஞ்சன, வண்ணனுடிய, வாடலு
ளல்லியந் தொகுதியும்
மல்லி னாடலு

சிலப். கடலாடு காதை—46-48.

அஞ்சன வண்ணன் ஆடிய ஆடல் பத்துள், கஞ்சன் வஞ்சத்தின் வந்த யானையின் கோட்டை ஒசித்தற்கு நின்றாடிய அல்லியற் தொகுதி யென்னுங் கூத்தும், அவன் ஏவிய மல்லர்களை அறைகூவி உடற் கரித்

தெழுந்து அவனைச் சேர்ந்தவளவிலே சடங்காகப் பிடித்து உயிர் போக நெரித்துத் தொலைத்த மல்லாடலும்,

> வாணன் பேரூர் மறுகிடை நடந்து
> நீணில மளந்தோ னாடிய குடமு
>
> சிலப். கடலாடு—54-55

காமன் மகன் அநிருத்தனைத் தன் மகள் உஷை காரணமாக வாணன் சிறை வைத்தலின், அவனுடைய சோ வென்னும் நகர வீதியிற் சென்று நிலங்கடந்த நீனிற வண்ணன் குடங் கொண்டாடிய குடக் கூத்தும் ஆகிய கூத்துக்களை மாதவி ஆடினாள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது 'குடமாடு கூத்தன்' என்றும் 'குடமெடுத் தாடவல்ல எங்கூத்தாவோ' என்றும், 'மன்னுபறை கறங்க மங்கையர் தம் கண் களிப்ப கொன்னவிலுங் கூத்தனாய்ப் பெயர்த்துங் குடமாடி' என்றும் ஆழ்வார் கள் குடக் கூத்தாடியதைக் கூறுதல் காண்க.

கோவலனுங் கண்ணகியும் புகார் நகரின் நெடுங் கடை வாயிலைக் கடந்து, அங்கு

> அணி கிளர ரவி னறிதுயி லமர்ந்த
> மணி வண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து.
>
> நாடுகாண். சிலப்—9-10

அரவணைமீது அறிதுயில் கொள்ளும் மணிவண்ணனென் னும் திரு நாமத்தையுடைய திருமால் கோயிலை வலஞ் செய்து சென்றனர். இக் கோயில் இப்பொழுது திருநாங் கூர்ப்பதியில் உள்ள திருத்தெற்றியம்பலம் என்ற ஆலய மாகக் கொள்ளலாம். இங்கே திருமால் பள்ளிகொண்ட மூர்த்தத்தில் எழுந்தருளியுள்ளார். நாங்கூர்ப்பதியும்

புகாருக்கு அணித்தேயுள்ள பழைய புகழ் வாய்ந்த நகரம். எனவே, புகா ரெல்லையிலிருந்த இப்பெருமாள் கோயிலை கோவலனும் கண்ணகியும் வணங்கிச் சென்றனர் என லாம்.

குடமலையிலுள்ள மாங்காட்டு மறையோன் மூலம் திருமால் திருவேங்கடத்தில் நின்றவண்ணமும், திருவரங் கத்தே அவர் பள்ளிகொண்ட திருக்கோலமாக இருக்கும் வண்ணத்தையும் அழகுறப்பாடுகிறார் இளங்கோவடிகள்.

நீலமேகநெடும் பொற் குன்றத்துப்
பால் விரிந்தகலாது படிந்தது போல
வாயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர் தொழுதேத்த
விரி திரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்
திரு வாமர் மார்பன் கிடந்த வண்ணமும்

சிலம்பு காடு—35-40

நீலமேகம் ஓங்கிய பொன்மலை மீது பக்கங்களில் விரிந்து மிகாமல் ஒக்கப் படிந்ததுண்டாகில் அதனையொப் பத் தனது படம் விரித்தெழுந்த ஆயிரம் தலையையும் கிட்டுதற்கரிய திறலையுமுடைய பாம்பணைப் பள்ளிமீதே தேவர்கள் பலரும் தொழுதேத்தத் திரை விரியும் காவிரி யாற்றிடைக் குறையிலே திருமகள் பொருந்திய திரு மார்பையுடையோன் கிடந்த கோலமும்,

வீங்கு நீரருவி வேங்கடமென்னு
மோங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
யிருமருங்கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்கு விற்பூண்டு

நன்னிற மேக நின்றதுபோலப்
பகை யணங்காழியும் பால் வெண்சங்கமுந்
தகை பெறு தாமரைக் கையினேந்தி
நலங் கிளராரம் மார்பிற் பூண்டு
பொலம் பூவாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோனின்ற வண்ணமும்.

சிலம்பு காடு—41-51

வேங்கட மலையுச்சி மீது ஞாயிறும், திங்களும் இரு மருங்கும் ஓங்கி விளங்கிய இடைப்பட்டவிடத்தே நல்ல நீல நிறத்தையுடைய மேகம் தன் மின்னாகிய புதுப் புடைவையை யுடுத்துத் தன் வில்லாகிய பணியைப் பூண்டு நின்றார் போலப் பகையை வருத்தும் ஆழியையும் சங்கையும் வலனு மிடனுமேந்தி அழகு கிளரும் ஆரத்தைத் திருமார்பிற் பூண்டு பொற் பூவாடை யுடுத்து வெளிப்பட்ட சிவந்த திருக்கண் மலரையுடைய நெடியோன் நின்ற கோலத்தையும் கம்பீரமாக வருணனையில் இயற்கை யெழிலுடன் பாடுகிறார்.

மாங்காட்டு மறையவனைக் கோவலன் மதுரைக்குச் செல்லும் பாதையைப் பற்றி கேட்டலும், அம்மறையவன் அவர்களுக்கு வழியை உணர்த்துகிறான். ஆங்கண்,

கடம் பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவிராயிற்

என்று அழகர் மலையையும் அதன் பக்கத்துள்ள தீர்த்தங்களின் வரலாற்றையுங் கூறுகிறான்.

மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றாமரைத்தா ளுள்ளம் பொருந்துமி
னுள்ளம் பொருந்து விராயின் மற்றவன்

புள்ளணி நீள் கொடி புணர் நிலை தோன்றுந்
தோன்றிய பின் னவன்றுணை மலர்த் தாளிணை
யேன்று துயர் கெடுக்கு

(சிலம்பு—காடுகாண்—133-138)

அம்மலை மீது நின்றோனுடைய பொலிவு பொருந்திய தாள்களை நினைமின: அப்படி நினைப்பின் அவனது கருடப புள்ளெழுதிய கொடித் தண்டு பொருந்தி நிற்கும் நிலையிடத்தைக் காண்பீர்: கண்ட அளவில் அவன் திருவடி நிலை நும்மை எடுத்துக் கொண்டு பிறவித் துன்பத்தைக் கெடுக்கும் என்று அம்மறையவன் வாக்காக இளங்கோவடிகள் கூறுவது சமணராகிய அவர்தம் சமரச மனப்பான்மையைக் காட்டுவதாகும்.

‘நீணிலங் கடந்த நெடுமுடியண்ணல் தாள் தொழு தகையோன்’ என்ற தொடரால் அம்மறையவன் திருமால் பக்தி மிகுந்தவன் எனக் கூறப்படுகிறான். வைதிக மதக் கடவுளரையும் இந்நூலாசிரியர் பொது நோக்குடன் பார்த்தவர். திருமால் சகட முதைத்தமை, கஞ்சன் வஞ்சம் கடந்தமை முதலிய கண்ணபிரான் செயல்களை வேட்டுவரியில் ஐயை மேல் ஏற்றிச் சொல்லுகிறார்.

ஆய்ச்சியர் குரவைப் பாடல்களைப் படிக்கப் படிக்கத் தேன் துளிக்கும். கோவலன் கொலையுண்டதால் ஆயர் பாடியில் பல துர்நிமித்தங்கள் நேர்ந்தன. அவற்றுக்கு பரிகாரமாக மாயவனும் தம் முன்னவனான பலராமனும் பின்னையும் தொழுநையாற்றில் ஆடிய பிள்ளைச் சரித நாடகங்களில் சிலவற்றை ஆடுகிறார்கள்.

(1) கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்

(2) பாம்பு கயிருக் கடல் கடைந்த மாயவன்

(3) கொல்லேயஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்

என்று முறையே நிரை மேய்க்கின்றுழி விளவின் கனியை யுதிர்க்க வேண்டி அவ்விடத்தில் மேய்க்கின்ற பசுவின் கன்றைக் குறுந்தடியாகக் கொண்டு உதிர்த்ததையும், கடலேக் கடைகின்ற காலத்து மேரு வரை மத்தத்திற் சுற்றுக் கயிறு வாசுகியென்னும் பாம்பாகச் சுற்றிக் கடைந்ததையும், புனக் கொல்லேயைச் சார்ந்தவிடத்து வஞ்சனேயால் வந்து நின்ற குருந்தை முறித்ததையும் கூறி அக்கண்ணன் தம்மிடையே வருவானேல் அவ்வினிய குழலோசையைத் தாம் கேட்கப் பெறுவோம் என்று கூறுகிருர்கள்.

வட வரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக்
கடல் வண்ணன் பண்டொரு நாள் கடல் வயிறு
கலக்கினேயே
கலக்கிய கை யசோதையார் கடைக்கயிற்ருர்
கட்டுண் கை
மலர்க் கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தோ

கடல் வண்ணனே! கமல உந்தியாய்! நீ முன்பு ஒரு நாள் வடவரையை மத்தாக நாட்டி வாசுகி யென்னும் பாம்பைக் கடைக் கயிருகப் பூட்டிப் பாற்கடலினடுவைக் கலக்குவித்தாய்: அங்கனம் கடலேக் கலக்கிய நின் கைகள் அசோதைப் பிராட்டியாருடைய கடைக் கயிற்ருலே கட்டுண்ட கை. இது ஒரு மாயமோ என்றும்,

அறு பொருளிவனென்றே யமரர் கணம் தொழுதேத்த
வுறு பசியொன் றின்றியே யுலகடைய வுண்டனேயே
யுண்ட வாய் களவினு னுரி வெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலேயாய் மாயமோ........

மாலையாய், ஐயமற்ற பொருள் இவனென்றே கொண்டு அமரர்த் திரளெல்லாம் உன்னைத் தொழுதேத்தா நிற்க, நீ மிக்க பசியொன்று மில்லாமலேயே உலகமடங்கலு முண்டாய்; அங்ஙன முண்டவாய் களவிடத்தே உறி வெண்ணெயைப் பெரும் பசியாலே உண்டவாய்; இது ஒரு மாயமோ,

திரண்டமரர் தொழுதேத்தும் திருமாலின்
செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருளற நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய்! மாறட்டாய்! மாயமோ ....

திருமாலே! அட்டாய் அமரர் திரண்டு ஏத்தா நிற்கும் நினது செங்கமலம் போலும் இரண்டடியாலே மூன்றுல கும் இருணீங்க நடந்தாய்; அங்ஙனம் இருணீங்க நடந்தவடி பஞ்சபாண்டவருக்குப் பின்பு தூதாக நடந்த வடி, இஃது மாயமோ,

என்றெல்லாம் கண்ணனென்னும் தெய்வக் குழந்தை யின் விளையாட்டில் ஈடுபட்டு மூவுலகும் இருள் தீர்ந்து வாழும்படி நடந்த திருவடிகளே பின்னாளில் பஞ்சபாண்ட வர்களுக்குத் தூது நடந்ததைப் பாடி அவன் பரத்வத் தோடு சௌலப்யத்தையும் அழகுறப் பாடுகிறார்கள்.

சேவகன் சீர் கேளாத செவி யென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவி யென்ன செவியே,
கரியவனைக் காணாத கண்ணென்னக் கண்ணே
கண்ணிமைத்துக் காண் பார்தங் கண்ணென்ன கண்ணே,
— தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே

என்றெல்லாம் இளங்கோவடிகள் ஆழ்வார்கள் தஞ் செயலை விஞ்சும் தன்மையில் பாடல்களை அருளிச் செய் திருக்கின்ருர். பாடுபவர் சமணப்புலவரா, வைணவரா என்றுங்கூட ஐயுற வேண்டி யிருக்கிறது.

கால்கோட் காதையில் செங்குட்டுவன் கல் கொணர வடநாட்டிற்குச் செல்லும் வழியில் 'ஆடகமாடத் தறிதுயி லமர்ந்தோன்' ஆகிய திருமாலை வணங்கிய செய்தியைக் கூறுகிருர். இவ்வாடக மாடம் இரவிபுரம் என்பர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காவியங் களாகவும், சம காலத்தனவாகவும் கருதப்படுகின்றன. ஆனுல் மணிமேகலை பௌத்த காவியம், புத்த சமயத்தின் மேம்பாட்டைக் கிளப்பதற்கென் றெழுந்தது. புத்த சமயத்தை மேம்படுத்தும் பொருட்டு பிற சமயத்தை இகழ்ந்துரைத்தலாகிய சமய வெறுப்பு இக்காவியத்திலே அரும்பியுள்ளது.

ஒட்டிய சமயத்துறு பொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்

என்றதால் பல சமய வாதிகளும் தத்தம் கொள்கைகளைப் பட்டி மண்டபத்தே வாதிப்பதுண்டெனலாம். இவ் வகையில் சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதையில்

காதல் கொண்டு கடல் வண்ணன் புராண
மோதின ஞரணன் காப்பென் றுரைத்தனன்

என்று வைணவ வாதங் கூறப்படுகிறது.

நெடியோன் குறளுருவாகி நிமிர்ந்து தன்
னடியிற் படியை யடக்கிய வந்நா
ணீரிற் பெய்த மூரிவார் சிலை
மாவலி மணி, 19—65-66

பூமியைத் தாரை வார்த்துக் கொடுத்த மாவலியைத் திருமால் வாமனனாகிப் பின் பேருருவங் கொண்டு இரண்டு அடிகளாற் பூமியை அளந்தடக்கிய வரலாறு இங்கே கூறப்படுகிறது.

கண்ணனும், பலராமனும் நப்பின்னையாகிய மூவரும் துவாரபதியில் எருமன்றத்தே குரவைக் கூத்து ஆடிய வரலாற்றை

மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும்
மாடிய குரவையிஃதாமென

19—65-66

என்று சாத்தனார் கூறுகிறார்

நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முன்னீரடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந் தெறிந்த நெடுமலையெல்லா
மணங்குடை யளக்கர்......

17—9-12

என்று வானரங்கள் சேதுபந்தனம் செய்ததைக் கூறுகிறார். இப் புலவர் காலத்தில் சமண மதத்திற்கும் பௌத்த மதத்திற்குமே மாச்சரியங்கள் இருந்ததாக அகச் சான்றுகள் உள்ளதால் இந்நூல்கள் ஐந்து ஆறு நூற்றாண்டுகளை ஒட்டியன எனலாம். அதிலும் மணிமேகலை பின்னையது என நிச்சயிக்கலாம். இக்காலம் வைஷ்ணவ மதக் கொள்கைகள் பரவியிருந்த காலமெனக் கொள்ளுதல் தவறுடைத் தன்று.

திருத்தக்க தேவர் (நாமகளிலம்பகம் 209)

நீனிற வண்ணனன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ணனேக்கிற் பழியுடைத் தென்றுகண்டாய்

............விரிபுனற் றொழுனை யாற்றுட்
கோனிற வளையினார்க்குக் குருந்தவனொசித்த...

என்று மாயோன் பல துகில்களைக் கவர்ந்து, தம்முனாகிய பானிற வண்ணன் (பலராமன்) நோக்கிற் பழியுடைத் தென்று, தொழுனையாற்றங் கரையிலே கோவியர்க்குக் குருந்தொசித்ததாகக் கூறுகிறார்.

மல்லனார் மணிவண்ணனைப் பண்டோர் நாட்
கொல்ல வோடிய குஞ்சரம்

சிந்தாமணி 984

என்று கண்ணபிரானைக் கொல்ல கம்சனால் ஏவப்பட்ட குவலயா பீடம் என்னும் யானையைப் பற்றிய வரலாறும் கூறப்படுகிறது. கண்ணபிரான் இவ்வியானையைக் கொல் லாமல் அதன் மருப்பு மாத்திரம் ஒசித்ததனால் அவர் கரிவரதனாயினார் என சமணர் ஸ்ரீ புராணம் கூறும்.

திருமாலின் உதவியால் தேவர்கள் நாகம் கயிறாகக் கொண்டு கடலைக் கடைந்தார் என்பதை தேவர்,

அருவரை நாகஞ்சுற்றி ஆழியானன்று கடைய
கருவரை குடையப்பட்ட கடலென......

சிந்தாமணி 812

என்றும், திருமால் திரிபுர தகன காலத்தில் சிவபிரான் எய்த கணையாயினதை,

"போக மீன்ற புண்ணிய னெய்த கணையேபோல்"

—362

என்றும, கண்ணன் பாரதப் போரில் வலம்புரிச் சங்கை முழக்கியதை,

'செங்கண்மா றெழிக்கப்பட்ட வலம்புரித்துருவங்"

—811

என்றும், வில்லைத் தேவிபொருட்டு வளைத்த கையினை

யுடைய இராமன் மராமரம் ஏழும் உருவெய்த அம்பெய் தானென்பதை

"மராமர மேழுமெய்த வாங்குவிற்றடக்கை வல்வி
விராமனை ...."

—1643

என்றுங் கூறிச் செல்வர்,

எட்டுத்தொகை நூல் ஒவ்வொன்றிலும் கடவுள் வாழ்த்துப் பாட்ல்கள் உண்டு. இவ்வாழ்த்துப் பாடல்களை இயற்றியவர் அத்தொகை நூல்களைத் தொகுத்த பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பர். இவர் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல் 'நற்றிணை'யில் ஒன்று உள்ளது. அது திருமாலைப் பற்றியது அப்பெருமானுடைய அளவில்லாத வியாபகத்தை அளந்து காட்டுகிறது இறைவனுடைய அத்தனை தத்துவங்களையும் உள்ளடக்கியிருக்கிறது இப்பாடல். பாட்டைப் பார்ப்போம்.

'மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளை நரல் பௌவம் உடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசை கையாகப்
பசுங் கதிர் மதியமொடு சுடர்க் கண்ணாக
இயன்ற எல்லாம் பயின்று அகத் தடக்கிய
தீ தற விளங்கிய திகிரியோனே.

எல்லாமாய் நிற்கும் பரம்பொருளின் அடிநிலை (சேவடி) இவ்வுலகம். அவன் உடுக்கும் உடை கடல். அவ்வாடை அளவற்று எங்கும் விரிந்து கிடக்கிறது. அப்பாலுக் கப்பாலான விசும்பு, பெருவளியே அவன் திருமேனி· எட்டுத் திசைகளும் அவனது எட்டுக் கரங்கள். பசுங்

கதிர், மதியம் அவன் இரு கண்கள். இவற்றின் ஒளியின் மூலமே அவன் நமக்கு இரவிலும் பகலிலும் உலகத்தைக் காட்டுகிறான். இவையிரண்டும் காலத்தின் அளவு கருவிகள். இவைகளின் மூலமே நாம் காலத்தைக் கணக்கிடுகிறோம். நாராயணன் உயிர்ப் பொருள்களை இடமாகக் கொண்டவன்; அவற்றிற்கு இடமாக யிருப்பவன். இப்படியாக உலகத்தை ஒழுங்காக இயக்கும் இந்த சக்தி பரம்பொருள். பேரறிவு கொண்ட பொருளாக அப்பரம் பொருள் இல்லாவிடில் உலகத்தின் இயக்கத்தில் ஒழுங்கு காண முடியாது. இயன்ற எல்லாம் பயின்றகத்தடக்கியவன். இவ்வாறு இறைவனது நிலையை நமக்குக் காட்டுகிறார் புலவர். வேத முதல்வன் என்பதனால் சித்தநிலை, அறிவு நிலை ஆகிய விளக்கப்படும். பாட்டு தத்துவ சிகரத்தை எட்டிப் பிடிக்கிறது.

'புறப் பொருள் வெண்பா மாலை' என்னும் நூல் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதன் ஆசிரியர் ஐயனாரிதனார் என்பவர்.

பாடாண் படலத்தில் பூவை நிலையைக் கூறுமிடத்து

கலவை காவல னிறனொடு பொறிஇப்
புரவலர் பூவைப் புகழ்ந் தன்று

என்று ஆனிரையைக் காத்த மாயவன் திருவுருவோடு காட்டினிடத்தே அலரும் காயம்பூவை உவமித்துக் கூறுகிறார்.

.....................மேவார்
மறத்தொடு மல்லர் மறங் கடந்தானை
நிறத் தொடி நேர தருதலான்

பகைவர் சினத்துடனே வஞ்ச மல்லரது மாறுபாட்டை வென்ற இளமைப் பருவத்து மாயவனது திருமேனி யோடு உவமை கூறுகிருர். தாங் கூற வந்த வீரனை பாடாண் படலத்தில் கந்தழி கூறுமிடதது

சூழு நேமியான் சோ வெறிந்த
விழாச சீர் விறன் மிகுத் தன்று 228

என்று வளைந்த திகிரியை யுடையவன் சோவென்னும் அரணத்தினை அழித்த வெற்றியைச் சிறப்பிக்கிருர்.

மாயவன் மாயம் அதுவால் மணி நிரையுள்
ஆயனு வெண்ணல், அவனருளால்—காயக்
கழல விழக் கண் கனலக் கைவளையார் சோரச்
சுழல ழுலுள் வைகின்று சோ.

மாயவனை ஆனிரை மேய்க்கும் வெறுங் கோவலனுக எண்ணல் பிழைப்பட்டது. அவன் அளியனுகக் கோபிக்க அசுரர் கட்டின வீரக் கழல் நெகிழ்ந்தது. விழி சுழன்றது. கையில் ஆபரணங்களை அணிந்த மகளிர் மயங்கத் தீ உள்ளே சென்று தேக்கி சோ என்னும் அரண் அழிந்தது.

புலவர் அறிவாளனை நெறியிலே ஆற்றுப்படுத்து கிருர்.

வெறி கொளறை யருவி வேங்கடத்துச் செல்லின்
நெறி கொள் படிவத் தோய் நீயும்—பொறிகட்
கிருளீயு ஞாலத்தில் திடரெல்லா நீங்க
அரிளியு மாழியவன் 235

நறுநாற்றத்தினையுடைய ஒலிக்கும் அருவியாற் பொலிந்த திருவேங்கடத்துக்குச் செல்லின் இந்திரியங்கட்கு மயக்கங் கொடுக்கும் கரசினியின் துயரமெல்லாம் ஒழிய ஆழியான்

அருள்.செய்யும என்று ஆற்றுப் படுத்துகிருர். திருமுரு காற்றுப் படையைப் போல் தெய்வத்திடம் ஆற்றுப்படுத் தும் வெண்பாவிது.

தொல் காப்பியர் காலததுக்குப் பல நூற்ருண்டுக்கு முன்பிருந்தே மாயோன் விழியோடு தமிழகத்தில் மிக்கி ருந்தது. சங்க காலம் மதச் சார்பற்ற காலம். அக் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் பலர் தந்தம் காலத்தில் வழங்கி வந்த புராண வரலாறுகளைப் பலபடப் போற்றக் காண்கிருேம். சங்க காலத்தில் வைதிக மதங்களுக்கும் பௌத்த சமண மதங்கட்கும் மாச்சரிய மற்றிருந்தது. எனவே ஒரு கடவுளை உயர்த்தியோ மற்ற கடவுளரை இழித்துக் கூறும் வழக்கோ அக்காலத்தில் இல்லை. மதக் காய்ச்சல் அனைத்தும் திருமழிசையாழ்வார், சம்பந்தர் ஆகியோர் காலத்தேதான் வலுவுற்றன. சமணரான இளங்கோவடிகள் ஆழ்வார்கள் அளவு ஆர்வத்தோடு திருமாலைப் பாடியுள்ளமை இந்த சமரச உணர்ச்சிக்குச் சான்ருகும். ஆழ்வார்கள் காலத்தில் வைணவ சமயம் எவ்வாறு உரம் பெற்றது என்று அடுத்து ஆராய்வோம.

பிற்பகுதி

மற்றுமுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்ப்பித்த பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகியோர்க்கு முதலாழ்வார்கள் என்ற பெயர் நின்றது உலகத்தே. இவர்களே வைணவ சமயத்தின் ஆதிகவிகள். பரம ஞானிகளாய் விளங்கிய இவ்வாழ்வார்கள் ஒருநாள் இருந்த இடத்தில் மற்றொரு நாள் இராதபடி ஓடித்திரியும் யோகிகளாய் தம்மில் ஒருவரை யொருவர் அறியாமல் தனித்தனி சஞ்சரித்துக் கொண்டிருந்தவர். இவர்கள் மூவரையும் திருக்கோவலூரில் ஒன்று சேர்த்து இறைவன் அந்தாதி பாடுவித்தானென்பர்.

> "பாவரும் தமிழால் பேர்பெறு பனுவற்
> பாவலர் பாதிநாளிரவில்
> மூவரும் நெருக்கி மொழிவிளக்கேற்றி
> முகுந்தனைத் தொழுத......"

என்று முதலாழ்வார்கள் கதையை வரந்தருவார் (வில்லிபுத்தூராழ்வார் புதல்வார்) புகழ்ந்துபாடுவர். உலகத்தையே அகலாகவும், கடல்நீரை நெய்யாகவும், கதிரவனை விளக்காகவும் கொண்டு பொய்கையார் ஞான விளக்கேற்றி இறைவனைக் காணப்புகுகிறார். 'மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் ஒன்றக் கூட்டி அன்றெரித்த திருவிளக்கு' என்று இச் செய்கையைப் பாராட்டுவர் இராமாநுச நூற்றந்தாதிக்காரர்.

> அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
> இன்புருகு சிந்தையிடுதிரியா———

ஞானச் சுடர் விளக்கேற்றுகிறார் பூதத்தார். இவ் விரு தீபங்களுக்கிடை மன்னிய பேரிருள் மாள்கிறது. அந்த ஞான வொளியிலே மாமலராள் தன்னொடும் மாயனைத் தாம் கண்டமையை,

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்— ——

என்று பெருமிதத்தோடு பெருந்தமிழராகிய பேயாழ்வார் பாடுகிறார். இவ்வாழ்வார்கள் இயற்றிய பாடல்கள் நாலாயிரதிவ்ய பிரபந்தத்தில் 'இயற்பா' என்ற பகுதியில் முறையே ஒன்று, இரண்டு, மூன்று நூற்றந்தாதிகளாக மிளிர்ந்து நிற்கின்றன.

முதலாழ்வார்கள் இயற்றிய வெண்பா வந்தாதிகள் சமரசப் பொது நோக்குடையனவாயுள்ளன. அவற்றுள் திருமாலின் பரத்துவம் விளக்கப்படுகிறது என்றாலும், சமண, பௌத்தமதங்களைப் பற்றிய கண்டனங்கள் காணப்படவில்லை. சிவபிரான், பிரமன் ஆகியோர் திருமாலின் ஆகத்தில் இடம்பெற்று அவனுக்குள் அடங்கிய இறைகளாகவே குறிக்கப்பட்டுள்ளனர். இம்முதலாழ்வார்கள் காலத்திற்கு முன் வைணவம் சிறப்புற இருந்ததென்றாலும், அம்மதத்திற்கு ஆழமும் வேகமும் அளித்தவர்கள் முதலாழ்வார்கள் தாம். 'செந்தமிழ் பாடுவார்' என்றும், 'இன்கவி பாடும் பரம கவிகள்' என்றும் முறையே திருமங்கை மன்னனும், நம்மாழ்வாரும் முதலாழ் வார்களைப் போற்றியுள்ளமை, பிற்காலத்தாழ்வார்களுக்கு பொய்கையார் ஆயினோர் எந்த அளவிற்கு வழிகாட்டியாக விளங்கினார்கள் என்பதை வலியுறுத்தி நிற்கும். ஞானம், பக்தி, வைராக்கியம் ஆகிய

வற்றின் வடிவான முதலாழ்வார்கள பக்தியுகத்தைத் தோற்றுவித்த விடி வெள்ளிகள். வைணவம் என்ற ஞானவெள்ளம் இவர்கள் மூலம் தொண்டை நாட்டிலிருந்து தெற்கே, பரவி, பிறகு வடவிந்தியாவிற்கும் பாய்ந்து சென்றது. ஞானத்தைக் கலையாக்கி வைதிக மதங்களுக்குப் புத்துயிரளித்தவர்கள் இவ்வாழ்வார்களே.

காலப் பழமையாலே முதலாழ்வார்கள் காலத்தை நிர்ணயிக்கவேண்டிய கருவிகள் எதுவும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. எனவே இவ்வாழ்வார்கள் வாக்கிலிருந்து அறியக் கூடியவைகளை ஒட்டியே இவர்கள் காலத்தை ஒருவாறு நிர்ணயிக்கவே வேண்டும். இவ்வாழ்வார்கள் வாழ்ந்த காலம் சமயப்பூசலற்ற காலம். வைதிக மதங்களும், புறச்சமயிகளாகிய சமணர் பௌத்தர்களும் மாச்சரியமின்றி வாழ்ந்த காலம். இத்தகையகாலம் கி. பி. ஆறும் நூற்ருண்டே எனக்கொள்ளுதல் தவருகாது. பதினெண் கீழ் கணக்கு நூல்கள் பலவும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களும் தோன்றிய காலமும் இதை ஒட்டியே எனக்கூறலாம். ஏழாம் நூற்ருண்டியின் முற்பகுதியிலே சமண பௌத்த மதங்களுக்கும், வைதிக மதங்களுக்கும் பிணக்கு ஏற்பட்டுள்ளமை, அப்பர், சம்பந்தர் ஆகியோர் வாக்கிலிருந்தும், திருமழிசையாழ்வார் வாக்கினின்றும் நன்கறியலாகும். எனவே முதலாழ்வார்கள் இக்காலத்திற்கு முந்தியவராவர்.

பொய்கையாழ்வார் 'விண்ணகரம்' என்ற தலத்தைப் பாடியுள்ளார். காஞ்சியிலுள்ள 'பரமேஸ்வர விண்ணகரம்' பரமேஸ்வர பல்லவனுல் நிருமிக்கப்பெற்றது.

அவன் ஏழாம் நூற்றுண்டினிறுதியில் வாழ்ந்தவன். எனவே அத்தலத்தைப் பாடிய ஆழ்வார் ஏழாம் நூற்றுண்டிற்கு பின்னர் வாழ்ந்தவராதல் வேண்டுமென்பது சிலர் கொள்கை. ஆனுல் ஆழ்வார் பாடியது 'விண்ணகரம்' என்ற திருப்பதியை. இத்திருப்பதி காஞ்சியிலிருந்த பழம் பதிகளுள் ஒன்ருகும். பிற்காலத்தில் இவ்வாலயத்தை பரமேஸ்வர பல்லவன் திருப்பணி செய்தான். அன்றுமுதல் அது பரமேஸ்வர விண்ணகரம் என்று பெயர் பெற்றது இப்பெயரிட்டே பிற்காலத்தில் இத்தலம் திருமங்கை மன்னனுல் பாடப்பெற்றது. முதலாழ்வார்கள் எவரும் இத்திருப்பதியை 'பரமேஸ்வர விண்ணகரம்' என்று பாடினுரில்லை. 'விண்ணகரம்' என்றே அவர்கள் ஒரு திருப்பதியைப் பாடியுள்ளனர். அத்திருப்பதியும் காஞ்சியிலுள்ளதாகத் தான் இருத்தல்வேண்டும். எனவே பழைய விண்ணகரத்தைப் பின்னுளில் பரமேஸ்வர பல்லவன் திருத்தியமைத்த பிறகுதான் இத்திருப்பதி 'பரமேஸ்வர விண்ணகரம்' எனப்பெயர் பெற்றிருத்தல் வேண்டும். ஆகையால் முதலாழ்வார்களே இஃதொன்றைக்கொண்டு ஏழாம் நூற்றுண்டிற்குப் பின்னர் வாழ்ந்தவர் என்று கூறல் பொருத்த மற்றது. விண்ணகரம் என்பதற்கு பரமபதம் என்ற பழைய வியாக்கியானமுமுண்டு.

முதல் பரமேஸ்வர வர்மனுல் (கி. பி. 650) உண்டாக்கப்பட்ட மாமல்லபுரத்தைப் பாடிய பூதத்தாழ்வார் அவன் காலத்துக்குப் பிற் பட்டவரென்று ஒரு சாரார் கூறுவர். ஆனுல் இத்துறைமுகப்பட்டணம் அவ்வாசன் காலத்திற்கு முந்தியே உள்ளது. மகாபலிபுறத்தில் உள்ள

ஆதிவராகப் பெருமாள் சந்நிதியில், மகேந்திரவர்மன் I. சிம்மவிஷ்ணு ஆகியோரது உருவச்சிலைகள் உள்ளன. எனவே, மகாமல்லன் தந்தை பாட்டன் ஆகியோர் உருவச் சிலைகள் உள்ள அக்கோயிலும், ஊரும் பல ஆண்டுகட்கு முற்பட்டவையாயிருத்தல் வேண்டும். ‘மாமல்லைக் கோவல் மதிட்குடந்தை’ என்று பூதத்தாழ்வார் பாடிய தொடர் ‘மல்லை’ என்ற தொடருக்குக் கொடுக்கப்பட்ட விசேடணமேயன்றி மாமல்லபுரம் என்பதன் திரிபன்று என்பது தெளிவு. மா என்பது அடைமொழியே யாகும்.

‘கலங்களியங்கும் மல்லைக்
கடன்மல்லைத் தலசயனம்’

என்ற திருமங்கை மன்னன் கூற்றும் இதற்குச் சான்றாகும்.

பதினென் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாய ‘களவழி நாற்பதை’ அருளிச் செய்த புலவராகிய பொய்கையாரே ஆழ்வாராகிய பொய்கையார் என்பது பழந்தமிழர் சிலரது கருத்தாகும். முதற்றிருவந்தாதிச் செய்யுள்களில் இரண்டு வெண்பாக்கள் ‘பொய்கையார் வாக்கு’ என்று ஆரிடச் செய்யுட்கு உதாரணமாக யாப்பருங்கல விருத்தியில் மேற்கோள் காட்டப் பட்டுள்ளன. இவ்விருத்தியுடையார் காலம் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் முதற் பகுதி யென்பர். ‘ஆரிடம் பாடுதற்குரியர், ஆக்குதற்கும் கெடுத்தற்கும் ஆற்றலுடையோராய் முக்காலமுணர்ந்த இருடிகள்’ என்றும், அவராவார்—பொய்கையார், குடமூக்கிற் பகவர், பூதத்தாற் காரைக்கார் பேயர்,

மூலர் முதலியோர் என்று அவ்விருத்திக் கூறுகின்றது. எனவே ஆழ்வாரான பொய்கையாரும் களவழி ஆசிரியரான பொய்கையாரும் ஒருவரென்பது அவர் கருத்தாகும் எனக் கொள்ளலாம்.

பேராசிரியர் நச்சினார்க்கினியரும், பொய்கையார் முதலாயினோர் அந்தாதிச் செய்யுள்களை 'விருந்து' என்னும் நூற் பகுப்புக்கு உதாரணமாகக் காட்டுகின்றனர். களவழிப் பொய்கையார் கணைக்காலிரும்பொறை என்ற சேர மன்னனை சிறை மீட்டற் பொருட்டு சோழன் செங்கணான் மீது இந் நூலைப் பாடினார். ஆனால் ஆழ்வாராகிய பொய்கையார் மானிடம் பாடார் என்பது ஒரு சாரார் கொள்கை. எனவே, களவழிப் பாடியவர் வேறொரு பொய்கையார் என்பது அவர் முடிபு.

கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தர் 'இராசராசன் உலாவில்',

> "சொன்மாலை நல்லவன் பொய்கை களவழி
> நாற்பதுக்கு
> வில்லவன் காற்றளையை விட்டகோன்"

என்று சேரமானைச் சிறை நீக்கிய பொய்கையாரது திறத்தை போற்றுகிறார். 'சொன்மாலை நல்லவன் பொய்கை' என்று கூத்தர் கூறியது 'சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை' என்று பொய்கையாழ்வார் தம் திருவந்தாதியைத் தொடங்குவதைத் திருவுளத்துக் கொண்டே என்று கூறலாம். 'இன்னருளின் மேதக்க பொய்கை' என்று தம் உலாவில் பிறிதோரிடத்தும் பொய்கையாரைப் பற்றிக் கூறுகிறார். இதுவும் அப்பெரி

யார் இறைவனது பேரருளைப் பெற்ற மகான் என்பதைக் கருத்தில் கொண்டே யாகும் எனலாம். களவழிப் பொய்கையாரும், ஆழ்வாராகிய பொய்கையாரும் ஒன்று யின், அவர் காலம் கோச் செங்கணான் காலமான ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியாகும். ஆழ்வார் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஆறும் நூற்றாண்டின் முற் பகுதியிலும் வாழ்ந்தவர் என்று ஊகிக்க இடமுண்டு. பயன் கருதி ஆழ்வார் மானிடம் பாடியவரன்று. லோகோபகாரமாக நண்பனொருவனை மீட்க அவ்வாறு பாடியருளினார் எனினும் பொருந்தும். 'பொய்கையாயினார் அந்தாதிச் செய்யுள்' என்று நச்சினார்க்கினியர் கூறிச் செல்வதனால் பூதத்தார், பேயார் ஆகியோர் அந் தாதிகளும் தழுவப்பட்டமை அமையும். இம் மூவர் காலமும் ஒன்றெனக் கொள்ளுதல் 'குரு பரம்பரை' வர லாற்றையும் ஆதரித்து நிற்கும்.

ஆழ்வார்கள் குழுவில் திருமழிசைப் பிரான் நான்கா வதாக விளங்குபவர். சாக்கியம், சமணம், சைவம் முதலிய மதங்களின் தத்துவததை நன்குணர்ந்த இவர் சைவராக ஒழுகி வந்தார். முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் இவரைத் திருவல்லிக் கேணியில் கண்டு நாராயணனது பரத்வத்தை நிலைநாட்டி ஞானஸ்நானம் செய்து வைத்தார். அன்று முதல் திருமழிசை யாழ்வார் பரம பாகவதராய் வாழ்ந்து வந்தார். பொய்கையார் பூதத்தார் ஆகியோர் இறைவனடி எய்திய பின்னரும் பேயாழ்வார் வாழ்ந்தவராதல் வேண்டும். இப்பேயாரின் சீடராகவே திருமழிசை பிரான் பணியாற்றியவர். திரு மழிசை பிரானையும், ஆக்கவும் கெடவும் பாடவல்ல

ஆற்றலுடையவரெனவும், முக்காலமுணர்ந்த இருடியாக வும் யாப்பருங்கல விருத்தி போற்றுகிறது. இவ்வாழ் வாரை அவ்விருத்தி 'குட மூக்கிற் பகவர்' என்று போற்றுகிறது. குடமூக்கிலேயே (கும்பகோணம்) இவ் வாழ்வார் தம்மிறுதிக் காலத்தைக் கழித்தாரென்றும் அத் தலம் 'திருமழிசை பிரான் உகந்த இடம்' எனவும் கருதப்பட்டு வந்ததாக வைணவ வரலாறுகள் கூறும்.

இக் குட மூக்கிற் பகவர் 'வாசு தேவனார் சிந்தம்' என்ற நூலை யியற்றினரென்றும் அதனுள் மிக்குங் குறைந்து வரும் செய்யுள்கள் ஆரிடமாம் என்று யா, விருததிக் காரர் குறிப்பிடுகிறார். இந்நூல் வாசு தேவ னாகிய திருமாலின் மீது செய்யப்பட்ட நூல் என்றும் அந்த விருத்தி குறிப்பிடுவது திருச்சந்த விருத்தமே யெனக் கொள்ளலாகும் என்பதும் ஆராய்ச்சியாளர் துணிபு. திருச்சந்த விருத்தத்தில் பல பாடல்களினீற்றில் எழுத்தோசை மிகுந்தும், குறைந்தும் நிற்றல் இக் கருத்தை வலியுறுத்தி நிற்கும்.

திருமழிசையார் காலத்தில் சமய வாதங்கள் நாட்டில் பெருகியிருந்தன என்பதற்கு அவர் வாக்கினின்றும் ஆதாரம் கிடைக்கின்றது.

> அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
> சிறியார் சிவப் பட்டார்......

என்ற அவர் பாடல் புற மதங்களை வன்மையாகக் கண் டித்துள்ளது. சைன, பௌத்த, சைவ வைணவ மதங் கள் செறிந்து சமய வாதஞ் செய்த மகேந்திரவர்மன் காலத்தவராதல் வேண்டும் திருமழிசை பிரான். இவ்

வரசன் சைன மதப்பற்றுடையவன் என்பதும், கபாலிகம், பவுத்தம் முதலிய மதங்களை நன்ருகக் கண்டித்தவனென்றும் இவன் இயற்றிய 'மத்த விலாசம்' என்ற நூலால் அறியலாம். தம் திருவந்தாதிப் பாசுரமொன்றில் 'குணபரனே' என்று ஆழ்வார் திருமாலை விளித்துக் கூறுகிருர். முதலாம் மகேந்திர வர்மனுக்கு 'குணபரன்' என்ற பெயரும் உண்டு என்பது சாஸனங்கள் காட்டும் உண்மை. ஆழ்வாரும் அப் பல்லவன் பெயராலேயே திருமாலை விளித்தார் எனக் கூறுவது மிகப் பொருந்துவதாகும். ஆழ்வார்களில் 'குணபரன்' என்ற பெயரால் திருமாலை மங்களா சாஸனம் செய்தருளியவர் திருமழிசைப்பிரான் ஒருவரே. மகேந்திரவர்மன் பிற மதப் பிரியனுய் இருந்ததை வெறுத்த ஆழ்வார், 'குணபரன்' என்ற பெயர் அவனுக்குப் பொருததமற்றது என்றும், அது எம் பெருமானுக்கே உரியதென்றும் பொருள்பட பாடிச் சென்ருர் என்று கூறுவாருமுளர். ஆகவே முதலாவது மகேந்திரனது ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்தவராக இவ்வாழ்வாரைக் கொள்ளுவது மிகப் பொருத்த முடைத்ததாகும். திருநாவுக்கரசரும் இக்காலத்தவராகவே எண்ண இடமுண்டு. ஆனல் திருநாவுக்கரசர் இவ்வரசன் ஆட்சிக் காலத்தின் பின் பகுதியில் தோன்றி நெடுநாள் வாழ்ந்திருந்தவராவர். மகேந்திரவர்மனை சைவனுக்கியதும் அப்பெரியாரது முயற்சியே என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இவ்வாழ்வார் பொருட்டு காஞ்சியிலுள்ள யதோத்காரி பெருமாள் தமது ஆலயத்தை விட்டே வெளியேறி விட்டார். ஆழ்வார் திரும்பப் பணிக்கப் பாயல் பள்ளி

யில் மீண்டும் பள்ளிகொண்டருளினார் என்று குரு பரம் பரை வரலாறுகள் கூறுகின்றன. தமிழால் கடவுளை அழைத்துச் சென்ற இவ்வரலாற்றைக் குமரகுருபர சுவாமிகள்

பழ மறைகள் முறையிடப் பைந்தமிழ்
பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே

என்று போற்றுவார். 'வாசித்தும், வழிபட்டும், பூசித்தும்' ஆழ்வார் பொழுது போக்கினார். தமிழைத் தனது இதயத்திலே வித்தாக விதைத்து பக்தியை விளைவு செய்தான் இறைவன் என்று ஆழ்வார் கூறுகிறார்.

.... . விதையாக
நற்றமிழை வித்தி என உள்ளத்தை நீ விளைத்தாய்

என்கிறார். தான் இல்லாயல் இறைவன் பரிபூரண னல்லன். அவ்வாறே தானும் அவனில்லாமல் பரிபூரணனாகார் என்று பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள உறவை

நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் நீ
என்னை அன்றி இலை

என்று அருளிச் செய்கிறார். பூமியில் உள்ள ஐந்து, ஜலத்தில் உள்ள நான்கு, தீயில் நின்ற மூன்று, காற்றில் உள்ள இரண்டு, வானின் நின்ற ஒன்றுமாய்ப் பஞ்ச பூதங்களின் இயல்புகளின் வடிவானவன் இறைவன் என்று திருச் சந்த விருத்தம் கூறுகிறது.

வேதியர் தங்குலத்துதித்த விஷ்ணுசித்தர் பாண்டிய நாட்டிலே, மென்னடையன்னம் பறந்து விளையாடும் வில்லிப்புத்தூரில் வடபத்ரசாயி கோயிலில திருமாலை

செய்யுங் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தவர். அந் நாளில், மதுரையை ஆண்டுவந்த பாண்டிய மன்னன் பரமார்த்த தத்துவம் இன்னதென்பதை நிரூபிப்பவர்க்கு பொற் கிழி பரிசளிப்பதாய்ப் பறை சாற்றியிருந்தான். வட பத்ர சாயியின் ஆணையை மேற்கொண்டு விஷ்ணுசித்தர் மது ரைக்குச் சென்று சமயவாதியரோடு வாதம் புரிந்து பரத்வநிரூபணஞ் செய்து பொற்கிழியைப் பெற்று ரென்பர்.

> பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் [வந்தானென்
> றீண்டிய சங்கமெடுத்தூத—வேண்டிய
> வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
> பாதங்கள் யாமுடைய பற்று

என்ற தனியன் இதை வலியுறுத்தும். மற்றுமுள்ள ஆழ்வார்கள் தங்களார்வத்தன்றி பொங்கும் பரிவாலே சோராத காதற் பெருஞ்சுழிப்பால் இறைவனுடைய மங்களத் திருமேனிக்கு யாதொரு களங்கமும் ஏற்படக் கூடாதென்று 'பல்லாண்டு பல்லாண்டு' என்று மங்களா சாஸனஞ் செய்தருளியமையால் இவருக்குப் பெரியாழ் வார் என்று நாமம் வழங்கலாயிற்று.

இவ்வாழ்வார் காலத்தில் திருக்கோட்டியூர் தலைவ ரான செல்வ நம்பி என்பவர் மதுரைப் பாண்டியன் சபையில் ராச புரோகிதராக இருந்தார் ஆழ்வார் தங் காலத்துப் பாண்டிய வரசனை

> கொன்னவில் கூர்வேற் கோநெடுமாறன் தென்கூடற் [கோன்
> தென்னன் கொண்டாடுந் தென்திருமாலிருஞ் சோலையே

என்று குறிப்பிடுகிறார். இக்கோநெடுமாறன் என்பான் கி பி. 730—767 வரை ஆண்ட மாற வர்மன் ஆவான் என்பர். இவ்வரசனது மந்திரியாக விளங்கிய மாறங்காரி, மாறன் எயினன் என்ற இருவர் பரம பாகவதர்கள். யானை மலையடிவாரத்தில் நரசிங்கப் பெருமானுக்கு அழகியதோர் ஆலயமமைத்தனர். உத்தர மந்திரியாயிருந்த இவர் தூண்டுதலாலேயேபாண்டியன் பரமார்த்த தத்துவ நிருபணஞ் செய்ய முன் வந்தான் எனலாம். இம் மந்திரியார் அவதரித்த களக்குடி பெரியாழ்வார் அவதரித்த ஸ்ரீ வில்லி புத்தூருக்கு அருகேயுள்ளது. எனவே இம் மந்திரியின் தூண்டுதலின் பேரில் ஆழ்வார் மதுரைக்கு எழுந்தருளி பரத்வ நிருபணஞ் செய்து அரசனையும் வைஷ்ணவனுக்கினர் எனலாம். இவ்வரசன் மகனுன பராந்தகனை சீவர மங்கல சாஸனம்

பராந்தகன் பரம வைஷ்ணவன் தானுகி
நின்றிலங்கு நீண்முடி நில மன்னவன் நெடுஞ் சடையன்

என்று புகழ்கிறது. தந்தையைப் போலன்றி இவன் முதலிலிருந்தே வைஷ்ணவனுகி விளங்கினுன். இம் மன்னன் மந்திரியும் மாறங்காரியின் வழியில் வந்தவன். இவ்வரசன் மனுதர்சித மார்க்கத்திஞல் குருசரிதங் கொண்டாடியவன் என்று சீவர மங்கல சாஸனங் கூறுகிறது. இக் குருவே பாண்டியன் கொண்டாடிய பட்டர் பிரானுகவும் இருக்கலாம்.

பூஞ்சோலை யணி புறவிற் காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக் குன்ற மன்னதோர்
கோயிலாக்கினுன்

என்று இவ்வரசனை வேள்விக்குடி சாஸனங் கூறும். இத் திருப்பணியை மேற்கொண்டே ஆழ்வார்

கொங்கும் குடந்தையுங் கோட்டியூரும் பேரும்
எங்கும் திரிந்து விளையாடுமென் மகன்

என்று பாடியருளினர் போலும். ஆனல் உரையாசிரியர்கள் கொங்கு நாட்டில் பாடல் பெற்ற வைணவ தலமில்லை யென்றெண்ணி 'கொங்கும்' என்ற சொல்லுக்கு 'வாசனை' என்று பொருள் அருளிச் செய்தனர் போலும். எவ்வாற்றனும் ஆழ்வார் எட்டாம் நூற்றுண்டினிறுதி வரை எழுந்தருளியிருந்தனர் எனக் கூறலாம். பரம சைவராகிய பாண்டியர் பரம்பரையில் அரசர் மூவரை வைணவராக்கிய புகழும் பேரும் இவ்வாழ்வாருக்குரித்த தாகும்.

இவ் வாழ்வார் திருமாலை பல பாவங்களில் வழிபடுகிருர். குழந்தைக் கண்ணன் இவரை வசிகரித்தான். இந்த அனுபவத்தில் இவர் யாசோதையின் நிலையை மேற் கொண்டு தாலப் பருவம், அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம் முதலிய பருவங்களைத் தாயுள்ளத்தோடு கவியின் சரளமான நடையில் அருளிச் செய்கிருர். குழல்களும் கீதமுமாகி கோவிந்தன் காலிக்குப் பின்னே செல்கின்ற இவர் வருணனை உன்னதச் சிகரம் எனலாம். கண்ணன் குழலூதும் கவிச் சித்திரம் இசையின் பெருமையையும், வன்மையையும், தெய்வீகத் தன்மையையும் நமக்குக் காட்டி நிற்கும். உண்ணு நாள் இவ்வாழ்வாருக்குப் பட்டினியான நாளன்று. ஆனல் இறைவன் பாதங்களை நண்ணு நாள் அன்று அவர்க்குப்

பட்டினி நாளாகும் இறைவன் கோயில் கொண்டுள்ள திருப்பதிகளை இவர் அகங்குழையப் பாடுகிறார். மார்வம் என்ற கோயிலமைத்து மாதவன் என்ற தெய்வத்தை அங்கே பிரதிஷ்டை செய்து ஆர்வம் என்ற பூ இட்டு உபாசனை செய்ய வேண்டு மென்பது இவர் கொள்கை.

பெரியாழ்வார் திரு மகளாகிய ஆண்டாள் 'மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்' என்று இறவனையே நாயகனாக அடைய வேண்டுமென்ற லட்சியத்தோடு வாழ்ந்தவள். திருப்பாவை என்ற சிறந்த நூலை இவ்வாண்டாள் இயற்றியுள்ளாள். பழைய காலத்தில் கோகுலத்தில் ஆயர் நங்கையர் அனுஷ்டித்து வந்த பாவை நோன்பை ஒட்டி இச் சிறு பிரபந்தம் இயற்றப் பெற்றது. இந் நோன்பு நோற்பதின் மூலம் கன்னிப் பெண்கள் தாங்கள் விரும்பிய கணவன்மாரை அடைய காத்தியாயினி தேவி அருள் புரிவாளென்பது மரபு. இம்மரபை யொட்டியே ஆண்டாளும் இந் நோன்பை அனுஷ்டித்தாள். ஆண்டாளின் ஆழ்ந்த அன்பையும் மேதா விலாசத்தையும் திருப்பாவை வெளியிடுகிறது. இப்பிரபந்தத்தின் மூலம் அஞ்ஞானமாகிய இருளில் மூழ்கிக் கிடக்கும் பிரபஞ்சத்தைத் தட்டியெழுப்புகிறாள் ஆண்டாள். ஸ்ரீ ராமா நுஜர் ஆகியோர் இத் திருப்பாவையில் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். காலஞ் சென்ற வ. வெ. சு. ஐயர் 'நாச்சியார் திருமொழி' நாயகி பாவத்தின் உச்சி எல்லையைத் தட்டிப் பிடிக்கிறது என்பர். ஏனைய ஆழ்வார்கள் நாயகி பாவத்தை ஏற்று நடித்தனர். அது மேட்டு மடையை யொக்கும். ஆனால் ஆண்டாளோ பெண்ணாய்ப் பிறந்து அவன் அன்பை

நாடினுள். அவள் காதல் பள்ள மடையாகும். எனவே, 'ஆழ்வார்கள் தஞ் செயலை விஞ்சும் தன்மையள்' என்று இவரைப் பெரியோர் போற்றினர்.

ஆண்டாள் காலம் பெரியாழ்வாரின் காலமாகிய எட்டாம் நூற்றுண்டே. 'வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று' என்று ஆண்டாள் தாம் நீராடச் செல்வ தற்கு வைகறைத் துயிலெழுந்தபோது கண்ணுரக்கண்ட வான நிலையைக் கூறுவதை யொட்டி இது பெரியாழ்வார் காலமாகிய எட்டாம் நூற்றுண்டில் ஓரே முறை கி. பி. 731-ல் நேர்ந்ததென்றும் சூடிக்கொடுத்த அவ்வம் மையார் திருப்பாவையை அருளிச் செய்தது அவ் வாண்டின் மார்கழிப் பௌர்ணமியின் அதிகாலையே என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

ஆழ்வார்களுள் பெரும்பாலானோர் இவ்வெட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தவராவர். கோதைப் பிராட்டியை திருமணம் புரிந்துக் கொண்டு அழகிய மணவாளப் பெருமாள் ஸ்ரீ ரங்கம நோக்கிச் செல்லுகையில் மங்கை மன்னன் அவர்களை வழி மறித்து வாள் வலியால் மந்திரோபதேசம் பெற்றுர் என்று திவ்ய சூரி சரிதம் கூறும். எனவே திருமங்கை மன்னனும் பெரியாழ்வார் காலத்தவராகக் கருதப்பட்டமை தெளியலாம். இவ் வாழ்வார் குறுநில மன்னராய் விளங்கியவர். முதலில் சைவராயிருந்து பிறகு குமுதவல்லி யம்மையாரால் வைணவராஞர் என்பர். ஆனுல் 'எந்தாதை தாதையப் பாலெழுவர் பழவடிமை வந்தார்' என்ற இவர் வாக்கி லிருந்து இவர் பரம்பரையான வைணவக் குடியில்

பிறந்தவர் என்பது உறுதிப்படும். இவர் பாகவத கைங்கர்யம் செய்ய ஆறலைக்கும் கள்வராய்த் திரிந்து பல கொடுமைகள் புரிந்தாரென்று திவ்ய சூரி சரிதம் கூறுகிறது. அலை நீருலகுக் கருளே புரியும் காராற் புயற்கையராகிய ஆழ்வார் அத்தகைய தீத்தொழில் புரிந்திரார் எனலாம். மருவலர் தம் உடல் துணிய வாள் வீசும் பரகாலர் கற்றூர் பரவ, பாரணிந்து தொல் புகழுடையராய்பொய்ம்மொழி யொன்றில்லாதமெய்ம்மையாளராய்த் திகழ்ந்தவர். இளவயதிலே அரசர்களுக்குத் துணைவராய் இவர் பல போர்களில் ஈடுபட்டவராயிருத்தல் வேண்டும் என்பது 'வாட்டிறற்றானை மங்கையர் தலைவன்', 'அமரிர் கடமா களியானை வலான்', 'ஒன்னலர் தங்களை வெல்லும் ஆடல் மாவலன்' என்று இவரது சொற்களால் அறியலாகும்.

> கோடிய மனத்தாற் சினத் தொழில் புரிந்து திரிந்து
> நாயினத் தொடுந் திரிந்திட்டோடியு முழன்று முயிர்
> களே கொன்றேன் உணர்விலேன் . . . .

என்று ஆழ்வார் தம் பால்யப் பருவத்து நிகழ்ச்சிகளுக்காக வருந்துவது உணரத்தக்கது.

> கள்வனே னானேன் படிறு செய்திருப்பேன் கண்டவா
> திரிதந்தேனேலும் தெள்ளியனானேன் . . . .

என்கிற சொற்கள் ஆழ்வார் தம் வீரக்குடிக்கேற்பப் புரிந்த போர்களையும், அவற்றால் ஏற்பட்ட கொலைகளையும் குறிக்குமேயன்றி அவர் கள்வராக வழிபறி செய்தாரென்பதற்கு தினத் துணையும் ஆதாரமாகாது. இவர் 'ஆத்மாபஹாரம்' செய்த கள்வரென்றே கருதலாம்.

தெரியேன் பாலகனாய் பல
தீமைகள் செய்து மிட்டேன்
பெரியேனாயின் பின் பிறர்க்கே
யுழைத் தேழையானேன்

என்று தம் வாழ்நாளின் முன் பகுதிகளில் நடந்த செயல்களுக்காக ஆழ்வார் வருந்துகின்றமை இங்கே கவனிக்கத் தக்கது. 'பாடிப்பாடி பரபரப்பாய்த் திரிந்தவர்' இவ் வாழ்வாரென்பர் பெரியோர். இவர் அகில இந்திய யாத்திரை புரிந்து இமயம் முதல் குமரி வரை உள்ள தலங்களை அவற்றின் இயற்கை வளங்களோடு பாடியுள்ளார் என்பது அவர் பாடல்களால் தெரியவரும். வைணவமாகிய கப்பலிலே பாதி பாக்கு போட்டவர் இவ் வாழ்வார்.

இவர் சோழன் கோச்செங்கணனைப் பாடியிருத்தலால் ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவராவர். இரண்டாம் நந்திவர்மனுடைய (717—779) போர்ச் செயல்களைப் பரமேச்வர விண்ணகரப் பதிகத்தில் பாடும் ஆழ்வார் அவன் காலத்தவராகவோ அல்லது அதன் பின்னர் வாழ்ந்தவராகவோ இருத்தல் வேண்டும்.

"மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும்
நீண் முடிமாலை வயிரமேகன்
தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி
அட்ட புயக்கரத்தாதி தன்னை"

என்று வைரமேகன் என்ற அரசனது புகழும் வலியும் கச்சியைச் சூழ்ந்திருந்தது என்று ஆழ்வார் நிகழ்காலத்தால் கூறியிருப்பது அன்னார் அவ்வரசன் காலத்தவர் என்பதைத் தெளிவுபடக் கூறி நிற்கும். இவ் வைர

மேகப் பெயரை பல்லவ மன்னர் பலர் தரித்திருந்தனர். அவற்றுள் நந்திவர்ம பல்லவனுக்கு இப்பெயர் வழங்கி யிருத்தல் வேண்டும். கி. பி. 754-ல் ராஷ்டிர கூட மன்னன் தந்திதுர்க்கன் நந்திவர்ம பல்லவனைப் போரில் தோற்கடித்து அவனுக்குத் தன் மகள் ரேவாவை மணம் புரிவித்தான். இவள் வயிற்றுப் பிள்ளையும் தாய்ப்பட்ட னுடைய தந்திவர்மன் என்ற பெயரோடு திகழ்ந்தான். இவனுக்கும் வைரமேகப் பெயர் வழங்கிற்றென்பர். எனவே வைரமேகன் என்பது பல்லவர்க்குக் குடிப் பெயர். திருமங்கை மன்னன் காலத்தில் பல்லவர் ஆட்சி மிகுந்து மகோன்னத நிலையில் இருந்ததை அவர் வாக்கால் நன்கு அறியலாம். எனவே கி. பி. 754-க்குப் பின் பல்லவர் ஆட்சி குன்றி விட்டது எனலாம். ஆகவே ஆழ்வார் நந்திவர்மன் காலத்தவர் என்பது வெள்ளிடை மலை.

திருமங்கை மன்னனும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் சம காலத்தவர் என்று திவ்ய சூரி சரிதமும், குரு பரம்பரையுங் கூறுகின்றன. காலஞ்சென்ற சுந்த ரம் பிள்ளையவர்கள் திருஞானசம்பந்த நாயனார் கி. பி. 655-ல் சிவபத மடைந்தார் எனக் கூறுவர். திருமங்கை மன்னன் நீண்ட நாள், ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு வாழ்ந்தவர் என்று வரலாறுகள் கூறுகின் றன. எனினும் அவர் ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி யில் தோன்றி கி. பி. 754-க்குப் பின்னும் வாழ்ந்தார் எனக் கூறலாகும்.

அப்பரும், சம்பந்தரும் சம காலத்தவரென்று பெரிய புராணம் கூறுகிறது. அப்பர் மகேந்திரவர்மன்

(610–640) காலத்தில் வாழ்ந்து அவ்வரசனைச் சைவ மதத்தைத் தழுவச் செய்தவர். மகேந்திரவர்மன் தன் வாழ்நாளின் இறுதியில்தான் சைவ மதத்தைத் தழுவி ஞன். இவன் சமணனுயிருந்த காலத்தில் 'மத்த விலாசம்' என்னும் நூலைச் செய்துள்ளான். அந்நூல் கபாலிகரையும், பௌத்தரையும் நையாண்டி செய்கிறது. இவன் சைவனுன காலம் சுமார் கி. பி. 630-ஐ ஒட்டி யிருத்தல் வேண்டும். நாவுக்கரசர் அக்காலத்தில் சுமார் 25 ஆண்டு உடையவராயிருந்திருத்தல் வேண்டும். அப்பரும் சுமார் 85 ஆண்டுகள் எழுந்தருளியிருந்தனர் எனலாம். ஆகவே அவர் கி. பி. 690 வரை எழுந்தருளி யிருந்தவர்.

சிறுத் தொண்டர் என்ற பரஞ்சோதியார் முதலா வது நரசிம்மவர்மனுக்கு படைத்துணைவராக இருந்து வாதாபி போரில் கலந்து கொண்டார் என்று சரித்திர வாராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். இதைப் பெரிய புராண மும் ஆதரித்துக் கூறும். ஆனல் சிறுத்தொண்ட நாய ஞர் வாதாபி போருக்குப் பின் தம் ஊருக்கு எழுந்தருளி இறைவன் பணியில் ஈடுபட்டுவிட்டார் என்கிறது பெரிய புராணம். வாதாபி போர் நடந்த காலம் கி. பி. 640-க் குப் பின்னர் எனலாம். ஏனெனில் கி. பி. 640-ஐ ஒட்டி வாதாபி நல்ல நிலையில் இருந்ததாக யுவான்சுவாங்க் கூறுகிருர். வாதாபி போர் நரசிம்மவர்மன் பட்ட மெய்திய ஏழெட்டு ஆண்டுகட்குப் பின்னரே நடந்திருக்க வேண்டும். இன்றேல் நரசிம்மவர்மன் புலிகேசியின் பெரும் வல்லமையை தான் பட்டமெய்திய குறுகிய காலத்தில் அடக்கியிருக்க முடியாது. ஆகவே வாதாபி

போரின் காலம் கி. பி. 648-ஐ ஒட்டியிருத்தல் வேண்டும். சிறுத் தொண்டர் வாதாபி போரில் கலந்து கொண்ட காலத்தில் சுமார் முப்பது ஆண்டினராக விருத்தல் வேண்டும். அவரும் ஏழாம் நூற்ருண்டிறுதி வரை வாழ்ந்தவராதல் வேண்டும்.

பாண்டிய வரசன் நெடுமாறனைச் சைவ சமயத்தைத் தழுவச் செய்தார் சம்பந்தர். இந்நெடுமாறன் நெல்வேலிப் போரில் வெற்றி பெற்றவன் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுகிருர். அரிகேசரிமாறவர்மன் என்ற இவன் கி. பி. 670-710 வரை ஆட்சி புரிந்தான். இவனும் முதலில் சமணனுயிருந்து பின்னர் சைவ சமயத்தைத் தழுவினுன். இதற்குக் காரணமாயிருந்த சம்பந்தர் சமணரைக் கனல் வாதம், புனல் வாதம் ஆகியவற்றில் வென்ருர். நெடுமாறன் தன் ஆட்சியின் முன்னுட்களில் பல போர்களில் ஈடுபட்டிருந்தான். இவனும் கி. பி. 680-க்குப் பின்னரே சைவனுயிருக்க வேண்டும். சம்பந்தர் இவனை சைவனுக்கிய காலத்தில் மிகுந்த இளைஞர். சுமார் பத்து வயதினரர்க் விருக்கலாம். இவர் 16 ஆண்டுகளே வாழ்ந்தார் என்பர். எனவே கி. பி. 670-686 வரை வாழ்ந்தவர் எனலாம்.

திருமங்கை மன்னன் தமது வாழ்க்கையின் முற்பகுதியைப் போர் வீரராகக் கழித்தவர். சம்பந்தர் பிறந்த சீர்காழிக்கு சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ள குறையலூரில் அவதரித்தவர். எனவே சம்பந்தரைப் பற்றி நன்கு அறிந்திருக்க முடியும். ஆனல் சம்பந்தர் காலத்தில் இளைஞராக இருந்திருக்க வேண்டும். எனவே

இவரும் சுமார் 680-ஐ ஒட்டி அவதரித்து எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை வாழ்ந்தவராகக் கொள்ளு வது பொருத்தமாகும். திவ்ய. சூரி சரிதம் இதைக் கொண்டே இருவரும் சந்தித்ததாகக் கூறியிருக்க வேண்டும். குரு பரம்பரையோ இருவரும் சமயப் போர் நிகழ்த்தினதாகக் கூறுகிறது. ஆனால் வைதிக மதங்களுக் குள் அக்காலத்தில் சமயப் போர் நடந்ததாகத் தெரிய வில்லை.

ஒண் திறல் தென்னனோட வடவர சோட்டங் கண்ட
திண் திறலாளர் நாங்கை..........

என்று புலிகேசியின் மகன் முதல் விக்கிரமாதித்தன் பல்லவரோடு பெருவள நல்லூரில் போர் தொடுத்ததை ஆழ்வார் குறிப்பிடுகிறார். இது நடந்தேறிய காலம் கி. பி. 674. நாங்கை வீரர்கள் பல்லவர்க்குத் துணையாக நின்று விக்கிரமாதித்தனையும் அவனுக்குத் துணையாக வந்த பாண்டியனையும் புறமுதுகோடச் செய்தனர் என்கிறார் ஆழ்வார். இப்போர் நடந்தேறிய காலத்தில் ஆழ்வார் சிறு வயதுடையவராயிருந்திருப்பார் எனலாம்.

தொண்டரடிப் பொடியாழ்வார் விப்ர என்ற நாரா யணர் சோழ நாட்டில் காவிரிக் கரையில் மண்டங்குடி என்ற ஊரில் பிறந்தவர்.

செய்யும் பசுந் துளவத்
தொழில் மாலையும் செந்தமிழ்
பெய்யும் மறைத் தமிழ் மாலையும்
பேராத சீரரங்கத்து
ஐயன் கழற் கணியும் பரன்......
....

என்று இவ்வாழ்வார் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இரண்டு மாலைகளை சமர்ப்பித்தார் என்று திருவரங்கத்தமுதனார் கூறுகிறார். 'துளபத் தொண்டாய தொல்சீர் தொண்டரடிப் பொடி' என்றும் 'தொடை யொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப் பொடி' என்றும் அவரே தம்மைக் கூறிக் கொள்ளுகிறபடி இவர் அரங்கநாதனுக்கு திருத்துழாய் மாலைகள் தொடுத்து அணிவிக்கும் தொண்டு புரிந்தனர் எனத் தெரிகிறது. பூமாலையேயன்றி இவர், 'திருமாலை, திருப்பள்ளியெழுச்சி' என்ற இரு பாமாலைகளையும் அப்பெருமான் கழற்கு அலங்கரித்தார். திருமாலையில் இவரைப் பெருமாள் துயில் உணர்த்தினரென்றும், திருப்பள்ளியெழுச்சியில் இவர் பெருமாளைத் துயிலுணர்த்துகிறாரென்றுஞ் சொல்லுவர். அஞ்ஞான நித்திரையிலிருந்து பெருமாள் இவரை விழிப்பித்த செயலை

> சூதனாய் கள்வனாகித் தூர்த்தரோ டிசைந்த காலம்
> மாதரார் கயற் கணென்னும் வலையுள் பட்டழுந்து வேனை
> போதரே யென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால்
> ஆதரம் பெருக வைத்த அழகன் ....

என்று போற்றுகிறார்.

யமாதிகள் பெயரையும் கேட்க அஞ்சிக் கிடந்த இவ்வாழ்வார் இறைவன் நாமத்தை அண்டை கொண்ட பலத்தாலே, யமன் வாசலிலே சென்று அறை கூவுகிறார்.

> 'நாவலிட் டுழிதர்கின்றோம் நமன் தமர் தலைகள் மீதே'

என்பன அவ்வடிகள். பகவான் நான்கு வேதங்களைக் கற்ற பிராமணர்களுக்கு ஓர் உபதேசஞ் செய்தாராம்.

இழி குலத் தவர்களேனும்
எம்·மடியார்கள் ஆகில்
தொழுமின், கொடுமின், கொண்மின்
....

என்பது தான் அந்தப் பிரசங்கம். மிகத் தாழ்ந்த குலத் தவரா யிருப்பினும் எம்முடைய அடியானுயிருப்பின் அவன் பாதத்தில் விழுந்து வணங்குங்கள். அவர்களுக்கு ஞானத்தை ஒளியாமல் கொடுங்கள். அவர்கள் உம்மை விட அறிவு மிக்கவராயிருந்தால் அவர்களிடமிருந்து நீங் கள் ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று பகவான் அருளிச் செய்கிறுர் என்கிறுர் ஆழ்வார். சாதி யந்தணர்களாஞலும் இறைவனுடைய அடியவர்களைப் பழித்துரைப்பவர்கள் அப்போதே நீசராகி விடுவார்கள் என்கிறுர் ஆழ்வார். இயற்கை யழகுகளை கவித்வத் தோடு பாடியவர் தொண்டரடிப்பொடி யாழ்வார்.

ஸ்ரீரங்கத்தில் திருமதிள் கட்டும் பொழுது திரு மங்கை மன்னன் தொண்டரடிப் பொடியாரை அடி பணிந்து கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்ததாக குரு பரம்பரை கூறுகிறது. எனவே தொண்டரடிப் பொடி யாரும் திருமங்கை யாழ்வாரோடு சம காலத்தவர் என் பது தெளிவுபடும்.

சீரிய நான் மறைச் செம்பொருள்
செந்தமிழா லளித்த
பாரியலும் புகழ்ப் பாண் பெருமாள்

என்று நான்கு வேத சாரமான நற் பொருளை அழகிய தமிழ்ப் பாக்கள் (அமலனுதி பிரான்) மூலம் அருளிச் செய்தவர் திருப்பாணுழ்வார் என்பர் ஆன்றேர். சோழ

வள நாட்டில் உறையூரில் பாணர் குலத்தில் அவதரித்த இவ்வாழ்வார் காவிரிக் கரையில் இருந்தபடியே ஸ்ரீரங்க நாதன் மேல் செவிக்கினிய பாடல்களை யாழில் அமைத்துப்பாடி உருகி வந்தன ரென்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்தினரானபடியால் இவ்வாழ்வார் காவிரியைக் கடந்து இறைவனைத் தரிசிக்க முடியவில்லை. ஆனால் தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கும் நீர்மையுடைய அரங்கன், அடியார்களை குலம் பாராது வழிபட வேண்டுமென்று பிராம்மணர்க்குப் போதிக்க, அது உபதேச மாத்ரமேயாய்ப் போகாமே, கோயிலிலே வந்து லோக சாரங்க மா முனிகள் தலையிலே திருப்பாணாழ்வாரை வைத்து இவ்வர்த்தத்தை வ்யாபரிப்பித்து (தொழிற்படுத்தி)க் காட்டினான் என்று கூறுகிறார் பெரியவாச்சான் பிள்ளை.

திருப்பாணாழ்வார் இறைவனை அமலன், விமலன், நிமலன், நின்மலன், நீதிவானவன் என்றெல்லாம் பெயரிட்டு பாடுகிறார். இவ்வார்த்தைகளுக்குப் பொருள் சுத்தன், பரிசுத்தன் என்பதே. இவற்றிற்குப் பொருள் கண்ட பெரியார், ' இவன் சுத்தனாகையாவது தான் ஒருவன் சுத்தனாகையன்று; தன்னோடு சம்பந்தித்தவரையும் சுத்தராக்கவல்ல அடி 'அருள் உடைமை' என்று கூறுகிறார்.

பிறரோடு கலவாமல் தான் சுத்தனாக யிருப்பவன் சுய நலமி. தன்னோடு சம்பந்தப்பட்ட அனைவரையும் சுத்தராக்கக் கூடிய இரக்கமே உண்மையான சுத்தம். இந்தக் கொள்கையை அனுஷ்டானத்தில் திருப்பாணாழ்வார் விஷயத்தில் ஸ்ரீரங்கநாதனே காட்டினாராம். சைவம்

நந்தனுரைத் தீயிலிட்டு வதக்கி ஆலயப்பிரவேசம் செய்வித்தது. ஆனுல் வைணவமோ திருப்பாணுழ்வாரை மகா வைதிகரான லோக சாரங்கமுனியின் தோள்மேல் ஏற்றி அரங்கநாதன் சன்னிதிக்கு அழைத்துச்சென்றது. பாண்பெருமாள் சன்னிதிக்குள் சென்றதும் அரங்கநாதனுடைய திவ்யஸ்வரூபத்தைப் பாதாதிகேசம் அனுபவித்து, 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்ருென்றினைக் காணுவே' என்று ஈடுபட்டார் என்பர்.

காண்பனவும் உரைப்பனவும்
மற்ருென்றின்றி
கண்ணனையே கண்டுரைத்த
கடிய காதல்
பாண் பெருமாள்.........

என்று இவரை வைணவவுலகம் இன்றளவும் போற்றுகிறது. திவ்ய சூரிசரிதம் இவ்வாழ்வாரையும் தொண்டரடிப்பொடிகள் காலத்தவராகக் கூறுகிறது.

தொண்டை நாட்டில் பக்தி மழை பொழிந்தவர்கள் முதலாழ்வார்கள். சோழநாட்டில் திருமங்கை மன்னன், தொண்டரடிப்பொடியார், திருப்பாணுழ்வார் ஆகியோர் தோன்றி மதப்பிரசாரம் செய்தனர். பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவிகள் ஆகியோர்கள் பாண்டிய நாடு வாழப்பிறந்தவர்கள். சேரநாடுவாழப் பிறந்தவர் குலசேகரப் பெருமாள், இவர் அரச பரம்பரையினர். சேரமான் பெருமாணுயனருக்கு முன்னவர். சேரநாட்டை யாண்ட பெருமாள்களுள் கடைசி அரசர் சேரமான் பெருமாள் நாயனுர். அவருக்கு முன்னவரே

குலசேகரர். ‘தரணிநீத்துத் தவஞ்சார்ந்தான்’ என்று சேக்கிழார் கூறிச் செல்லும் பெரியார் இவ்வாழ்வாரே.

வானாளு மாமதிபோல் வெண்
குடைக்கீழ் மன்னவர் தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும்
செல்வறியேன்

என்று அரசபோகத்தை வெறுத்து குலசேகராழ்வார் கூறுவதும் இதனை ஆதரித்து நிற்கும். இவர்காலத்தில் பாகவதர்களுடைய கூட்டம் அரங்கன் திருமுற்றத்தை அலங்கரித்து விளங்கியதென்றும் அக்கூட்டத்தில்

ஆடிப்பாடி யரங்கவோ வென்
றழைக்கும் தொண்டரடிப்பொடி

ஆழ்வாரும் இருந்தனர் என்றும் இவர் கூறுமாற்றால் விளங்குகிறது. ரங்கனாதனுடைய அடியார்க்கு அடியாராக விளங்குவதையே இவர் பெரும் பாக்கிய மாகக் கருதுகிறார். பாகவதர்தள் மேல் அசூயை கொண்ட இவரது அமைச்சர்கள் இறைவன் திருவா பரணங்கள் சிலவற்றைக் களவு செய்து அப்பழியைப் பாகவதர்கள் மேல் ஏற்றிவிட்டனர். பாகவதர்கள் அத் தகைய பழிச்செயல் புரியார் என்று ஆழ்வார் குடப் பாம்பிற் கையிட்டுச் சூளுறவு செய்து அடியார் பெரு மையை நிலை நாட்டினர் என்பர். எம்பெருமான்

அடிசூடும் அரசை அல்லால்
அரசாக எண்ணேன் மற்றரசு தானே

என்று பகவானுடைய பாதார விந்தங்களைச் சிரமேற் கொள்வதையே மகுடாபிஷேகமாகக் கருதி இவர் தம் வாழ்க்கையைத் துறந்து சென்றார்.

விற்றுவக் கோட்டுப் பதிகத்தில் ஆழ்வார் 'உன் அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே' என்று மனங்கனிந்து பாடுகிருர். திருவேங்கடமென்கிற பொன்மலை மேல் 'ஏதேனுமாவேனே' என்று அவாவுகிருர். இறைவனுடைய சௌலப்யத்தைக் கிருஷ்ணவதாரத்தில் காண்கிருர் குலசேகரர். தேவகி யிழந்த சம்பத்தைப்பாடும் கவிகளில் கண்ணபிரானுடைய பால லீலைகளைக் கவிதையில் குழைத்துப் பாடுகிருர் சேரர் பெருந்தகை.

இராமபிரானிடத்தே மிக்க அன்பு பூண்டவர் குலசேகராழ்வார். இராமாயணக் கதையைப் பத்து பாடல்களில் 'சித்திரகூடப்' பதிகத்தில் பாடுகிருர். திருக்கண்ணபுரத் தெம்பெருமானை ராமனுக பாவித்துத் தாலாட்டுப் பாடல்கள் அருளிச் செய்தார். இராமபிரான் வனம்புக அதனுக் காற்ருது தசரதன் புலம்பிய புலம்பல் தன்னை பாசுர நடையோடு உள்ளத்துணர்ச்சி கடல்மடை திறந்தாற்போல் பெருக்கெடுப்பப் பாடுகிருர்.

ஆழ்வார்களில் கவிக்ரீடம் குலசேகரருக்கே சிறப்பாக உரியதெனலாம். திருமங்கை மன்னன் திருவரங்கத்தை நேரே தரிசித்துப் பாடினுர். ஆனல் குலசேகரரோ அத் திருப்பதியை மனக்கண்ணுல் கண்டு பாடினுர்.

> வன்பெருவானகம் உய்ய, அமரர் உய்ய
> மண்ணுய்ய, மண்ணுலகில் மனிசர் உய்யத்
> துன்பமிகு துயர் அகல, அயர் ஒன்று இல்லாச்
> சுகம் வளர, அகமகிழும் தொண்டர் வாழ

ஸ்ரீரங்கநாதன் தென்திசை நோக்கிப் பள்ளிகொண்டிருப்

பதாக ஆழ்வார் பாடுவது படித்தின் புறத்தக்கதா யுள்ளது. ‘இது பற்றியே ஸ்ரீராமானுஜரும் இவ்வாழ்வாரை ‘தென்னரங்கம் பாடவல்ல சீர்பெருமாள்’ என்று போற்றினர் போலும்.

இவ்வாழ்வாரையும் திவ்ய சூரிசரிதம் திருமங்கை, தொண்டரடிப் பொடி, ஆகியோரோடு சமகாலத்தவராகக் கூறுகின்றது.

நம்மாழ்வாரை அவயவியாகவும் மற்றைய ஆழ்வார்களை அவயமாகவும் முன்னோர் கருதி வந்தனர். எம்பெருமானே நம்மாழ்வாராக அவதாரஞ்செய்தாரென்பது வைஷ்ணவர் கொள்கை. இதர ஆழ்வார்கள் உலக உணர்ச்சியோடிருந்து பிறகு தத்துவஞானம் பெற்றார்கள். நம்மாழ்வார் துளசிபோல் பரிமளத்துடன் பிறந்து இயற்கையிலே ஞானபக்தியுடையவரா யிருந்தாரென்பர். பிறந்ததும் தாய்ப்பால் துறந்து புளியாழ்வாரடியில் அமர்ந்து மௌனராய் பதினாறு ஆண்டுகள் கழித்து சற்சீடனான மதுரகவிகளைக் கண்டவுடன் தான் இவ்வாழ்வார் பேசத் துவக்கினார். இவர் வேதசாரமான நாலு பிரபந்தங்களில் தன்னுடைய கொள்கைகளை வெளியிட்டார். இவற்றை மதுரகவியாழ்வார் இசையோடு பாடிக் கொண்டு நாடெங்கும் அவர் கொள்கைகளைப் பரப்பி வந்தார்.

மதுரகவிகள் பாடியது திவ்யப் பிரபந்தத்தில் ஒரே பதிகம்தான். அது நம்மாழ்வாரை பற்றியது. தமது குருவை பகவானாகஸ்தோத்திரம் செய்கிறார்.

ஸ்ரீதேவு மற்றறியேன் குருகூர்நம்பி
பாவின்னிசைப் பாடித்திரிவனே

பிராம்மணராகிய இவ்வாழ்வார் வேளாளர் குலத்திலே பிறந்த நம்மாழ்வாரை ஞானாசிரியராகக் கொண்டார் என்பது 'நன்மையால் மிக்க நான் மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர்' என்ற பாட்டால் தெரிய வருகிறது. 'எண்திசை அறிய வியம்புகேன் ஒண் தமிழ் சடகோபன் அருளையே' என்று நம்மாழ்வார் தம்மைக் கடாட்சித்ததைக் கூறுகிறார் மதுரகவிகள்.

திராவிட வேதத்தின் தாய் நம்மாழ்வார். அதை மொய்ம்பால் வளர்த்த தாய் இராமானுஜர். கடவுள் என்பது ஞானமலையின் உச்சி. நம்முடைய சொந்த முயற்சியால் அதைக் காண்பதரிது. ஆனால் அக்கடவுள் ஸ்வரூபம் நம்மை ஆகர்ஷிக்கக் காத்துக்கொண்டிருக்கிறது. நாம் நம்முடைய ஆத்மாவை அவனுக்கு சமர்ப்பித்து அவனை பிரபத்தியின் மூலம் அடையலாம். கடவுள் என்ற ஞானமலையின் உச்சியைத் தன்னால் அடைய முடியாது என்று எண்ணும் ஆழ்வார்,

வான மாமலையே, அடியேன் தொழ
வந்தருளே

என்று அக்கடவுளைத் தான் இருக்கும் இடத்துக்கு வந்து அனுக்ரகம் புரியவேண்டுமென்கிறார்.

அவனே அவனும், அவனும், அவனும்
அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே

என்று அவர் நம்மை சமயஞானத்தின் எவரஸ்டு சிகரத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

பிறர் துன்பத்தைத் தம் நெஞ்சிலே அனுபவித்து அவர்களுக்காக மன்றாடும் அருங்குணம் ஆழ்வார்களிடத்தில் அதிகம் காணப்படும். நம்மாழ்வாரோ இதைத் தம் வாழ்க்கை லட்சியமாகக் கொண்டவர். பகவான் மனித ரூபமாக வந்து பிறந்ததே அவனுடைய எல்லையற்ற கருணையைக் காட்டும் என்பது நம்மாழ்வார் கருத்து.

பொய்ந்நின்ற ஞானமும்
பொல்லா வொழுக்கு மழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை யினியாமுறாமை

என்று ஆழ்வார் அருளிச் செய்வது பராநர்த்தம் (பிறர் துன்பம்) நெஞ்சிலே படுகையாலே, நாட்டுக்காக மன்றாடுகிறார்' என்று பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்கிறார். 'நான்' என்று சொல்லவேண்டிய ஆழ்வார் 'யாம்' என்று பிறருக்காகப் பேசுகிறார். இச்சிறந்த பண்பாடே பிற்காலத்தில் இராமனுஜரைப் பிறருக்காக மோட்ச பதவியையும் துறக்கச் செய்தது.

நெஞ்சையும் மக்களையும் நோக்கி ஆழ்வார் தூய மனதோடு இறைவனைத் துதிக்க வேண்டுகிறார்.

தொழுமின் அவனைத் தொழுதால்
வழிநின்று வல்வினை மாள்வித்து
அறிவின்றி ஆக்கம் தருமே.

அப்போது தான் நம்பிக்கைப் பயன் அளிக்கும் என்பது அவர் கருத்து.

வணங்கும் துறைகள் பலபல
ஆக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல
ஆக்கி அவையவை தோறும்

அணங்கும் பலபல வாக்கி
நின் மூர்த்தி பரப்பி வைத்தாய்

உலகத்திலே, வழிபடும் துறைகளைப் பலபடி வகுத்து அவரவரது அறிவுக்கேற்ப கடவுள்களை அவரவர்கள் சிருஷ்டி செய்து கொள்ளச் செய்து இறைவன் அவர வரது சமயங்களில் தனது வடிவத்தைப் பரப்பி வைத் திருக்கிறான் என்கிறார் ஆழ்வார். அன்பர்கள் கற்பித்த தெய்வங்களெல்லாம் அவன் வடிவங்களே.

நம்மாழ்வாருடைய பகவதானுபவம் ஒரு பெரிய சாகரத்திற் கொப்பானது. இவர் இறைவனிடமிருந்து ஞானத்தைப் பிரசாதமாகப் பெற்றார். இறைவன் மாயக் கவியாய் வந்து தன் நெஞ்சிலும் உயிரிலும் கலந்து கொண்டு தன்னைக் கொண்டு தன்னைத்தானே பாடுவித் தான் என்கிறார். தன் வசமிழந்து பக்தி வசப்பட்டுப் பாடியதாக ஆழ்வார் கூறுவது ஞானஉச்சியின் எல்லையை எட்டிப்பிடிக்கிறது.

'வண் தமிழ் நூற்க நோற்றேன்' என்று அடி யார்க்கு இன்ப மழைபொழிய வண் தமிழைக் கற்றுக் கொண்ட தம் பாக்கியத்துக்கு இணையானதொன்றுமில்லை என்கிறார். எனவே 'தத்துவத்தின் முடிவு கண்ட சதுர் மறை புரோகிதனு'ன நம்மாழ்வாருக்கு நம் முன்னோர் வைணவ ஆசாரிய பீடத்தை அளித்ததில் ஆச்சரிய மொன்றுமில்லை.

நம்மாழ்வாருடைய காலம் கி. பி. 5-ம் நூற்றாண் டென்று சிலரும் 8-ம் நூற்றாண்டென்று சிலரும் கூறு வர். திருவரங்கத்தமுதனார் நம்மாழ்வாரை முறை வகுப் பில் இறுதியில் வைக்கிறார். எனவே ஆழ்வார்களில்

காலத்தால் இவர் பிற்பட்டவராவர் என்று சிலர் கூறுவர். இது சம்பிரதாய வழக்குக்குச் சற்று முரண்படுகிறது. குருபரம்பர ப்ரபாவத்தின் ஆசிரியர் பின் பழகிய பெருமாள் ஜீயர் நம்மாழ்வாரையும், மதுர கவிகளையும் இறுதியில் வைத்துக் கூறுவர். ஐந்தாவதாக குலசேகர ஆழ்வாரைக் கூறுமிடத்து 'இங்கே அவதாரக் கிரமம் பார்க்கில் நம்மாழ்வார் திருவவதார வைபவம் சொல்லியிருக்க, ஸ்ரீ குலசேகராழ்வார் திருவவதார வைபவம் சொல்லுகிறது, அவயவ நிரூபணம் பண்ணியே அவயவிஸ்ய நிரூபிக்கவேண்டுமாகையாலே' என்று கூறியிருத்தல் இவர் நம்மாழ்வாரை முறையில் ஐந்தாமவராகக் கொண்டாரெனலாம். திரு K. G. சேஷையர் நம்மாழ்வாரை ஆறும் நூற்றாண்டவராக் கொள்கிறார்.

வரகுண மங்கை என்னும் திருப்பதியைப் பாடும் ஆழ்வார் முதலாவது வரகுணன் காலத்தவர் என்பர். ஆனால் வரகுண மங்கை என்னும் இத் தலத்திற்கு அப்பெயர் கொண்ட தாயாரை யொட்டி யேற்பட்டதென்றார்கள். முதலாம் மாறஞ் சடையன் வேலங்குடி என்னும் கிராமத்தின் பழம் பெயரை நீக்கி ஸ்ரீவரமங்கலம் என்னும் புதுப் பெயரால் மகதப் பிராம்மணனாகிய ஸுஜ்ஜீடபட்டனுக்குத் தானமாக அளித்தானென ஒரு தாமிர சாசனங் கூறுவதாக ஸ்ரீ வெங்கோபராயர் கூறுகிறார். ஸ்ரீ வரமங்கலம் என்ற திருப்பதியைப்பாடும் நம்மாழ்வார் மாறஞ்சடையன் காலமான கி.பி. 769–770-க்கு பிற்பட்டவர் என்பது ராயர் கருத்து. இதனை மறுப்பவர் ஸ்ரீ வரமங்கலநகர் என்று ஆழ்வார் பாடியது வேறு தலத்தைக் குறிக்குமென்பர்.

ஸ்ரீரங்கத்தில் நம்மாழ்வாருடைய பாடல்களை அத்யயன உற்ஸவத்தில் பாடும்படி ஏற்பாடு செய்தார் திருமங்கை மன்னன் என்னும் சம்பிரதாயக் கொள்கை உண்மையானால் நம்மாழ்வார் எட்டாம் நூற்றாண்டவராக அல்லது அதற்கு முற்பட்ட காலத்தவராக வேண்டும். திவ்ய சூரி சரிதம் நம்மாழ்வாரையும் திருமங்கை மன்னன் காலத்தவராகவே கூறுகிறது. எனவே நம்மாழ்வார் எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் எனக் கொள்ளுதல் பொருந்துவதாகும்.

ஆழ்வார் என்ற சொல்லுக்கு 'பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டவர்' என்பது பொருள். இவர்கள் அவதார புருஷர்களாகக் கருதப்பட்டவர்கள். பரம ஞானிகளாய் விளங்கிய ஆழ்வார்களைப் பின்பற்றி அவர்கள் அருளிச் செயல்களை உலகமுய்ய பிரவசனம் செய்த பெரியார்கள் ஆசாரியர் எனப்படுவர். இவ்வாசாரியர்களுக்குள் தலைமை ஸ்தானம் ஸ்ரீமந் நாதமுனிகளுக்குரியது. ஆழ்வாராசாரியர்களைப் பற்றிக் கூறும் நூல்களுள் முதலில் தோன்றியது திவ்ய சூரி சரிதம். இதன் ஆசிரியர் கருடவாகன பண்டிதராவார். அவர் ஸ்ரீ இராமாநுஜர் காலத்தவர். இதற்குப் பிறகு ஸ்ரீ நம்பிள்ளையின் ஆசிபெற்ற பின் பழகிய பெருமாள் ஜீயர் மணிப்பிரவாள நடையில் குருபரம்பரப் பிரபாவம் என்ற நூலைச் செய்தார். 'பிரபந்நாமிருதம்' என்ற பிற்காலத்து நூலும் நமக்கு ஆழ்வாராசாரியர்கள் வரலாறுகளைத் தெரிந்து கொள்ளும் முறையில் பயன்படுவதாகும். நாதமுனிகள் நம்மாழ்வாருடைய சீடராக இருந்தாரென்று ஒரு சாரார் கூறுவர். அக் கருத்துக்கு ஆதாரம் கிடையாது. ஏனெ

னில் பின் பழகிய ஜீயர் நாதமுனிகளைப் பற்றிக் கூறு மிடத்து 'இவ்வாழ்வார்கள் தன்னுடைய ஜோதிக்கெழுந் தருளி நெடுங்காலஞ் சென்றவாறே' நாதமுனிகள் அவ தரித்தவர் என்று தெளிவுபடக் கூறுகிறார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் அவதாரம் கி.பி. 825 ஐ ஒட்டி என்று ப்ரபந்நாமிருதம், கோயிலொழுகு முதலிய நூல் கள் கூறுகின்றன. அவர் கி. பி. 918-ல் பரமபதித்தார் என்றும் அந்நூல்கள் கூறுகின்றன. இக் காலம் வைணவ பரம்பரையை ஆதரிப்பதோடு சரித்திரத்திற்கும் உடன் பட்டு வருகிறது. ஸ்ரீமந் நாதமுனிகள் பரமயோகியராய் திவ்ய தேச யாத்திரைகளைச் செய்து திருக்குடந்தையை அடைந்தார். அங்குள்ள பிராம்மணர்கள், 'ஆராவமுதே' என்ற நம்மாழ்வார் பதிகத்தை ஆரம்பித்து 'ஆயிரத் துள்ளிப் பத்தும்' என்ற கடைசி செய்யுளோடு முடித் தனர். பாட்டின் கருத்துக்களை கேட்டுணர்ந்த நாதமுனி கள் அவ்வாயிரம் பாடல்கள் அவர்களுக்குப் பாடமோ என்று கேட்டார். அப் பத்துப் பாடல்களே தமக்குத் தெரிந்தவை எனக் கூறக் கேட்ட நாத முனிகள் ஸ்ரீ கோசங்களைத் தேடி ஆழ்வார் திருநகரிக்குச் சென்று மதுர கவியாழ்வார் சிஷ்ய பரம்பரையில் வந்த பராங்குச தாசரைக் கண்டு அவர் மூலம் நம்மாழ்வாரை உபாசித்துப் பிரபந்தங்களைப் பெற்றார் என்று கூறப்படு கிறது. எனவே லுப்தமாயிருந்த பிரபந்தங்களை வெளி யிட்டு வைணவத்துக்குச் செய்த பெருந் தொண்டு ஸ்ரீ நாதமுனிகட்கே உரியது. இரண்டாம் பராந்தக சோழ னுடைய (சுந்தர சோழன்) காலத்து செப்பேடொன்று அன்பில் (ஸ்ரீரங்கத்துக் கருகிலுள்ள பாடல்பெற்ற

ஸ்தலம்) கிராமத்தில் கிடைத்தது. அது நான்கு தலை முறையாக அரங்கநாதனது பக்தியில் ஈடுபட்ட அரசாங்க அதிகாரிக்குக் கொடுக்கப்பட்ட நிலதானத்தைக் குறிப்பிடு கிறது. அதில் வரைந்துள்ள சமஸ்கிருத ஸ்லோகம் அவ்வதிகாரியின் குரு ஸ்ரீ நாதர் எனக் குறிப்பிடுகிறது. எனவே செப்பேட்டின் காலமும் நாத முனிகள் காலமும் ஒன்று என்றும், அது குறிப்பிடும் ஸ்ரீ நாதர் ஸ்ரீ நாத முனிகளே எனவும் அறியலாகும்.

வேதம், வேதாந்தம், இதிகாசம், புராணம் ஆகிய வற்றைப் போன்று திவ்வியப் பிரபந்தங்களை பிராமணர் கள் பாராயணஞ் செய்ய வேண்டுமென்று நாத முனிகள் வற்புறுத்தினர். தம்முடைய மருமக்களான கீழையகத் தாழ்வார், மேலையகத்தாழ்வார் ஆகியோரைக் கொண்டு திவ்ய பிரபந்தங்களைத் திவ்ய கானத்திலே யடைத்து இயலுமிசையுமாக்கிப் பாடுவித்தருளினர். உய்யக் கொண்டாரும், மணக்கால் நம்பியும் நாதமுனிகளது சிஷ்யர்களாய் தரிசனம், பிரபந்த பாராயணம் முதலிய வற்றை நடத்தி வந்தனர். மணக்கால் நம்பிகள் நாத முனிகளது பேரன் யாமுனாசாரியரை ஸ்ரீரங்கநாதரது பக்தராக்கினர். அரசாங்க காரியங்களில் ஈடுபட்டிருந்த தால் ஆளவந்தாருக்கு (யாமுனாசாரியர்) வைதிக விஷயங் களைப் பற்றித் தெரிந்துகொள்ள நேரமில்லை. மணக்கால் நம்பி தந்திரமாக ஆளவந்தாரை ஸ்ரீரங்கத்துக்கு அழைத் துச் சென்றார். பாட்டனார் சேமித்து வைத்த புதையல் அங்கே கிடப்பதால் அதை அவரிடம் ஒப்புவிக்கத் தாம் வந்திருப்பதாகக் கூறினர். அப்புதையல் இரண்டாற் றுக்கு நடுவே ஏழு சுற்றுக் கோட்டைக்குள் இருக்கிற

தென்றும், அதை ஒரு பாம்பு சுற்றிக் கொண்டிருக்கிற தென்றும், வெறும் பச்சிலையைக் கிள்ளிப் போட்டு அதைக் கைப்பற்றிவிடலாம் என்றும் கூறினர். நேரே சென்று பார்த்த ஆளவந்தார், அரங்கநாதனை அனந்த சயனத்தில் கண்டு, தம் பாட்டனர் வைத்துச் சென்ற பெருநிதியைக் கைப்பற்றிக் கொண்டார். ராஜபோகத்தில் மூழ்கியிருந்த அவரது கண்கள் திறந்து கொண்டன. உடனே பரம வைஷ்ணவராய்த் துறவு பூண்டு சித்தாந்த பிரசாரம் செய்துகொண்டு 'ஆகமப் பிரமாணம்' என்னும் நூலை அருளிச் செய்தார். மகா வித்துவான்களாகிய பிற சமயத்தாரை வாதில் வென்று விசிஷ்டாத்வைத மதத்தை பலத்த அடிப்படையில் நிறுவினர். நாதமுனிகள் பரம பதித்த பின்னரே ஆளவந்தார் பிறந்தார் என்கிருர்கள். அக்காலம் சுமார் கி. பி. 922-ஐ ஒட்டியிருக்க வேண்டும்.

ஆளவந்தார் தமக்குப் பின் பிரபந்தங்களையும் அவற்றில் சொல்லியுள்ள கொள்கைகளையும் தொடர்ந்து பிரசாரம் செய்யத் தகுதியான ஒருவரைத் தேடிப் பிடிக்க எண்ணினர். நாளடைவில் வயது முதிர, அவருக்கு இக் கவலை அதிகரித்தது. காஞ்சிபுரத்திலிருந்த யாதவப் பிரகாசர் என்ற வேதாந்தி, பிரபந்தக் கொள்கைகளைக் கண்டித்து வருவதாக ஆளவந்தார் அறிந்தார். உபநிஷத் வாக்கியங்களுக்கு யாதவப் பிரகாசர் ஆழ்வார்கள் சித்தாந்தங்களுக்கு விரோதமாகப் பொருள் கூறினரென்றும் அதை அவருடைய சீடர்களுள் ஒருவராகிய ராமானுஜர் மாத்திரம் மறுத்துப் பேசினரென்றும் ஆளவந்தாருக்குத் தகவல் கிடைத்தது. நாளடைவில் அவர்களுக்

குள் இருந்த அபிப்பிராய பேதம் பலப்பட ராமாநுஜர் தம் குருவை விட்டுப் பிரிந்து விட்டதை அறிந்தார் ஆளவந்தார். தமது சீடர்களுள் ஒருவரான பெரியநம்பி களைத் தருவித்து ராமாநுஜரை அங்கே அழைத்து வரும் படி கூறினார். ஆனால் ராமாநுஜர் வருவதற்குள் ஆள வந்தார் பரமபதித்துவிட்டார். ராமாநுஜருக்கு அளவில் லாத துக்கமேற்பட்டது. ஆனால் இறந்தவருக்கு வியாச ருடைய பிரம்ம சூத்திரங்களுக்குப் பிரபந்த கொள்கை களைப் பின்பற்றி வியாக்கியானம் செய்யவேண்டுமென்ற விருப்பமிருந்ததாக ராமாநுஜர் அறிந்தார். மேலும் ஆழ்வார் கோஷ்டியில் நம்மாழ்வாருக்கு விசேஷ பக்தி செய்யப்பட வேண்டுமென்ற விருப்பமும் இருந்ததாக உணர்ந்தார். இந்த விருப்பங்களைப் பூர்த்தி செய்வதாக அனைவர் முன்பும் பிரேதத்தருகில் ராமாநுஜர் பிரதிக்ஞை செய்தார்.

வைஷ்ணவாசாரியர்களில் சிறந்தவரான ஸ்ரீ ராமா நுஜாசாரியரை உலக மேதாவிகளில் ஒருவர் எனலாம். ஆழ்வார்களுடைய கொள்கையை மறுத்த யாதவப் பிரகாசரே பின்னளில் அவற்றை ஒப்புக்கொண்டு ராமா நுஜருடைய சீடரானர். ராமாநுஜர் மூலமாக வைண வம் வட இந்தியாவிற்குப் பரவியது.

ஆளவந்தாருடைய சீடர்களுள் ஒருவராகிய பெரிய நம்பிகளிடத்தில் ராமாநுஜர் சீடராக இருந்து பாடங் கேட்டார். ஆனால் ராமாநுஜர் மனைவியினல் பெரிய நம்பிகள் மனைவி அவமதிக்கப்பட்டதால், பெரியநம்பிகள் ஸ்ரீரங்கம் சென்றுவிட நேர்ந்தது. இதன் விளைவாக

ராமாநுஜர் மனைவியை வெறுத்து துறவை மேற் கொண்டுவிட்டார். இதை அறிந்த கூரத்தாழ்வாரும் முதலியாண்டானும் ராமாநுஜருடைய சிடர்களாகிவிட் டார்கள். ராமானுஜருடைய உறவினரான கோவிந்தப் பட்டர் காளஹஸ்தியில் லிங்க வழிபாடு செய்துவந்தார். ஆனால் ராமாநுஜருடைய மாமன் பெரிய திருமலை நம்பி அவரை வைணவராக்கினார். அப்பெரியார் எம்பார் என்ற பெயருடன் ராமாநுஜருடைய சிடரானார்.

திருவரங்கப் பெருமாள் அரையர் வேண்டுகோளின் பேரில் ராமாநுஜர் ஸ்ரீ ரங்கம் கோயில் நிர்வாகத்தை ஒப்புக் கொண்டார். அக்காலத்தில் யக்ஞமூர்த்தி என்ற பண்டிதர் அத்வைத தத்துவத்தை நாடெங்கும் பிரசாரஞ் செய்து வந்தார். ராமாநுஜர் அவரோடு வாதாடி அவரைத் தோற்கடித்தார். வாதில் தோற்ற யக்ஞ மூர்த்தி ராமாநுஜரது முக்ய சிடராய் அருளாளப் பெரு மாள் எம்பெருமானார் என்ற பெயரோடு ஞானசாரம் பிரமேயசாரம் என்ற இரண்டு நூல்களை அருளிச் செய்தார். பிறகு ராமாநுஜர் திவ்ய தேச யாத்திரை செய்தார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவர் வியாசரின் பிரம்ம சூத்திரத்தின் மீது செய்யப்பட்ட போதாயன விருத்தியை நாடி காஷ்மீரம் சென்றார் எனப்படுகிறது. அங்கே ராமாநுஜருக்குத் தக்க மரியாதைகள் நடந்தன. ஆனால் விருத்தி குறுகிய கால அளவுக்குத்தான் கிடைத் தது. அதைக் கூறத்தாழ்வானும், முதலியாண்டானும் மனப்பாடஞ் செய்து கொண்டனர். அவர்கள் உதவி கொண்டு ராமாநுஜர் ஏறக்குறைய ஸ்ரீ பாஷ்யத்தின் முக்கால் பாகத்தை முடித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் சோழ அரசன் ராமாநுஜரைத் தன் அவைக்களத்துக்கு அழைத்தான். அரசன் மூலம் என்ன தீங்கு வருமோ என்று எண்ணிய கூறத்தாழ்வானும், பெரிய நம்பியும் ராமாநுஜருக்குப் பதில் தாமே சோழ அரசன் சபைக்குச் சென்றார்கள். அரசன் கேள்விக்கு விகடமாக மறுமொழி புகன்றதாலும், ஆள் மாறாட்டம் நேர்ந்ததாலும் சோழ மன்னன் அவர்கள் இருவர் கண்ணையும் அவித்துவிட்டான். பெரிய நம்பி வயோதிகரானபடியால் உடனே இறந்துவிட்டார். கூறத்தாழ்வான் சகிப்புத் தன்மையுடன் பொறுத்துக் கொண்டார். வைணவ சரித்திரத்திலே இத்தகைய தியாகிக்கு பெரிய தானம் உண்டு. குருவுக்காக கண்களை இழக்கத் துணிந்த இத் தியாகத்துக்கு ஈடே கிடையாது.

ராமாநுஜர் மாறுவேடத்துடன் ஹொய்சள நாட்டை அடைந்து தொண்டனூரில் இருந்தார். இவருடைய பெருமுயற்சியால் சமணனாயிருந்த பிட்டிதேவன் என்னும் ஹொய்சள அரசன் ராமாநுஜருடைய சிடனானான். இவ்வரசன் விஷ்ணுவர்த்தனன் என்ற பெயருடன் பல கைங்கர்யங்கள் செய்தான். திருநாராயணபுரம் கோயிலை சகம் 1021-ல் கட்டினான் என்கிறார்கள். சகம் 1039 ல் ஹொய்சாள சாம்ராஜ்யத்தில் பஞ்ச நாராயணர்களை ஸ்தாபிக்க முதலியாண்டான் ஏவப்பட்டார். இவைகளெல்லாம் சமணப் பள்ளிகள் இருந்த இடங்களில் நிறுவப்பட்டன. இந்த சந்தர்ப்பத்தில் கிருமிகண்ட சோழன் இறந்த செய்தி ராமாநுஜருக்குக் கிடைத்தது. மேல் கோட்டையில் கைங்கர்யங்களை நல்ல முறையில் அமைத்துவிட்டு ராமாநுஜர் ஸ்ரீரங்கம் சென்

ளூர். அங்கே அவர் தமது ஸ்ரீ பாஷ்யத்தைச் செய்து முடித்தார். அதன் பிறகு சுமார் பதினொரு ஆண்டுகளே வாழ்ந்திருந்தாரென்கிறார்கள். அவருக்குப் பின்னல் கூறத்தாழ்வாரின் புதல்வர் பராசரபட்டர் ஆசாரிய பதவிக்கு வந்தார். ராமாநுஜர் மண்ணுலகை நீத்த காலம் சகம் 1059 எனப்படுகிறது.

திருக்கோட்டியூர் நம்பி தமக்கு உபதேசித்த மந்திரத்தை ராமாநுஜர் ஆலய கோபுரத்தின்மீது இருந்து கொண்டு அனைவர்க்கும் உபதேசித்தார். பிறர்க்கு சொல்லக்கூடாதென்கிற குரு ஆணையை மீறி நடந்தார். குருவே ராமாநுஜரை நோக்கி இதற்குப் பலன் என்னவென்று கேட்டார். ராமாநுஜரோ, "அடியேனுக்கு நரகம்தான் பிராப்தி" என்றார். அறிந்திருந்தும் அவ்வாறு செய்ததற்குக் காரணம் கேட்டாராம் குரு. சிஷ்யர், 'அடியேன் ஒருவன் நரகம் செல்வேன். ஆனல் எத்தனையோ ஜனங்கள் உய்ந்துபோவார்கள்' என்று கூறி முடித்தாராம். இதைக் கேட்ட குரு அப்படியே ராமாநுஜரை ஆலிங்கனம் செய்து கொண்டு 'அவரோ நீர்' (கீதையை உபதேசித்த கண்ணனோ?) என்று கூறி அன்று முதல் வைணவத்திற்கு 'ராமாநுஜ தரிசனம்' என்று பெயரிட்டாராம். இப்பெருந் தியாகத்தை பரம பரித்யாகம் என்று சொல்லலாம். ஆனல் இது வெறும் அனுதாப உணர்ச்சியால் மட்டும் ஏற்பட்டதன்று. பாவனு சக்தியாலே தம் சொந்த அனுபவத்திற்கு அப்பாற் சென்று மற்றவர் இதயத்தோடு இதயம் வைத்துப் பார்த்து அவர்களுடைய சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டவர் ராமாநுஜர் எனலாம். நம்மாழ்வா

ருடைய அருளிச் செயல்களைப் படித்து மோட்சத்தையும் துறக்கும் ஆத்ம விரத்தை வளர்த்துக் கொண்டார் ராமாநுஜர்.

லட்சியமும் வாழ்க்கையும் ஒன்றென வாழ்ந்தவர் ராமாநுஜர். வைசியரான திருக்கச்சி நம்பிகளையும் தமது குருவாக ஏற்றுக் கொண்டார். அவரைத் தாழ்ந்த குலத்தவர் என்று தம் மனைவி கூறியதால் அவளையே துறந்த லட்சிய புருஷர். இவர் ஹரிஜனங்களைத் தமது குழுவில் சேர்த்துக் கொண்டு ஆலயப் பிரவேசஞ் செய்த பேரறிஞர். இறைவன் பல திரு அவதாரங்கள் எடுத்து பூலோகத்தில் மாந்தர் இடையே பழகின காலத்தும் தெள்ளறிவு பெருத மாந்தர்கள்,

> அண்ணலி ராமா நுசன் வந்து தோன்றிய வப்பொழுதே
> நண்ணரு ஞானம் தலைக் கொண்டு நாரணற் காயினரே.

என்கிருர் அமுதனுர்.

ராமாநுஜர் காலஞ் சென்றதும் கூறத்தாழ்வாரின் புதல்வரான பட்டர் ஆசாரிய ஸ்தானம் வகித்தார். இவர் காலத்தில் வைஷ்ணவக் கொள்கைகளை மறுத்து வேதாந்தியாக பிரசித்திபெற்ற ஒரு பெரியார் இருந்தார். பட்டர் அவரோடு வாதித்து வென்று அவரை ஆழ்வாருடைய அருளிச் செயல்களை ஓதியுணரும்படி பணித்தார். இப் பெரியாரே நஞ்சீயர் எனப்பட்டவர். இவர் நூறு தரம் திருவாய் மொழிக்கு வியாக்யானம் சொல்லி காலட்சேபம் நடத்திஞர் என்கிருர்கள்.

நஞ்சீயருடைய சிஷ்யர் நம்பிள்ளை என்பவர். 'நம்பூர் வரதராஜர்' என்ற பெயரோடிருந்த இவர் குருவால் மிக

வும் அபிமானிக்கப்பட்டதால் நம்பிள்ளை எனப் பெயர் பெற்றார். ஆழ்வாரின் பிரபந்தங்களையும் கொள்கைகளையும் காலட்சேபங்கள் மூலம் பரப்பி வந்தார். வியாக்யான சக்ரவர்த்தியாகிய பெரிய வாச்சான் பிள்ளையும், குருபரம்பரை ஆசிரியரான பின் பழகிய பெருமாள் ஜீயரும் இவருடைய ஞான புத்திரர்களே.

பிள்ளை லோகாசாரியார் ஸ்ரீ வசன பூஷணம் என்ற அரிய நூலைச் செய்தார். இது பூருவாசாரியார்கள் வசனங்கள் நிறைந்து விளங்குகிறது. குரு முகமாக சிஷ்யன் அறிந்துகொண்ட கருத்துக்கள் 'ரகஸ்ய' மெனப்படும். இவருடைய தம்பியான அழகிய மணவாளப் பெருமாள் நம்மாழ்வாரின் இதயத்தை வெளியிடும் நூலொன்று இயற்றினார். இது 'ஆசாரிர ஹ்ருதயம்' என்று புகழ் பெற்றது.

இதே காலத்தில்தான் காஞ்சிபுரத்தில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் என்னும் பிரபல வைணவ ஆசாரியர் தோன்றி பல அரிய நூல்களைச் செய்தார்கள். இவர் பக்தராக மட்டும் அல்லாமல் பெரிய தத்துவ ஞானியாகவும் விளங்கினார். அப்பைய தீக்ஷிதர் என்னும் அத்வைதி இவரை 'கவிதார்க்கிக சிம்மம்' என்று போற்றியிருக்கிறார், இவர் தமிழில் சில பிரபந்தங்களும் வட மொழியில் பல நூல்களும் செய்திருக்கிறார். ராமானுஜருடைய ஸ்ரீ பாஷ்யத்துக்கு அரணாக பல வடமொழி நூல்கள் செய்திருக்கிறார்.

நாதமுனிகள் காலத்திலேயே பிரபந்தங்களைப் பற்றி துரபிப்ராயம் ஏற்பட்டு அவை கொல்லும் பிரபந்தங்கள் என்றும் அவற்றை நெருப்பிலிட்டுக் கொளுத்தவேண்டு

மென்றும் சிலர் கூறினர் எனத் தெரிகிறது. ஏனெனில் அக்காலத்தில் மதம் என்பது வேள்விகளையே குறித்தது. பிராம்மணர்கள் தத்துவ ஆராய்ச்சியே மதமென்றூர்கள். அவர்கள் இயற்றிய நூல்கள் வட மொழியில் இயன்றிருந்தன. ஆகவே பொது ஜனங்களுக்கு அவை அடைத்த கதவாயிருந்தன. ஆழ்வார்கள் தமிழால் கடவுளை அழைத்தார்கள். வேள்வியைவிட அன்புநெறி பெரிதென்றூர்கள். குலத்தைக் காட்டிலும் பக்தியும் குணமும் பெரிதென்றூர்கள். எனவே மக்களிடையே ஆழ்வார்கள் பக்தி மதம் முதலாசாரியர்களால் நிலை நிறுத்தப் பெற்றது.

வேதாந்த தேசிகருக்கும் பிள்ளை லோகாசாரியாருடைய சகோதரரான அழகிய மணவாளப் பெருமாளுக்கும் ஏற்பட்ட சச்சரவுகளால் வைணவம் இரண்டு பிளவு பட்டது. வடமொழி வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் விளங்காத பொருள்கள் திவ்ய பிரபந்தங்கள் மூலம் விளக்கமாயின என்று தேசிகர் ஒப்புக்கொண்டார். ஆனால் அவருடைய சீடர்கள் வட மொழியிலுள்ள பிரமாண நூல்களுக்குப் பிராதான்னியம் அளித்தனர். இவர்களை வடகலையார் என்பர். பிள்ளை லோகாசாரியார் வழியைப் பின்பற்றியவர்கள் பிரபந்தங்களுக்கு ஏற்றங் கொடுத்தனர். இவர்களே தென்கலையார் எனப்படுபவர். கலைச் சண்டை சமயத்தில் புகுந்து கோளாறு ஏற்படுத்தியது.

வைதிக அனுஷ்டானங்களைவிட பக்தியும் பாகவதாபிமானமுமே சிறந்தது என்றூர் பிள்ளை லோகாசாரியார்.

குலத்தால் வேற்றுமை கிடையாதென்பது அவர் கருத்து. இவற்றை அனைத்தையும் உடன்பாடாகக் கொள்ளும் தேசிகர் வைதிக கருமங்களின் அனுஷ்டானம் மிக முக்கிய மானதென்று கருதுகிறார். பிறப்பால் வரும் ஜாதி மரணம் வரை இருக்குமென்றும் பாகவதர்கள் வர்ணாஸ்ரம தர்மத்தை மீறக் கூடாதென்பதும் தேசிகர் அபிப்ராயம். 'அக்ஞர் பிரமிக்கிற வர்ணாஸ்ரமம் வித்யா விருத்தங்கள்' பிணத்தை அலங்கரிப்பது போல் என்று 'ஆசார்ய ஹ்ருதயம்' கூறுவதை வன்மையாக மறுக்கிறார் தேசிகர்.

பிள்ளை லோகாசாரியாருடைய சிஷ்ய பரம்பரையிலே வந்தவர் மணவாள மாமுனிகள். இவரே கடைசி ஆசாரியர் என்பர். 'பொய்யில்லாத மணவாள மாமுனி' என்று இவர் போற்றப் பெற்றார். திருவாய் மொழி திராவிட வேத சாரமென்றும் உபநிஷத்துக்குச் சமான மான தென்பதும் அவர் கொள்கை. வேதாந்த தேசிகரும் 'திரமிட உபநிஷதம்' என்று திருவாய் மொழியை ஒப்புக் கொள்ளுவர். மணவாள மாமுனிகள், தமிழ்ப் பிரபந்தங்களைக் கொண்டு எல்லாரும் சரணாகதி செய்து பேறு பெறலாம் என்று பிரசாரம் செய்தார். ஸ்ரீ வசன பூஷணம், ஆசார்ய ஹ்ருதயம், சப்த காதை ஆகியவற்றிற்கு வியாக்கியானம் செய்து உறுதியான அடிப்படையிலே அவற்றை நிறுவினார்.

..............மணவாள முனி
தோற்றிய பின்னல்லவோ, தமிழ் வேதம் துலங்கியதே'

என்று அடியார் குதுகலமடைந்தனர்.

மூன்றும் பகுதி

சங்க காலத்தில் ஒரு பாரதம் தமிழில் இயற்றப் பெற்ற தென்பர். இதற்குப் பிறகு குறைப்பிரதியாய் ஒரு பாரதம் கிடைத்திருக்கின்றது. இது வெண்பா வினால் பாடப்பெற்றிருப்பதால் 'பாரத வெண்பா' எனப் பெயர் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் பெருந்தேவனார் என்பவர். நூலகத்துப் பருவந்தோறும் திருமால் பால் உள்ள காப்புச் செய்யுட்களால் இவர் வைணவர் எனத் தெரியவருகிறது. இந்நூல் தோன்றிய காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும். இவ்வாசிரியர் தெள்ளா றெறிந்த நந்தி போதவர்மன் காலத்தவர் ஆவர்.

> தேனோங்கு சோலைத் திருவேங்கட மென்றும்
> வானோங்கு சோலை மலை யென்றும்—தானோங்கு
> தென்னரங்கமென்றும் திருவத்திபூரென்றுஞ்
> சொன்னவர்க்கு முண்டோ துயர்.

என்று திருமால் கோயில் கொண்டருளிய முக்கிய திருப் பதிகளை இவர் பாடுகிறார். திருவரங்கத்தைத் 'தானோங்கு தென்னரங்கம்' என்றது திருவரங்கம் என்ற சிறப்பே அதற்குப் போதுமென்பது பற்றி. விசுவரூப தரிசனத்தை வாசுதேவன் தூதில் இவர் மயிர் கூச்செறியப் பாடுகிறார்.

சங்ககாலத்து இராமாயண மொன்றும் தமிழில் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. தொல்காப்பியத்தில் அகத்துறை இலக்கணத்திற்கு இப்பழைய இராமாயணத் திலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டதால் இது உறுதிப் படுகின்றது. ஆனால் கம்பராமாயணம் தான் தமிழிலுள்ள ராமாயணங்களை யெல்லாம் அதன்

பெருமையால் வழக்கொழிந்து நிலைபெற்று அழியா விளக்காய் மிளிர்கிறது.

கம்பரது நூலைப் போலவே அவரது காலத்தைப் பற்றியும் ஆராய்ச்சிகள் பலபடக்கூறுகின்றன. வீரசோழிய உரை ஆசிரியர் காலம் கி. பி. பதினோராம் நூற்றாண்டு. அவர் வீரசோழிய உரையிலே 'கம்பனு ரிடைப் பெருமையுளது' எனக் கூறுவது கம்பர் பதினோராம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பதைத் தெளிவு படுத்தும். சுமார் கி. பி. 1250-ல் வாழ்ந்த பெரிய வாச்சான் பிள்ளை, 'மஞ்சுலாஞ் சோலை' என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' என்ற கம்ப இராமாயண அடியை மேற்கோள் காட்டியுள்ளார். 'எண்ணிய சகாத்தமெண்ணூற்றேழு' என்ற பாடல் பிற்காலத்தது. 'ஆவின் கொடையன்ன சகரர் ஆயிரத்து நூறொழித்து' என்ற பாடலின்படி ராமாயணம் பாடப்பட்டது கி. பி. 978-ஆகும். 'புவிபுகழ் சென்னி பேரமலன்' என்று கம்பனால் குறிக்கப்படும் சோழவரசன் உத்தம சோழன் என்பவன். கவிசக்ரவர்த்தி என்று முதன் முதலில் பட்டம் பெற்றவர் இவரே. கம்பனைத் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப புலவர்கள் ஒன்பது முதல் பனிரண்டாம் நூற்றாண்டுவரை இழுத்துச் சென்றனர். ஜெயங்கொண்டாருக்கும் சேக்கிழாருக்கும் பின்னர் கம்பரைக் கொண்டு செல்லுதல் ஏதோ ஒரு எண்ணங்கொண்டே. இன்னுஞ் சிலர் கம்பரை வாரங்கல் அரசன் காலத்தவரென்றும், ஒட்டக் கூத்தர், புகழேந்தியார் ஆகியோர் காலத்தவரென்றும் பிழைபடக் கூறிச் சென்றனர். அவர்கள கூறியவாறு ராமானுஜர் காலத்

துக்குச் சற்றுப் பிந்தியவனுயின் மகா வைஷ்ணவனுகிய கம்பன் அவரைப் பற்றி ஒருவார்த்தையாயினும் கூறு தொழிந்திரான். மேலும் சோழப்பேரரசின் மகோன்னத காலத்தில் கம்பர் வாழ்ந்திருந்தால் அவ்வரசர்களோ அல்லது கம்பரோ அவர்களைப் பற்றி குறிப்பிடாமலிருக்க முடியாது. சோழ சாம்ராஜ்ய ஸ்தாபன முற்காலத்தில் கம்பர் வாழ்ந்தவர் என்பதே பொருந்துவதாகும்.

எல்லா வற்றையும்விட கம்பர் கடவுட் கொள்கை களைப் பற்றி புலவர்கள் கொண்டுள்ள கருத்தைச் சிந்தித் தால் நெஞ்சு பதறும். கம்பர் பரம வைணவர் என்பது அவரது நூலைப்படிக்கும் எவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். நம்மாழ்வார் பாடல்களின் எதிரொலி யாகப் பலபாடல்கள் அமைந்துள்ளன. கம்பர் வைணவர் அல்லர் என்பதை நிருபிக்கப் பல பாடல்களை கம்ப ருடையது அன்று என்று, கூறமுன்வருவர். ஆனல் ஒரு காண்டத்தில் அல்ல, ஒரு படலத்திலல்ல கம்பனுடைய கடவுட் கொள்கை தவழ்ந்து விளையாடுவது.

அறந்தலை நிறுத்தி வேதம்
அருள் சுரந்தறைந்த நீதித்
திறந் தெரிந்துலகம் பூணச்
செந்நெறி செலுத்தித்தீயோர்
இறந்துக நூறித்தக்கோர்
துடைத்தேக விண்டு
பிறத்தனன் தன் பொற்பாத
மேத்துவார் பிறப்பறுப்பான்

(சுந்த கா. பிணிவீட்டுப் படலம்)

என்று சுந்தரகாண்டம் பிணி வீட்டுப படலத்தில் கம்பன் இறைவன் திருவவதாரத் தத்துவத்தைக் கூறுகிறான்.

> மே லொரு பொருளும் இல்லா
> மெய்ப்பொருள், வில்லும் தாங்கிக்
> கால் தரை தோய நின்று
> கட் புலக்(கு) உற்றதம்மா

என்று சத்தியம் என்னும் பரம்பொருள் ராமன் வடிவாக பரமபதத்தினின்றும் 'கால் தரை தோய அயோத்திக்கு வந்து விட்டது. இப்பாத கமலங்களை

> 'வேதங்கள் அறைகின்ற
> உலகெங்கும் விரிந்தன'

என்று விராதன் துதியிலும்

> தேடுவார் தேட நின்ற
> சேவடி தானுந் தேடி
> நாடுவான் அன்று கண்ட
> நான்முகன் கழி இய நன்னீர்
> ஆடுவார் பாவமைந்தும்
> நீங்கி மேலமரராவார்
> சூடுவார் எய்தும் தன்மை

என்று வீடணனடைக்கலப் படலத்தில் நான்முகனால் கங்கையைக் கொண்டு அலம்பப் பெற்ற திருவடிகளை தன் தலையில் சூட்டிக் கொள்ளும் பேறு பெற்றான் வீடணன் என்றும் கூறுதல் காண்க.

பரம்பொருள் ஏகபராபர வஸ்து என்றால் ஒரே பொருள்தான். சேதன, அசேதனப் பொருள்களில் அந்தரியாமாயிருத்தலால் பலவென்றும் உரைக்கலாம். 'இது அன்று. இது அன்று' என்று பரம்பொருளைத்

தள்ளிவிடவும் இடமுண்டு. இதுதான், இதுதான் என்று' துணிவதற்கும் தெய்வநிலை இடங்கொடுக்கிறது. இன்றே, அதாவது பரம்பொருள் இல்லை என்ற நாத்திகச் சொல்லுக்கும் இடங்கொடுக்கிறது ஆஸ்திகம்.

பகுத்தறிவைக் கொண்டு கடவுள் உண்மையை அறிவிக்க இயலாது. தொட்டும், பட்டும் உணரும் அறிவு கடவுளைக் காண முடியாது. இல்லை என்று கூறுபவர்க்குக் கடவுள் இல்லாமலே செய்து கொள்ளுகிறான். 'உளது' என்று இல்லை என்பதை மறுக்கின்றவர் கூற்றையும் மெய்ப்படுத்துகிறான்,

உளனெனில் உளன் அவனுருவம் இவ்வுருவுகள்
உளனென இலனென இவை குணமுடைமயில்
உளனிரு தகமை யோடு

என்கிறார் நம்மாழ்வார். கம்பர் இந்த கருத்தைத்தான் தமது யுத்த காண்ட காப்புச் செய்யுளில் கூறுகிறார்.

ஒன்றே யென்னின் ஒன்றேயாம்
பல வென்றுரைக்கிற் பலவேயாம்
அன்றே யென்னினன்றேயாம்
ஆமென்றுரைக்கின்றேமே யாம்
இன்றே யென்னி னின்றே யாம்
உளதென்றுரைக்கிற் உளதேயாம்
நன்றே நம்பி குடி வாழ்க்கை
நமக்கிங்கென்னோ பிழைப்பம்மா

கடவுளைப் பற்றித் தத்துவ விசாரம் செய்துகொண்டே போகலாம். எதிரெதிராக உள்ள அவன் இரட்டைத் தன்மைகளை கட்டுரைத்தல் எளிதன்று. 'கோணை பெரிதுடைத் எம் பெம்மானைக் கூறுதலே' என்கிறார்

நம்மாழ்வார். கடவுள் தன்மை இவ்வாறு இருந்தால் அவனை நம்பி வாழ்க்கை நடத்தும் நமது கதி என்ன? கடவுள் இல்லை என்பாரும் ஒரு மதக் கொள்கையரே. நாத்திகத்தில் ஆத்திகம் தொக்கி இருக்கிறது என்பது பொருள். கவிதையும் தத்துவ உணர்ச்சியும் வானை எட்டிப் பிடிக்கிறது.

பாலகாண்ட முதல் காப்புச் செய்யுளில் உலகம் யாவையும் உளவாக்கலும், அவற்றை நிலைபெற வைத்தலும் முடிவில் அவற்றை நீக்கலு மாகிய அளவில்லாத திருவிளையாட்டை யுடையவரான கடவுளைப் பற்றிக் கூறுகிறார் கம்பர்.

பரமபதத்திலிருந்து உலகிற்கெல்லாம் அருள் மழை பொழிந்து ஊனும் உயிரும், உணர்வும்போல் உள்ளும் புறமும் உளனாகிய அப் பரம்பொருள் கூனியும் சிறிய தாயும் செய்த சூழ்ச்சிக்குப் பலியானவன் போல் முடி துறந்து கானும் கடலுங் கடந்து தேவர்கள் இடுக்கண் காத்தான் என்று அவதாரப் பெரு நோக்கத்தைக் கூறுகிறது மற்றொரு காப்புச் செய்யுள்,

வேதம், வேதியர், விரிஞ்சர்
முதலோர் தெரிகிலா
ஆதி தேவர் அவர் எம் அறிவி
னுக்கு அறிவரோ!

வேதங்கள், அந்தணர், பிரமன் ஆகியோர் அறிய இயலாத ஆதி தேவர் 'எம் அறிவினுக்கு அறிவு' என்கிறார் கம்பர். ஆரணிய காண்ட காப்புச் செய்யுளில், கவிஞர்களின் அறிவினுக்கு அறிவாக இருந்து அவ்விறை

உண்மைப் பொருளை உலகுக்கு விளம்புகிறது என்கிறார் கம்பர்.

ஓதி ஓதி உணரும் தோறும்
உணர்ச்சி உதவும்

அதாவது ஓதி ஓதி உணர உணர மேலும் மேலும் உணர்ச்சியை (மெய்யுணர்வை) உதவி அருள் செய்கிறது பரம் பொருள் என்பது கருத்து.

இவ்வுலகம் பஞ்சபூதங்களின் வெறும் பரிணாம வீக்கமாக மட்டும் கருதி பிரமிப்படைய வேண்டியதில்லை. ஆனால் இந்தப் பன்மையை, வேற்றுமையைக் கட்டுப் படுத்தும் ஒருமையான பரம்பொருள் ஒன்றுண்டு. அப்பரம்பொருள் தான்.

'இலங்கையில் பொருதாரன்றே
மறைகளுக்கு இறுதியாவார்'

என்று அவதார தத்துவத்தைக் கம்பர் கூறுகிறார். மனிதனாகப் பிறந்ததனால் திருமால் பரம்பொருள் அல்லர் என்றனர் சைவ வாதியார். ஏனெனில் சிவன் 'பிறவா யாக்கையன்.' ஆனால் உண்மை என்னவெனில் மனிதனாகப்பிறந்த கருணையே திருமாலைப் பரம்பொருளாக்கி விட்டது.

இன்னின்ற நீர்மையினியாமுறாமை உயிரளிப்பான்
என்னின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்

என்று உலக உஜ்ஜீவார்த்தனமாகக் கடவுள் பிறக்கிறா னென்கிறார் ஆழ்வார். இது தன்னிச்சையாலே நடப்பது எனவே,

பிறவர்ப்பிறப்பிலியோயே,
பிறப்பித் தோரிலையே

என்றார் ஆன்றோரும்.

ஆசைபற்றி அறையலுற்றேன் மற்றுஇக்
காசில் கொற்றத்திராமன் கதை.........

என்று தமிழர் பக்தி இயக்கச் சூழ்நிலையில் ராமகதைக் கென்று தன் தாய் மொழியை விளைத்துக் கொண்டான் கம்பன். செவிக்குத் தேனென தன் இஷ்ட தெய்வமான ராகவன் புகழைத் திருத்தும் கருத்துடன் கம்பன் ஆதிகா வியப்போக்கில் மாறுதல் செய்து கொண்டான்.

மழுவாளிக் கன்றளித்த ஐயத்தால்
சிறிதையம் தவிர்ந்தாரும் உளரைய

என்ற விராதன் துதியும்,

எல்லை வலையங்கள் நின்னுழை யென்றந்நாள்
எரியோனைத் தீண்டி எழுவர் எனநின்ற
தொல்லை முதல் முனிவர் சூளுற்ற போதே
தொகை நின்ற ஐயம் துடைத்திலையோ எந்தாய்

என்று சரபங்கர் பிறப்பு நீங்கு படலத்தில் கூறியுள்ளதும் கம்பரது கடவுட் கொள்கையை நன்கு வலியுறுத்தி நிற்கும்.

வான்மீகத்தில் இல்லாத இரணியன் கதையைக் கம்பர் பாடியமை அவருக்கு அச்சிங்கப் பெருமான் பால் இருந்த பேரன்பே யாகும் எனலாம்—கம்பன் என்ற பெயர் கம்பத்தில் தோன்றிய நரசிங்க மூர்த்திக்கு வழங்குவது உண்டு. 'தூணம் பயந்த மாளகர் குழவி' என்று கல்லாடம் கூறுகிறது. நாகபாச படலத்தைப் படித்தால்

கருடன் துதியாகப் பாடியுள்ளவை யனைத்தும் ஓர் பக்தனு லன்றி இப்படி உணர்ச்சியோடு பாடமுடியாது என்பது தெரிய வரும். வேதாந்தக் கருத்துக்கள், தத்துவங்கள் அத்தனையும் கலந்து கலை விருந்தாக தெய்வமணங் கமழ்ந்து விளங்குகின்றன கம்பராமாயணம் என்னும் காப்பியத்திலே.

சடகோபரந்தாதி என்ற நூலும் கம்பரால் இயற்றப் பெற்றதென்பர். இது நம்மாழ்வார்மீது பாடப்பட்டநூல். கம்பன் நம்மாழ்வாரது மொழிப்பொருளே யன்றி மொழி யையும் பலவிடங்களில் ஆண்டுள்ளான் என்று எண்ணும் போது இந்நூல் கம்பரால் இயற்றப்பெற்றிருக்கலாம் என்று துணிய இடமுண்டு.

> தேவற் சிறந்த திருமாற்குத்
> தக்க தெய்வக் கவிஞன்
> பாவிற் சிறந்த திருவாய் மொழி
> பகர் பண்டிதனே
> நாவிற் சிறந்த அம்மாறற்குத்
> தக்க நன்னுவலன்
> பூவிற் சிறந்த வாழ்வான்
> கம்பநாட்டுப் புலமையனே

தேவாதி தேவனுன திருமாலின் வைபவத்தை ஏற்றபடி கவிபாட வல்லவர் சடகோபரே. அச்சடகோபருடைய ஏற்றத்துக்கு ஒவ்வ கவிபாட வல்லவர் கம்பரே என்று சடகோபரந்தாதியின் சிறப்புப் பாயிரம் கூறுகிறது.

செல்வர்க்கே மேன்மேலும் பொருள் சேரும் என்பது வழக்கு. அதற்கு உதாரணமாக எம்பெருமானுக்கு, பேர் ஆயிரம், முடி ஆயிரம், புயம் ஆயிரம் என்றவற்ருேடு

திருவாய் மொழிப்பாசுரங்களும் ஆயிரம் வாய்த்தன என்கிறார் கம்பர். ஆழ்வார் அவதாரம் செய்ததற்கே,

> பண்ணும் தமிழும் தவஞ்செய்தன
> பழநான் மறையு
> மண்ணும் விசும்பும் தவஞ்செய்தன

என்கிறார் கம்பர். சடகோபரந்தாதி புலவரால் மிக்கு போற்றப் பெற்ற பெருநூல். வைணவமதச் சார்புடையவரேனும், எம்மதத்தையுங் குறை கூறாத பண்புடையாளர் கம்பர்.

'நளவெண்பா' என்ற அரிய நூலைத் தமிழில் இயற்றிய புகழேந்திப் புலவர் பரம வைணவராகத் திகழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலம் 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இவருடைய ஊர் செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த பொன் விளைந்த களத்தூர் என்பது. வெண்பா பாடுவதிற் மிகப் புலமை பெற்றிருந்தவராதலின் இவரை, "வெண்பாவிற் புகழேந்தி" என்று புலவர் உலகம் போற்றியது.

இவர் ஆழ்வார்களுள் தலைசிறந்த நம்மாழ்வாருக்குத் தமது பாயிரத்தில் கடவுள் வாழ்த்துக் கூறியுள்ளார்.

> முந்தை மறை நூன் முடியெனலாந் தன் குரு கூர்ச்
> செந்தமிழ் வேதச் சிரமெனலா—நந்தும்
> புழைக் கைக்கும் நேயப் பொதுவர் மகளிற்கு
> அழைக்கைக்கு முன் செல்லடி

என்று திருமாலின் திருவடிகள் குருகூரராகிய நம்மாழ்வாரின் திருவாய் மொழியின் தலைமேலுள்ளது என்று கூறுமாற்றால் இவர் மனப்பான்மை நன்கு புலப்படுவதாகும். கலி தொடர் காண்டத்தில்

நாராயணாவென் றவனடியிற்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்

நளமகாராஜனைக் கலி சேர்ந்தானென்று கூறி, கலி நீங்கு காண்டத்தில்,

மிக்கோன் உவகளத்த மெய்யடியே சார்வாக
புக்கோர் அருவினை போல் போயிற்றே

என்று திருமாலின் திருவடித் தாமரைகளைப் பணிந்தவர்களது துயர் நீங்குமா போலே, நளனுடைய கலி நீங்கி அவன் சுய வடிவு பெற்று விளங்கினான் என்று கூறுமாற்றால் இவர் அவ்வெம்பெருமானுடைய திருவடித் தாமரைகளைப் போற்றி வாழ்ந்த பரம பாகவதர் எனத் துணியலாம்.

எட்டெழுத்தைக் கருத்திற் குறித்திட்டு நித்தம் பரவும்
சிட்டர்க்குத் திருப் பொற் பதத்தைச் சிறக்கத் தரும் அவ்
வட்ட செட்டைப் பணி மெத்தை யத்தற் கிடம் வாரிசப் [பொ
குட்டினத்துக் குலந் தத்தி முத்தீனுங் குறுங்குடியே

என்று விசேடப் பற்றுக் காட்டும் சொற்களை உபயோகித்துக் குறுங்குடித் திருமாலைப் பாடியுள்ளார்.

திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் காஞ்சி மாநகரில்வாழ்ந்தவர். 'திருக் காஞ்சி வாழ் பரிமேலழகன் —வள்ளுவர் நூற்கு வழி காட்டினான் தொண்டை மண்டலமே' என்ற தொண்டை மண்டலச் சதகப் பாடல் இதனை வலியுறுத்துகிறது. 'நீணிலங் கடந்தோன் தாள் தொழு மரபிற் பரிமேலழகன்' என்னும் பரிபாடல் உரை சிறப்புப் பாயிரம் இவர் வைணவ சமயத்தினர் எனக்

கூறுகிறது. இவர் காஞ்சிபுரத்திலுள்ள உலகளந்த பெருமாள் கோயில் அருச்சக மரபிற் றோன்றியவர் என்று கூறுவர். இவ்வுரையாசிரியருக்கு வண் துவரைப் பெருமாள் என்ற பிறிதொரு பெயரும் இருந்ததாகக் கல் வெட்டுக்கள் கூறுகின்றன. இவர் காலம் கி. பி. 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகு மென்பர்.

இறை மாட்சி அவதாரிகையில் 'உலக பாலர் உரு வாய் நின்று உலகங் காத்தலின் இறை என்றார்' என்று எழுதி 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண் டேனே யென்னும்' என்ற பாடலை மேற்கோளாகக் காட்டி யிருக்கிறார். 'பற்றற்ற கண்ணே' என்னுங் குறளுக்கு 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் திருவாய் மொழியையும், 'ஆராவியற்கை' என்னும் குறளுக்கு 'நன்றாய் ஞானங் கடந்து போய் நல்லிந்திரிய மெல்லாம் நீத்து' என்ற திருவாய் மொழியையும் மேற்கோள் காட் டியுள்ளது இவர் திருவாய்மொழியில் நன்கு பயின்றவர் என்பதை யுணர்த்தும். 'தாமரைக் கண்ணானுலகு' என்பதற்கு 'துறந்த யோகிகள் எய்தும் செங்கண்மா லுலகம்' என்று கூறி இந்திரன் உலகு என்பவர் கட்சியை மறுத்துரைத்து, 'அடியளந்தான்' என்பதற் குத் 'தன்னடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்' என்று உருகி உரை கூறுவதும் இவரது சமயப பாங்கை வலியுறுத்து வனவாகும்.

காப்பியக் கவிஞர்களுக்குள்ளே கம்பருக்கு அடுத்த படி புகழ் பெற்றவர் வில்லிபுத்தூராழ்வாரே. சங்க காலத்தில், தமிழில் ஓர் பாரத நூல் இருந்ததாகத் தெரிய

வருகிறது. பிறகு ஒன்பதாம் நூற்றாண்டில் பெருந் தேவனார் ஒரு பாரதம் வெண்பாவில் பாடினார். பிறகு கி. பி. 14-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வில்லிபுத்தூராழ்வார் என்பார் மகாபாரதத்தை தமிழில் இயற்றினார். இவரை இந்நூல் இயற்றுமாறு வேண்டிக் கொண்டவன் கொங்கர் கோமானாகிய வரபதியாட் கொண்டான் என்பவன். இவர் இயற்றிய பாரதம் பல்வேறு சந்தங்களுடன் சொல்லணி, பொருளணிகளோடு இன்புற அமைந்து படிப்போர்க்கு உணர்ச்சியும் மகிழ்ச்சியுந் தரும் இயல்பினதாயுள்ளது. மிகச் சிறு கிராமங்களிலும் இந்நூற் பயிற்சி பரவியிருந்தது என்பதற்குப் பலத்த ஆதாரங்கள் உள்ளன. இவருடைய பாடல்களில் மிகுதியான வடசொற்கள் கலந்து உள்ளன. இருமொழி சொற்களும் கலந்து இவர் பாடல்களுக்கு இனிய ஓசை நயத்தை உண்டு பண்ணின எனலாம்.

முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்
என்னு மாசையால் யானு மீதியம் புதற் கிசைந்தேன்

என்று கூறுவதால் கண்ணபிரானிடம் இவர் கொண்டிருந்த பேரன்பே மகாபாரதத்தைத் தமிழில் இயற்ற இவரைத் தூண்டிற்று என்பது வெள்ளிடை மலையாம்.

ஓராறு பேத சமயங்களுக்கு
உருவாகி நின்ற ஒருவன்
ஈராறு நாம முறை செய்து மண்
கொடிவோர்கள் காணுமிமையோர்

என்று பல்வேறு சமயங்களுக்கும் முதலாக விளங்கும்

திருமாலின் திருநாமச் சின்னத்தை தேவர்கள் நெற்றியில் அணிந்து வழிபடுவார்கள் என்று வில்லிப்புத்தூராழ்வார் கூறுவது இவரது கொள்கையை நன்கு புலப்படுத்தும். திருநாமமிடும் வழக்கத்தைக் கம்பநாடாரும், 'சென்று மீளாக் குறி கோச் சேர்த்திடும் தன் திருநாமத்தைத் தானுஞ் சாத்தியே' என்று தமது ராம நாடகத்தில் கூறுதல் காண்க.

'ஏனமாயிவை யனைத்தையு மருப்பிலேந்தினுனென யாண்டோன்' என்று தம்மை யாட்கொண்ட மூர்த்தி யான திருமாலைச் சூதுபோர் சருக்கத்தில் உளங்கனிந்து பாடுகிறார்.

'சொற்கொண்டு துதித்தெழுந்து துள்ளிநாளும்
தொழுமவரே யெழுபிறவி துவக்கற்றாரே'

என்று திருமாலின் திருவடிகளைத் தொழும் பேறுபெற்ற வர் பிறவித்துயரினின்றும் விடுதலை அடைவார்களென்று கூறுவர்.

பொலியு நாம மறைகள் சொன்ன
பொருள் விளங்கு நாமமுன்
கலியனெங்கள் மங்கையாதி
கண்டு கொண்ட நாமமே.

என்று பத்தாம் போர்ச் சருக்கக் காப்புச் செய்யுளில் திருமங்கை மன்னன் வாள்வலியால் மந்திரம் கொண்ட செய்தியையும், பதினைந்தாம் போர் சருக்கக் காப்புச் செய்யுளில்

சித்த சித்தொடீசனென்று
செப்பகின்ற மூலகைத்

தத்துவத்தின் முடிவு கண்ட
சதுர்மறை புரோகிதன்

என்று நம்மாழ்வாரையும் வில்லிபுத்தூரார் போற்றிச் செல்வதைக் காண்கிறோம். சருக்கந்தோறும் காப்புச் செய்யுள்களில் திருமாலுக்குப் பரத்துவங் கற்பித்து இவர் நூலை இயற்றியுள்ளார். கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், கர்ணன் போர்ச்சருக்கமும் புலவர்களுக்குப் பெருவிருந் தாயமைந்துள்ளன. வில்லிபுத்தூராரும், அருணகிரி யாரும் சமகாலத்தவரென்றும், அருணகிரியாரோடு வாது செய்து அவர் தோற்றாரென்றுங் கூறுவர். ஆனால் அருணகிரியார் வில்லிபுத்தூராருக்கு அரை நூற்றாண்டு பிற்பட்டவர் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. இவர் காலம் கி. பி. 14-ம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர் முருகனருள் பெற்று கவி பாடுந்திறமை பெற்றவர். தேவாரம் பெற்ற தலங்களிலுள்ள குமரக்கோட்டங்கள் அனைத்தையும் பாடியுள்ளார். 'வாக்கிற் கருணகிரி' என்று அறிஞர் களால் பாராட்டப் பெற்றவர். 'ஐயா, அருணகிரி அப்பா உனைப் போல்—மெய்யாக ஓர் சொல் விளம்பியவர் யார்' என்று இவரைப் பற்றித் தாயுமான சுவாமிகள் கூறுவர். இவருடைய பாடல்கள் சந்தமிகுந்து வடசொற்கள் விரவி வருவதொன்றாகும்.

திருப்புகழ் பாடல்களில் அருணகிரியாருக்கு முருகனை 'திருமால் மருகா' என்றழைப்பதில் அலாதி பிரியம். திருமாலின் பரத்வத்தை விளக்கும் பாடல் ஒன்றைத் திருப்புகழில் காண்கிறோம்.

மஙகுலின் புறவாஞய் வாஞ
டன்றரும்பிய காலாய் நீள் கால்
மண்டுறும் பகைநீரு வீரு
வந்திரைந்தெழு நீராய்நீர்சூழ்
அம்பரம் புனைபாராய் பாரேழ்
மண்டலம் புகழ்நீயாய் நாஞய்
உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்டப்பந்திகள் தாமாய் வாஞட
ஒன்றினுங் கடைதோயா மாயோன்

(பாடல் 46)

மேகங்கள் இன்ப முற உலாவும் வாஞகவும், வானத்தினின்றும் வெளிப்படும் காற்ருகவும், வரும் பகைகளை நீருக்கும் தியாகவும், ஒலித்து எழுகின்ற நீராகவும், கடலை யாடையாக உடுத்துள்ள பூமியாகவும், ஏழுலகமும், ஏழு மண்டலமும் புகழும் முருகஞகவும், அருணகிரியாராகவும் மலரில் உறையும் பிரம தேவஞகவும், முருகப்பெருமானுடைய தந்தையான சங்கர ராகவும், அச்சந்தரும் அண்ட கூட்டங்களாகவும், மூலப் பகுதியாகவும் தோய்ந்தும் எதனினும் இறுதியில் தோயாது நிற்கின்ற மாயன் என்று திருமாலை அவர் பரத்வம் தோன்றப் பாடுகிருர். இத்தகைய மஞே நிலையில் அருணகிரியார் பல பாடல்கள் அருளிச் செய்துள்ளார். ஒவ்வொரு திருப்புகழிலும் திருமாலைப் பற்றிய ஒவ்வொரு வரலாற்றை அருணகிரியார் கூறுகிருர்.

திருமுட்டப் பதிகத்திற் அங்கு கோயில் கொண்டருளிய ஆதிவராகப் பெருமாளைப் போற்றுகிருர். வட வேங்கடத்தில் திருமால் கோயில் கொண்டுள்ளதை,

உலகின்ற பச்சை யுமையணன்
வடவேங்கடத்தி லுரைபவன்
உயர் சார்ங்க சக்ரதரன்

என்று பாடுகிறார். சீரங்கத்திற் பள்ளி கொண்டிருக்கும் அரங்கநாதனை ஆறங்கம் வல்லவராய் வேள்வி நடத்தும் அந்தணர்கள் 'ஹரிஹரி கோவிந்த கேசவ' என்னும் திருநாமங்களால் பூசித்து வணங்கினர் என்று கூறுகிறார். (பாட்டு 504)

வானமாமலையை, 'மாமறை முழங்கு ஸ்ரீபுருட மங்கை' என்று சிறப்பித்து அத்தலம் திருமால் கோயில் கொண்டுள்ள ஆழ்வார் பாடல் பெற்றது பற்றி

தாடகை யுரங் கடிந்தொளிர்
மாமுனி மகஞ் சிறந்தொரு
தாழ்வறக் கடந்து தினைசிலை—முறியாவொண்
ஜானகி தனங் கலந்தபின்
ஊரில் மகுடங் கடந்தொரு
தாயர் வசனம் சிறந்தவன்

என்று சிறப்பிக்கிறார். (பாடல் 972)

திருமால் நரசிங்க உருவாய் தூணினின்றும் வெளிப்பட்டு இரணியனைப் பிறந்த வரலாற்றை,

கனக னநகை யிறைலறை தூணிடை
மனித சிங்கமதாய் வரை, பார், திசை
கடல் கலங்கிடவே பொருதே யுகிர்—முனையாலே
கதறவென்று உடல்கீண அவனுருயிர்
உதிரமுஞ் சிதருத அமுதாயுண்ணும் (876)

என்றும் வருணிக்கிறார். முதலை வாய்ப்பட்ட கஜேந்திராழ வானைக் காக்க திருமால் போந்ததை

வாரண மூலமென்ற போதினிவாழி கொண்டு
வாவியின் மாடிடங்கர் பாழ்படவே யெறிந்த (84)

என்று போற்றுகிறார்.

அடவி தனிலுள் உலவைகள் தளிர்விட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளியுயர் பறவைகள் நிலம் விரல் சேரேழ்
தொளைகள் விடுகழை விரல் முறை தடவிய
இசைகள் பலபல தொளிதரு கரு முகில்
சுருதி யுடையவர் நெடியவன் (60)

என்ற கண்ணன் குழலூது சித்திரம் பெரியாழ்வாரின் பாடலின் எதிரொலி போல் உள்ளது. ராமாயணம், பாகவதம், பாரதம் முதலிய நூல்களிலிருந்து பல வரலாறுகளை மிக்க அழகோடு அருணகிரியார் பாடுவதை நோக்கின் அவர் திருமால்பால் கொண்டுள்ள பேரன்பு விளங்கும்.

அரிதாசர் என்பவர் 'இருசமய விளக்கம்' என்னும் நூலின் ஆசிரியர். ஆகமவல்லி, ஆரணவல்லி என்ற இரு பெண்களின் கூற்றில் சைவ, வைணவ சமயக் கொள்கைகளை வைத்து திருமாலின் பரத்வத்தை இவர் விளக்குகிறார். இவர் அரிதை என்ற நகரில் கோயில் கொண்டிருந்த திருமாலுக்குப் பல கைங்கரியங்கள் புரிந்து வந்தார்.

கிரிபோல் விளங்கிக் கிளரும் புயக் கிருட்டிணராயர்
தரைமீது சிங்காத்திரியிற் சயத் தம்ப நாட்ட
வரம் ஆதரவாலளித்தே வட கூவ மேவும்
கருமாமணி வண்ணனை நீடு கருத்துள் வைப்பாம்.

என்று கிருஷ்ண ராயர் சிங்காத்ரி என்ற விடத்து ஜய

ஸ்தம்பம் நாட்டுதற்கு, வட கூவத்திற் கோயில்கொண்ட திருமால் வரமளித்தருளினர் என்று கூறுவர். இச் சிம்மாத்ரி என்பது சிம்மாசலமென்றும், இச் செயதம்பம் கிருஷ்ணதேவராயரால் நாட்டப் பெற்றது என்றுமறிகிறோம். எனவே அரிதாசரும் கி. பி. 16-ம் நூற்றாண்டில் கிருஷ்ணதேவராயரோடு சம காலத்தவர். கிருஷ்ண தேவராயரும் ஸ்ரீ ஆண்டாள் மீது ஆமுக்த மால்யதா என்ற காவியத்தைத் தெலுங்கில் இயற்றிய பரம பாகவதர்.

மாறனலங்காரம் என்ற நூல் நம்மாழ்வாரை நாயகனாகக் கொண்ட அலங்கார சாஸ்திரமாகும். இதனை இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இவர் ஊர் திருக்குருகூர் என்பது. இவர் 16-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். 'குருகா மான்மியம்' என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார்.

கி. பி. 1706 - 7 - ல் இரசை வடமலையப்பப் பிள்ளையென்பவர் ஐயாயிரம் செய்யுள் கொண்ட 'மச்ச புராணம்' என்ற நூலைத் தமிழில் செய்தார்.

> மைப்புயல் வண்ணன் மச்சமாயுரைத்த
> மச்சமாம் புராணத்தைத் தமிழால்
> ....
> செப்பிய விரசை வடமலை மகிபன்

என்ற பாயிரச் செய்யுள் இதற்குச் சான்றாகும். இவரை 'பாடுவன், பாடுவதல்லாற் பாவலர் பாடலுங் கொண்டாடுவன்' என்று போற்றுவர்.

'திவ்ய கவி' என்று புகழ் பெற்ற பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மதுரையை ஆண்ட திருமலை

நாயக்கரின் அவைக் களத்தில் அலுவலாளராயிருந்து வந்தார். இவர் மிகுந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவராய் விளங்கினர். இவர் திருமால்பேரில் எட்டு பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இவை 'அஷ்ட பிரபந்தம்' எனப் பெயர் பெற்று விளங்குகின்றன. 'அஷ்ட பிரபந்தம்' கற்றவன் அரைப் புலவன் என்ற வழக்கு இவர் தமிழ்ப் புலமைக்கு ஒரு சான்றாகும். ஆழ்வார், ஆசாரியர்களுடைய அருளிச் செயல்களின் பொருள்கள் இவர் பாடல்களில் பயின்று வருதல் கழிபேருவகை பயக்கும். இவர் அந்தணர் குலத்தவர். அழகிய மணவாள தாசர் என்னும் சிறப்புப் பெயருடையவர். இவருடைய பக்தியைக் கண்டு வியந்த திருமலை நாயக்கர் இவரை ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பி வைத்து வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தார் எனப்படுகிறது.

இவர் மறந்தும் புற மதந் தொழாதவர் என்பர். திருவானைக்காவிலுள்ள யானை, மதம் பிடித்து துறத்தி வந்தபோது இவர், 'ஆனை துறத்தி வந்தாலும் ஆனைக்கா செல்லேன்' என்ற மன உறுதியோடு இருந்தார் என்று கூறுவர். திருவானைக்கா சிவ சந்நிதியாதலால் இவர் அங்கே அடிவைக்க சம்மதிக்கவில்லை. இவர் காலத்தில் ஸ்ரீரங்கத்தாருக்கும் திருவானைக்காருக்கும் அடிக்கடி மதச் சச்சரவுகள் ஏற்பட்டன. ஐயங்கார் திருமாலையே பரம் பொருளாகக் கருதி வாழ்ந்தவர். எனவே விஷ்ணு பரத்வம் பற்றி இவர் பாடிய பாடல்களை சிலர் சிவ நிந்தனையாகக் கொண்டனர். புலவர் புராணம் பாடியமுருக தாச சுவாமிகள் இதற்குத தகுந்த பதிலளித்துள்ளார்.

சிவனை நிந்தனை செய்தவனே யென
இவனைச் சிற்சில இளஞ்சைவர் ஏசுவர்
அவன்றன் ஆகத்திற் மாதவன் பாதியென்
றுவந்து பாடிய பாக்களும் உள்ளவே.

என்று ஐயங்காருக்கு விரோத மனப்பான்மை இல்லை யெனக் கூறுகிறார் முருகதாச சுவாமிகள்.

ஸ்ரீரங்கநாதன் மீது கலம்பகம், அந்தாதி, மாலை, ஊசல் ஆகிய நான்கு பிரபந்தங்களும், திருவேங்கடமுடையான் மீது மாலை, அந்தாதி ஆகிய இரண்டு பிரபந்தங்களும், அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி ஆகிய எட்டும் சேர்ந்தவையே 'அஷ்ட பிரபந்தம்' எனப்படும். 'திருநறையூர் நம்பி விடு தூது' என்ற பிரபந்தமொன்றும் இவர் இயற்றியுள்ளார்.

மறைப் பாற்கடலைத் திருநாவென்
மந்தரத்தாற் கடைந்து
துறைப்பாற் படுத்தித் தமிழாயிரத்தின்
சுவையாமிர்தம்

பாகவதர்கள் களிக்க அருளிய நம்மாழ்வாரது திருவடிகளே சன்ம விடாய்க்கு நிழலாகும் என்கிறார் ஐயங்கார்.

புயவகுப்பில் அரங்கநாதனுடைய திருத்தோள்கள்,

அருமறை துணிந்த பொருள் முடிவை இன்சொல்
அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பி
அருளிய சடகோபர் சொற்பெற்றுயர்ந்தன

என்று கூறுகிறார் ஐயங்கார். சடகோபருடைய திருவாய்மொழி இறைவனது பிரதாபங்களை கூறியதால் அப்பெரு

மானது புயங்கள் பூரித்து உயர்ந்தன என்கிறார் திவ்ய கவி.

> 'திருமாலடி யாரல்லாதவர் வீடில்லாதவரே'
> 'பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே'
> 'வேரி அரங்கவிமானமும் கோயிலும் மேவித்தொழார்
> பூரியர் அங்கவர் கண்ணிரண்டாவன. புண்ணிரண்டே'

என்றெல்லாம் பொன்னரங்கத்தைப் போற்றுகிறார்.

அகப்பொருட்டுறையில் இவர் பாடிய பாட்டொன்றின் ரசனையோடு இவர் வரலாற்றை முடிப்போம். அரங்கநாதன் மீது அழியாக்காதல் கொண்டாள் ஓர் இளநங்கை. காதலன் அருள் செய்யாதுவிட்டதால் காதலியின் நிலை மிக மோசமாகிவிட்டது. அந்த நிலையை அரங்கனுக்கு எடுத்துரைத்து அருளவேண்டுகிறாள் தோழி. 'துளவ துளவ' என்று கூறிக் கொண்டிருந்த நாயகிக்கு நெடுமூச்செறியலாயிற்று. அவள் சொற்கள் தடைபட்டு விட்டன. தாமரை போன்ற கை கால்கள் சில்லிட்டு விட்டன. கண்ணும் பஞ்சடைந்து விட்டது. இப்பொழுதாவது வந்து இரங்கி அருள்புரியவேண்டுமென்கிறாள் தோழி.

> 'துளவ, துளவ' எனச் சொல்லும் சொற்போச்சே
> அளவில் நெடுமூச்சும் ஆச்சே—முளரிக்
> காங்கால் குளிர்ந்தவே, கண்ணும் பஞ்சாச்சே
> இரங்காய் அரங்கா இனி.

என்பது பாட்டு. இப்பாட்டிற்கு வேறு சந்தர்ப்பப் பொருளுங் கூறுவர். அது பொருந்தாமை உணர்க.

திருமால் அரனை பன்றியுருவெடுத்துத் தேடினான் என்ற சைவர் விவாதத்திற்கு விடையாக,

அண்டமளக்க அடிக்கீழ் ஒடுங்கி உல
குண்டபொழுது உதரத்துள்ளொடுங்கி—துண்டமதி
சூடினன் மாலருளாற் றேன்றினன் ஆங்கவனைத்
தேடினன் மால் என்பது என் '

என்றும், பரந்தாமன் தம்முடைய கண்ணைச் சாத்தி சிவபெருமானைப் பூசித்து சக்ராயுதத்தைப் பெற்றுரென் பதற்கு விடையாக,

சின்ன முத்திரை தரித்து தெக்கணு மூர்த்தியென
இன்னம் அரன் தியானித்திருக்க—முன்னம் அரி
போது ஓர் கண்ணுல் அரனைப் பூசித்தான் என்றுரைப்ப
தேதோ, சிவப்பிராந்தரே.

என்றும் சிவசரபம் நரசிங்க மூர்த்தியை வென்றதென் பதற்கு விடையாக,

பொன்ன னுரங் கீண்டதனுர் பொங்குசின மாறிற்றே
துன்னுசிவ சரபம் சோரவுயிர்—அன்னதனைப்
பற்றி வகிர்ந்த பின்னர்ப் பாழி நரமடங்கல்
உற்ற சினம் தணிந்தது அங்கு.

என்றும் ஐயங்கார் சைவர் திருமாலைக் குறைத்துக் கூறி யுள்ளமைக்கு விடையளித்து, விஷ்ணுவே பரம்பொருள் என்று பல உதாரணங்களுடன் நிருபிக்கிருர்.

தமிழில் பாகவத புராணத்தை இயற்றியவர் சிறந்த வைணவ பக்தராகிய செவ்வைச் சூடுவார் என்பவர். சொல்லழகும், பொருளழகும் ததும்பி மிளிர்கின்ற கம்ப ராமாயணத்தைப் போலவே பாகவத புராணமும் சிறந்து விளங்குகிறது. பெருங்காப்பியத்திற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு முதலிய அமைப்புக்களனைத் தையும் இப்புராணத்தில் காணலாம்.

திருமால் முத்தொழில் புரிதலையும், அவர் சிற்குணத்தவராயிருத்தலையும், கம்பர் தம் ராமாயணத்தின் சிறப்புப் பாயிரத்தில்,

'உலகம் யாவையுந் தாமுள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும்' என்றும்
'சிற்குணத்தவர் தெரி வருநன்னிலை'

என்றும் கூறியுள்ளவாறே, செவ்வைச் சூடுவார் பாகவதத்தின் சிறப்புப் பாயிரத்தில்,

சீர் பூத்த பரஞ்சுடராய் சித்தாகிக் கானலிடை
நீர் பூத்த தென உலக நிறைந் தொளி தன்பால் தோன்ற
ஏர் பூத்த முத்தொழிலும் இனிதியற்றித் தனி நின்ற
கார் பூத்த திருமேனிக் கடவுள் மலரடி நினைவாம்.

என்று திருமாலின் பரத்துவத்தைப் புகழ்கிறார். திருமாலின் பல அவதாரங்களில் நிகழ்ந்த செயல்களுள் பலவற்றையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

இவ்வுலகம் இருபத்து நான்கு தத்துவங்களால் ஆகியது என்றும், இருபத்தைந்தாவது தத்துவம் 'உயிர்' என்றும், இருபத்தாறாவது தத்துவம் 'இறைவன்' என்றும் இவர் வேதாந்தக் கொள்கையை வெளியிடுகிறார். பாசத்தால் கட்டுண்ட உயிர்களிடம் மாயையின் நிகழ்ச்சி தோன்றும். ஆனால் அந்நிகழ்ச்சி இறைவன் பால் தோன்றாது.

இக் கருத்தை விளக்க, புலவர்,

கனவில் காணும் கடுஞ் செயல் பொய்ப்பதும்
புனல் விகாரம் புனல் மதிக் குற்றதும்

நினையின் பொய்ப்பது போல, நிகழ் மாயை சேர்
வினைகளொன்றும விமலனுக் கில்லையால்

என்று சிறந்த உவமைகளால் விளக்கிக் காட்டியுள்ளார்..

கண்ணன் துவாரகையில் உலாவி வரும்போது ஆண்களும் பெண்களும் ஊனக் கண்ணுலும் ஞானக் கண்ணுலும் கண்ணனைக் கண்டு களிக்கும் காட்சியை, 'உள்ளுவர் மனங்கள் தோறும் ஒழிவிலா துரைகின்ருன்' என்றும் காண்பவர் 'எண்ணிலா ஆனந்தமாகி இருக்கின்ருர்கள்' என்று காண்பவர் மனே நிலையை வருணித்துள்ள மனப்பான்மை இன்ப மூட்டுவதாயுள்ளது.

சுமார் நானூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார் என்பவர் திருவேங்கடக் கலம்பகம் என்ற நூலைப் பாடினர். இது திருவேங்கடத்து மாலைப் பற்றி பாடப் பட்ட அரிய நூல்.

பதின்மர் வழங்கு முதிர் தமிழ் மறையுங
கோதிலாக் கிளவி வேதமோர் நான்கும்
வினைவு திருச்செவி யனக புராதன
இரு விபூதிக்கும் ஒரு தனி முதல்வ
ஒப்பிலாத என்னப்ப நிராமய
மலிபெருங கருணை யலை யெறி கடைக்க
ணங்கனை யலர் மேல் மங்கை மணுள.

என்று அப்பெருமானுடைய பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைமைகளின் தன்மையைக் கூறுகிருர்.

முக்கூடல் என்னும் சிவலப்பேரியில் எழுந்தருளியுள்ள அழகர் மீது சுமார் கி. பி. 1680-ஐ ஒட்டி ஒரு

பள்ளுப் பிரபந்தம் பாடப்பட்டுள்ளது. இப்பள்ளுப் பிரபந்தத்தில் பள்ளியர் ஏசலில் திருமால், சிவபிரான் ஆகியோரது திருவிளையாடல்களில் அவரவர்கள் பரத்துவம் தோன்ற கூறப்படுவது காணலாம்,

நாட்டுக்குள் இரந்தும பசிக்
காற்ற மாட்டாமல்—வாரி
நஞ்சையெல்லாம் உண்டானுங்கள்
நாதனல் லோடி
மாட்டுப் பிறகே திரிந்துஞ்
சோற்றுக் கில்லாமல்—வெறும்
மண்ணை யுண்டா னுங்கள் முகில்
வண்ணனல் லோடி.

ஏற ஒரு வாகனமும்
இல்லாமையினுல்—மாட்டில்
ஏறியே திரிந்தானுங்கள்
ஈசனல் லோடி
வீறுசொன்ன தென்ன மாடு
தானுமில்லாமல்—பட்சி
மீதிலேறிக் கொண்டா னுங்கள்
கீதனல் லோடி, 2

இப்பாடல்கள் படித்து இன்புறத்தக்கனவாயுள்ளன. இவற்றோடு இக்கட்டுரையின் முதற் பகுதி முடிவு பெறும்.

Printed by Thompson & Co Private Ltd (Minerva Press)
33 Broadway Madras 1